நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 21 ஜன/பெப்ரவரி 1993 விலை 5/=


HIS MASTER VOICE

HMV

**கேட்டீரோ சேதி ? கிளாலிக்கடலினிலே**
**போட்டேறி வந்தவர்கள் புலிகளாம்-காட்டேறி**
**என வந்து கடற்படையோர் கொன்றொழித்த**
**அனைவருமே ; மக்கள் குரலார்க்கு.**

**.................................ஈழமோகம்**

# "தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவது சரியானது"

## -'லக்திவ' ஆசிரியர் சுனில் மாதவ

சிங்கள அரசாங்கத்திற்கெதிராக தங்களுடைய உரிமைகளைக் கோரி தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவது சரியானது என்று தான் நான் கருதுகிறேன். ஆனால் இந்த ஆயுதப் போராட்டமானது ஒரு இனவாத போக்கை மேற்கொண்டால் பாரதூரமான பிரதிபலனைத்தான் எற்படுத்தும்.

எனவே தான் இந்தப் போராட்டம் நடைபெறுகிற அதேநேரத்தில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் போராட்டத்தைப் பற்றிய ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதுஎமது கடமை என்று நாம் கருதுகிறோம்.

குறிப்பாக சிங்கள -"தமிழ் மக்கள் மத்தியில் ஏன் இந்த யுத்தம் நடைபெறுகிறது? தமிழர்கள் ஏன் யுத்தம் புரிகிறார்கள்? என்பது பற்றிய சரியான விளக்கத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது எமது தலையாய கடமை என்று கருதுகிறோம்.

கூடவே இதற்காக, இந்தப் பிரச்சினை பற்றிய சரியான தகவல்களை, சரியான கண்ணோட்டத்தை சிங்கள மக்களுக்கு வழங்குவதும் சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதும் நமது பாரிய கடமையாக இருக்கிறது என்கிறார் சுனில் மாதவ. அவருடனான நேர்காணல் பக்கம் ஐந்தில் முழுமையாகத் தரப்படுகிறது.

# "யாழ் குடாவில் மட்டும் மூன்று லட்சம் அகதிகள்"

## - யாழ் அரச அதிபர் கே.மாணிக்கவாசகர்

யாழ்ப்பாண குடா நாட்டில் இன்று வாழும் எட்டரை லட்சம் மக்களில் 31,000க்கு மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாகவுள்ளன. இது யாழ் குடாநாட்டின் மொத்த சனத்தொகையில் 1/3 ஆகும். இவர்கள் 233 அகதி முகாம்களிலும் ஏனையோர் ஏனைய உறவினர்கள், நண்பர்களது வீடுகளிலும் தங்கியுள்ளனர். என யாழ்ப்பாண அரச அதிபர் கே.மாணிக்கவாசகர் சரிநிகருக்குத் தெரிவித்தார்.

யாழ் குடாவுக்கு அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மாதமொன்றிக்கு பத்தாயிரம் தொன் தேவை. ஆனால் தற்போது சராசரியாக மூவாயிரம் தொன்களே வந்து சேருகின்றன. ஒருகப்பல் மட்டுமே உணவுப் பொருட்களை கொண்டு வருவதில் தற்போது ஈடுபடுகிறது. முன்னர் மூன்று கப்பல்களூடாகவும் தரையூடாகவும் கொண்டுவரப்பட்டன. தற்போது தரைப்பாதைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. தனியாரும் பொருட்களை எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இருந்த ஒரேயொரு பாதையான கிளாளிப்பாதையும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. கடற்கொந்தளிப்பு வேறு.

தெல்லிப்பழை, தீவுப்பகுதி, பளை, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்தவர்களே பெருமளவு அகதிகளாயுள்ளனர். பளை கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் வருகின்றது. ஆனால் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட தற்போதைய நிலையில் பளைக்கான உணவுப்பொருட்களையும் நாமே விநியோகித்து வருகிறோம். இது தவிர திருமலையைச் சேர்ந்த 8000 குடும்பங்கள் அகதிகளாக யாழ் குடா நாட்டிலேயே தங்கியுள்ளனர்.

உற்பத்தி முயற்சியிலீடுபட்ட பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன. மீன் பிடியை நம்பி வாழ்ந்த 12,000 குடும்பங்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளன. எரிபொருள் தட்டுப்பாடு, உரம் கிருமி நாசினி போன்றவை கிடைக்காததால் ஏறத்தாழ 40-45%மான நிலங்களில் தோட்டச் செய்கை கைவிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகள் ஒழுங்காகச் செயற்பட்டகாலத்திலேயே வைத்தியசாலைகளிலில்லாத மருந்தை பார்மஸிகளில் வாங்கவேண்டியிருக்கும். தற்போதோ வைத்தியசாலைகளிலும் போதிய மருந்தில்லை. பார்மஸிகளை மருந்து எடுத்துவர அனுமதிக்காததால் அங்கும் மருந்துகளில்லை. பெரும்பாலான பார்மஸிகள் மூடப்பட்டுள்ளன.

படையினரின் முற்றுகை காரணமாக மாதகல், இளவாலை, கீரிமலை, அளவெட்டி, தெல்லிப்பழை, விளான் ஆகிய பகுதிகளில் பயிச்செய்கை கைவிடப்பட்டுள்ளது.

கப்பல் போக்குவரத்தின்மை காரணமாக யாழ்ப்பாணத்திற்குச் செல்ல வேண்டிய 1200 தபால் பொதிகள் இங்கு தேங்கி கிடக்கின்றன. அதே போல் அங்கிருந்தும் இங்கு எடுத்துவர வேண்டிய ஏராளமான தபால் பொதிகள் தேங்கிக்கிடக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.




# 'வழியும் தீர்வும்'

கொழும்பு அங்கலிக்கன் திருச்சபை அதிமேற்றிராணியார் வண கென்னத் பெர்ணாண்டோ யாழ்ப்பாணம் போய் வந்தாலும் வந்தார்.

பத்திரிகையாளர்களைக் கூட்டி தான் பிரபாகரனைச் சந்தித்ததை அவர் அறிவித்ததுதான் தாமதம், கொழும்பு அரசியல்வாதிகளின் அறிக்கைகளாலும், மண்ணின் மைந்தர்களின் (இவர்களில் ஒரு சிலர் தமிழர்களாம்!) கடிதங்களாலும் பத்திரிகைகளின் பக்கங்கள் களேபரப்படுகின்றன. தடைசெய்யப்பட்ட பகுதியினூடாக இவர் எப்படி போனார்; இது அரசாங்க சட்டத்தை மீறிய குற்றமில்லையா என்பதில் இருந்து படுகொலையாளர்களான புலிகள் நாட்டை பிடித்து சிங்களவர்களுக்கு இடமில்லாமல் செய்ய நினைப்பதை எப்படி ஏற்றுக்கொண்டு திரும்பினார் என்பது வரை விவாதங்கள் சூடு பறக்கின்றன.

மக்கள் குரலும் தன் பங்கிற்கு பலவீனமுற்ற நிலையில் இருக்கும் புலி தன்னை தயார்படுத்திக் கொள்ள கேட்கும் அவகாசமே இது என வர்ணித்தது.
தெற்கிலங்கை இனவாதிகளுக்கும் கூட இல்லாத ஒரு தீவிரம் மக்கள் குரலுக்கு.

இத்தனைக்கும் வண பிதா தெரிவித்தது இது தான்: தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்கும் விதத்தில் அரசு ஏதாவது நியாயமான மாற்று யோசனையை முன்வைத்தால் அதனைப் பரிசீலிக்கத் தயார் என்று பிரபாகரன் தன்னிடம் தெரிவித்தார் என்பதுதான்.
இதில் ஆத்திரப்பட அப்படி என்னதான் இருக்கிறதோ தெரியவில்லை.
புலிகளை அழிப்பது எமது நோக்கம் இல்லை; பலவீனப்படுத்திய பின் பேசுவதே எமது நோக்கம் என்று முன்பு ஒரு முறை அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.
ஆனால் இப்பொழுது, புலிகள் பலவீனம் அடைந்திருப்பது, அவர்களின் ஆயுதக்கப்பல் பிடிபட்டது, இந்தியா அரசுக்கு சாதகமான நிலைப்பாடு கொண்டிருப்பது என்ற அபிப்பிராயங்களின் அடிப்படையில் பார்க்கும் போது புலிகளை அழித்து விட்டால் நல்லது என்று தோன்றுகிறது போலும் இவர்களுக்கு.
இவர்கள் காலம் காலமாக போட்டு வருகிற தப்புக்கணக்கில் ஒன்று தான் இதுவும்.

சிங்களவர் நாட்டினை தமிழர் உரிமைகள் கோருகிறார்கள்; சின்னஞ்சிறிய எமது நாட்டை பிளவு படுத்தநினைக்கிறார்கள்; சிங்களவர்களை நாடற்றவர்களாக்க நினைக்கிறார்கள்; முஸ்லிம்களை கிழக்கில் இல்லாதொழிக்க முயல்கிறார்கள். (என்னே கரிசனை!);இலங்கையின் கடல் வளத்தில் 2/3இனை விழுங்க நினைக்கிறார்கள் என்று மட்டுமே இனப் பிரச்சினையை புரிந்து வைத்திருக்கிற இவர்களுக்கு இதை விட வேறெப்படி சிந்திக்க முடியும்?

உண்மையில் இவர்கள் சிந்தனையில் ஓடுவது தான் என்ன? பிரபாகரனையும் புலிகளையும் அழித்து விட்டால் தமிழ் மக்களுக்கு எதுவும் கொடுக்கவேண்டியதில்லை:வைக்க வேண்டிய இடத்தில் தமிழர்களை வைத்துவிடலாம் என்பது இவர்களது நினைப்பு.
'வைக்க வேண்டிய இடம்' எது என்பது நம்மவரில் பலருக்கு இன்னமும் புரியவில்லை.
பேச வரமாட்டேன் என்கிறார்கள். வரமாட்டேன் என்கிறார்கள் என்று கத்தியவர்கள் பேசத்தயார் என்றாலும் வேண்டாம் அழித்துவிடு என்கிறார்கள்.
ஆக, தமிழ் மக்களுக்கு இவர்கள் சொல்லுகிற பதில் தான் என்ன? பதில் மிகவும் வெளிப்படையானது. யுத்தம்..... அது ஒன்றுதான் வழி அழிவு.... அது ஒன்று தான் தீர்வு.




சரிநிகர்

இல 06. அலோசாலை

கொழும்பு-03

தொலைபேசி:574047


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே-பாரதி

# மக்கள் குரல்

## எந்த மக்களின் குரல் ?

வருடம் பிறந்த மறுநாள் கிளாலிப் பாதையில் வந்த படகுகள் கடற்படையினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டன. படகிலிருந்தவர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். குமுதினிப்படகுக்குப் பிறகு நடந்த மிகப்பெரிய படகுப் படுகொலை. அரசபடைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலானயுத்தத்தில் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்கிறது கூட்டுப்படை தலைமையகம்.

தடை செய்யப்பட்ட பிரதேசத்தினால் போகிறவர்கள் கொல்லப்படுவதற்கு தாம் பொறுப்பேற்க முடியாது என்பது அரசு சார்பு விளக்கம். அப்படி ஒரு கொலை நடக்கவே இல்லை என்பது பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை.

ஆனால் படகில் வந்தவர்கள் கொல்லப்பட்டது நியாயமே. அவர்கள் புலிகளே தான். வந்தவர்கள் ஒவ்வொருவரும் புலிகள் அல்லது புலிகளின் ஆதரவாளர்கள் என்று வாய் கூசாமல் சொல்ல இவர்கள் யாரும் துணியவில்லை.

துணிந்திருப்பது ''மக்கள் குரல் தான்''

இலங்கை வானொலிக்குள் ஒதுங்கிக் கொண்டு 'மக்கள் குரலை' ஒலிக்கின்றவர்களின் கணக்கீட்டில் செத்தவர்கள், செத்துப்பிழைத்தவர்கள் அனைவரும் புலிகள்.

வழமையாக பாதுகாப்புக்கு வருகின்ற புலிகள் கூட அன்று பாதுகாப்புக்கு வராத நிலையில் வந்து கொலையுண்ட இவர்கள் அனைவரும் புலிகள் என்றால், வடக்கு கிழக்கில் வாழ்கின்ற அனைவரும் புலிகள் தான்.

அப்படி என்றால் மக்கள் குரல் எந்த ''மக்களின் குரல்''என்ற கேள்வி எழுகின்றது. அந்தக் கேள்வி ஒரு புறம் இருக்கட்டும். வடக்கு கிழக்கில் வாழ்கின்றவர்கள் ஒவ்வொருவரும் புலிகள் தான் என்றால், அவர்களுக்கு பிரபாகரன் தலைவராக இருப்பதுதானே நியாயம்?

மக்கள் குரல் ஏன் பிறகு வீணாக வயிறு நோக கத்துகிறது?

ஒருவேளை பிரபாகரனின் பதவிக்கு ஆசைப்படுகிறதோ?

* * *

# அமைச்சரின் அகராதி

கொஞ்ச நாளைக்கு முதல் சைவ மங்கையர் கழகத்தினர் விழாவொன்றில் கலந்து கொண்டு அமைச்சர் தொண்டமான் பேசியிருந்தார். அற்ப சலுகைகளுக்காக மதம் மாறுகின்றவர்களின் நடவடிக்கையால் மனம் பொறுக்காமல் அவர் தனது வேதனையை வெளியிட்டார். அமைச்சரின் அகராதியில் அற்ப சலுகைகள் என்னவென்று எமக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் எமக்குத்தெரிகின்றது.

மந்திரிப்பதவியும் அதன் அதிகாரங்களும் நிச்சயமாக அற்ப சலுகைகள் அல்ல. அதற்காக மலையகத்தொழிலாளர்கள் நலன்களை விற்பதும் துரோகமல்ல.

* * *

# பகிடிக்குச் சொன்னால்....

டிசம்பர் 31 க்குள் ஒரு தீர்வு முன் வைக்கப்பட்டாவிட்டால் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறுவதாக ஒரு தமிழ் கட்சி அறிக்கை விட்டிருந்தது பற்றி இவ் விடத்தில் நாம் குறிப்பிட்டிருந்தோம். இதை எழுதிக் கொண்டிருக்கும் போது தை 18 ம் திகதியாகிவிட்டது தமிழ் மார்கழி மாதமும் முடிந்துவிட்டது. 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற நம்பிக்கையுடன் இந்த அறிவிப்பு பற்றி ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்த்தோம். ஒன்றும் நடக்கவில்லை.

ஒரு வேளை அட்டமியில் பிறந்த இந்த வருடத்தில் நல்ல நாளை கண்டுபிடிப்பது கஷ்ரமாக இருக்கிறதோ என்னவோ?

# எல்லாம் உங்கள் இருப்பில் அர்த்தம் கொள்ளும்

'சரிநிகர் பத்திரிகைக்கு அரசாங்கம் நிதியுதவி செய்கிறது. அதனால் தான் உங்களால் கொழும்பிலிருந்து பத்திரிகை அடிக்கமுடிகிறது என்று இங்கு கூறுகிறார்கள்' என்று வெளிநாட்டிலிருந்து நண்பர் ஒருவர் எழுதியிருந்தார். 'நீங்கள் புலிக்கு வால் பிடிக்கிறியள்' என்று இன்னொருவர் எமக்கு கடிதம் அனுப்பியிருந்தார். இதில் எது நாங்கள் என்று விளங்கிக்கொள்ள எந்தக் கண்ணாடியில் எமது முகத்தை பார்ப்பது என்று தெரியவில்லை. காலத்துக்கும் வசதிக்கும் ஏற்றபடி பத்திரிகைகளில் எழுத்துப் பிழைப்பு நடத்தியவர்கள்.... பிறகு அதைச் சாட்டாக வைத்து அஞ்ஞாத வாசம் செய்பவர்கள் போன்றோருக்கு கொழும்பில் பத்திரிகை நடத்தினால் 'வால்' பிடித்தே ஆக வேண்டும் என்ற பள்ளிக் கணக்குக்கு மேல் தெரியாமல் இருப்பது ஆச்சரியமில்லைத்தான். ஊகங்கள் நல்லவை தான். ஆனால் உண்மைகளைப் பொருத்தி ஊகிப்பதற்குப் பதில் தம்மை வைத்தே ஊகித்துப் பழகியவர்களின் முன்னால் நாம் எதைத்தான் செய்ய. எப்போதோ படித்த ஒரு கவிதைவரியை 'பதிலாக சொல்லலாம்.

எல்லாம் உங்கள் இருப்பில்
அர்த்தம் கொள்ளும்'

* * *

# இந்த மிரட்டலுக்கு என்ன காரணம்?

இடம்:காலிமுகத்திடல்
நேரம்:மாலை 5 1/2 மணி

நாங்கள் போய் அமர்ந்த போது, எம்மிலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் ஒரு இளம்சோடி அமர்ந்திருப்பதை கவனித்தோம். அவர்கள் ரொம்பவும் அன்னியோன்னியமாக பேசிக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் இளைஞன், காதலியின் மடியில் படுத்திருக்க அவர்கள் உரையாடல் தொடர்ந்தது.

காலிமுகத்திடலுக்கோ எமக்கோ இது புதிய காட்சி அல்ல. எமது பேச்சுச் சுவாரசியத்தில் இதை நாம் மறந்துவிட்டோம். சிறிது நேரத்தின் பின் அதட்டலான ஓர் குரல் கேட்கவே திரும்பிப் பார்த்தோம்.

காக்கிச்சட்டை அணிந்த இருவர் நின்றிருந்தார்கள். அவர்களின் முன்னால் அந்த இளம்சோடி கூனிக்குறுகி நின்றிருந்தது. பொலிஸ்காரன் கேட்கிறான். சிங்கள மொழியில் அற்பர்களை நோக்கி மட்டுமே எறிகிற வார்த்தைகள்.

'நீ யார், இவள் யார், அடையாள அட்டை எங்கே'

மிரட்டல் சிறிது நேரம் நீடித்தது. அவர்களுக்கு பதில் சொல்ல முடியவில்லை. இலங்கை அரசாங்கம் திடீரென்று காலிமுகத்திடலில் காதலர்கள் இருக்கக் கூடாது என்று சட்டம் போட்டு விட்டதாக நினைத்தார்களோ என்னவோ அஞ்சி ஒடுங்கிப்போய் நின்றார்கள்.

விசாரணையின் பின் பொலிஸுக்கு என்ன குணம் வந்ததோ அதே மிடுக்குடன் திரும்பிப் போனார்கள். திகைத்துப் போன இளைஞன், அப்படியே நின்றிருக்க, காதலி குமுறிக்குமுறி அழத் தொடங்கினாள். அவளைத் தேற்ற முயன்று தோற்ற இளைஞன் கையைப்பிடித்து நடத்திச்சென்றான் ......

அவர்களின் அன்றைய மாலையை வீணாக்கிய பொலிஸ்காரர்கள் போய்விட்டார்கள். மாலை நேரத்தில் சந்தோசமாக பொழுதைக்கழிக்க வந்தவர்களை மிரட்டிவிட்டுச் சென்ற அவர்களுக்கு இது புரியப் போகிறதா என்றார் எங்களில் ஒருவர். இந்த மிரட்டலுக்கு காரணம் என்ன?
வெறும் அதிகார வெறியா?
அல்லது அந்தச் சோடி தமிழ் சோடி என்பதா?
எது?

* * *

பகலின் கொடுமையில்
கசங்கி நொந்த உடலை
இரவின் ஆக்கிரமிப்பில்
துயில வைக்கும் வேளை
நித்திரையற்றுப் புரளும்
மனைவியின்
வேதனை விசும்பல்களை மீறி
குழந்தைகளின்
கிறீச்சிட்ட அழுகையைச் சுமந்து
சுற்றிச் சுற்றி காதில் மோதி
கொடுமைப்படுத்தும் காற்று

அடிவயிற்றிலிருந்து பீறிட்டெழும்
பசியின் உக்கிரம்
நெஞ்சைத் தணலாய்ப் பொசுக்க
ஏதோ இயலாமையில் எழுந்த கோபம்
நித்திரையற்ற கண்களை
இன்னும் சிவப்பாக்கியது



இ
ர
வு

படுக்கையை உதறி வெளிவந்த போது
நிலவு சட்டென்று முகிலுள்
மறைந்தது
''நாங்கள் என்ன செய்வோம்''
என்பது மாதிரி
மொட்டை மரங்களின்
கைவிரிப்பு
தொலைதூரம் வரை நீண்டது
வரண்ட காற்று முகத்தில்
மோதிப் புழுங்க வைத்தது

ஏதாவது சூனியத்தில் நின்று
உரத்து அலற மாட்டோமா
என்கிற ஆத்திரமும் கூடவே
இராப்பறவையின் கீனமான
அலறலும்
செவிப்பறையைக் குடைந்தன

இயலாமையை மீறிய பசியால்
கால்கள் தள்ளாடும் வேளை
மனைவியின் விசும்பலும்
குழந்தைகளின் அழுகையும்
கிணற்றுக்குள் இருந்து வருமாற் போல்
நீண்டு கொண்டே போயிற்று.
\-
ஆகர்ஷ்யா

# ஒரு பறவையின் அகால மரணம்

ரவீந்திர கோயே
(பங்களாதேஷ்)

எனது இரவுகள் அர்த்தமற்றதாய்த் தோன்றுகின்றன
ஒரு தோட்டத்தில் பூக்கள், வானத்தில் விழித்திருக்கின்றன தாரகைகள்
பேசிக் கொண்டே தூக்கத்தில் ஆழ்கையில்
எனது இதயம் நடுங்குகிறது.

கிழிந்த நட்சத்திரம் போல்
இந்த வாழ்க்கை எப்போது மங்கி மறையும்
என்று நான் சிந்திக்கிறேன்.

ஈட்டிகள் மெல்ல மெல்ல ஓசையின்றி நெருங்குகின்றன
யாருக்குத் தெரியும் எப்போது காட்டுப்பூனை பாயும் என்று ?
குருவிகளை விடப் பலவீனமான மனிதர்கள்
எப்போது நுரைபோல ஊதி எறியப்படுவர் என்று
உருகும் பனிப்பாறையின் மீது அல்லது எரிமலை கக்கும்
தீக் குழம்பின் மீது

கடவுளே, சுதந்திரத்தைப் போல் பொக்கிஷமாய்
நான் காக்கும் இந்த இரவுகளிலே
என்னை உறங்க விடு, எனது கனவுகளில்
என்னை மறந்து



வானத்திலிருந்து நிலவின் முகத்தை துடைத்து எறிந்து விடாதே
பச்சை மரத்திலிருந்து பறவைகளை விரட்டி விடாதே
ஒரு குழந்தையின் அகால மரணத்தை நான்
தாங்கிக் கொள்ள மாட்டேன்

ஒரு பறவையின் அகால மரணத்தை

தமிழில் : வ.கீதா எஸ். வி. ராஜதுரை

நன்றி - நூலகத்திட்டம்



# எழுந்து வருகிற மலையகத் தேசிய எழுச்சி

மலையகன்

மலையகத்தில் மீண்டும் இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. மலையகத்தமிழர் என்பதற்காகவே தோட்டங்கள் தோறும் மலையக இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொண்டவர்களால் கூட இதிலிருந்து தப்பிவிட முடியவில்லை. கொழும்பு நகரில் பணிபுரிகின்ற இளைஞர்கள் விடுமுறை தினங்களில் தங்கள் வீடுகளுக்கு செல்கின்ற போது கைது செய்யப்படுகின்றார்கள். திருமணச்சடங்குகள், மரணச்சடங்குகள் என்பவற்றிக்காக செல்லும் உறவினர்களும் கைது செய்யப்படுகின்றார்கள். ஏற்கனவே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்கள் விடுதலை செய்யப்படாத நிலையில் இப்போது புதியவர்களும் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள்.

கைது ஒருபுறமிருக்க தற்போது இனவாதம் அங்கு புதிய வகைகளில் எழுச்சி பெறத் தொடங்கியுள்ளது. அதாவது மலையக நிலங்களிலிருந்து மலையக மக்களை அப்புறப்படுத்துவதே இப் புதிய எழுச்சி.யாகும். குடியேற்றங்களினுடாகவும் பயிர்ச் செய்கை நிலங்களிலிருந்து வெளியேற்றுதல் என்பவற்றினூடாகவும் இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் குடியேற்றம் என்கின்ற அம்சம் சுதந்திரம் அடைந்த ஆரம்ப காலங்களிலிருந்துஏற்பட்டதாயினும் இன்றே அது நிறுவன வடிவம் எடுக்கத்தொடங்கியுள்ளது. 1946 ம் ஆண்டு உருளவள்ளித் தோட்டத்திலிருந்து 400 க்கு மேற்பட்ட மலையக மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதிலிருந்து அவர்களுக்கெதிரான நிலச்சூறையாடல் ஆரம்பித்தது. 1970 ம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசினால் கொண்டுவரப்பட்ட தோட்டங்கள் தேசிய மயமாக்கத் திட்டத்தின் கீழ். இந்தியப் பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்தவர்கள் தோட்டங்களிலிருந்து கலைக்கப்பட்டனர். தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட நட்சா திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளிலிருந்து மலையக மக்கள் விரட்டி அடிக்கப்பட்டு அவ்விடங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். இதற்கு எதிரான போராட்டத்திலேயே டெவன் தோட்டத்தில் சிவனு-லட்சுமணன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலமும் அதனோடு இணைந்த கொத்மலைத்திட்டத்தின் மூலமும் மலையகமக்களின் வாழ்விடங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.திஸ்பனை சங்கிலிப்பாலம், மாவெல, அட்டபாகை, சங்குவாரி கீழ்ப்பிரிவு, கெட்டருலா, உலுகல் ஓயா, கடதொர போன்ற இடங்களே இவ்வாறான குடியேற்றங்களாகும்.

இதன் தொடர்ச்சியாகவே அண்மையில் புசல்லாவைப் பிரதேசத்திலுள்ள றொத்ஸ்ச்சைல்ட் தோட்டத்தில் குடியேற்ற முயற்சி நடைபெற்றுள்ளது. தொழிலாளர்களின் கடுமையான எதிர்ப்பினால் அம்முயற்சி தற்காலிகமாக கைவிடப்பட்டதாயினும் அபாயம் நீங்கிவிடவில்லை. இந் நிலச்சூறையாடல்கள் திட்டமிட்ட குடியேற்றங்களினூடாகவும், சட்டவிரோதக் குடியேற்றங்களினுடாகவும், நீர்ப்பாசனத்திட்டங்களினூடாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

அண்மைக்காலமாக பயிர்ச் செய்கை நிலங்களில் இருந்து வெளியேறுதல் என்ற செயற்பாட்டினூடாகவும் நிலச் சூறையாடல் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. பண்டாரவளை, ஹஸ்துமுல்லை, வெலிமடை போன்ற இடங்களில் 50 வருடங்களாக பயிர் செய்த இடங்களில் இருந்து விரட்டுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இவ்விடங்களில் தமிழரும், சிங்களவரும் பயிரிட்டராயினும் தமிழர்கள் மட்டுமே விரட்டப்படுகின்றனர்.

## நாடுகடத்தும் சதி

இதைவிட இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்தவர்களை விட மிகுதி அனைவரும் இலங்கைப் பிரஜைகளாகவே கொள்ளப்படல் வேண்டும் என்று அரசு அறிவித்த பின்னரும் பல அரச நிறுவனங்களில் பிரஜாவுரிமை சான்றிதழ் சத்தியக் கடதாசி என்பன கோரப்படுகின்றன. இப் பாகுபாடு தொடர்பில் திட்டவட்டமான விளக்கத்தை கூறுவதற்கு அரசும் இதுவரை முன்வந்ததாக தெரியவில்லை. புதிய வாக்காளரை பதிகின்ற செயற்பாடு நடை பெற்ற போது ஏற்கனவே வாக்களித்தவர்களிடம் கூட பிரஜாவுரிமைச் சான்றிதழ் கேட்கப்பட்டது.

மேலும் இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்த ஒரு லட்சத்து அறுபதினாயிரம் பேரை பலவந்தமாக நாடு கடத்தும் திட்டமும் திரைமறைவாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்தவர்கள் இறந்து விட்டார்கள். அவர்களது அடுத்த தலைமுறையினரே தற்போது இங்கு வாழ்கின்றார்கள். அவர்களுக்கு இந்தியா செல்ல விருப்பமில்லாமல் இருப்பதால் (இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றிருந்தும், 1983வன் செயல்கள் காரணமாக இந்தியாவுக்குச் சென்று குடியேறியவர்களுக்கு பதிலீடாக வேணும்) இவர்களுக்கு இலங்கைப்பிரியாவுரிமை கொடுக்கும்படி இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் கூட அரசிடம் கோரியது. ஆயினும் அரசு அதற்கு இன்று வரை செவிசாய்க்கவில்லை. இக் கோரிக்கையை சாட்டாக வைத்துக் கொண்டு இனக்கலவரத்தைத் தூண்டும் கைங்கரியத்தில் சிறீலங்கா சுதந்திக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் இந்தியாப்பிரஜாவுரிமை , பெற்றவர்களை இந்தியாவுக்கு அனுப்பினால் இலட்சக்கணக்கான ரூபாய்களை மீதப்படுத்தலாம் என பாராளுமன்றத்தில் பேசி உள்ளனர். இங்குள்ள மலையகத் தொழிலாளர்கள் அரச பணத்தில் அல்ல. தமது உழைப்பில் தான் வாழ்கின்றார்கள் என்பது உழைப்பைப்பற்றி புரிந்து கொள்ள முடியாத எம்.பிக்களுக்கு எங்கே விளங்கப் போகின்றது?

## பாரபட்சம்

மேற்கூறியவைகளை விட கல்வியில் பாரபட்சம் வேலைவாய்ப்பில் பாரபட்சம், திட்டமிட்ட வன்முறைகள் என்பன[...] மலையகத் தமிழர்களுக்கு எதிரா[...] மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிலாளர் என்ற வகையில் தனி[...]ர் மயமாக்கத்தினூடாக ஆட்கள் [...]றைப்பு, வேலை கூடுதல், வாழ்க்கை[...]செலவுப்புள்ளி வெட்டு என்பன[...] மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தொழிலாளர்கள் என்ற முறையிலான சுரண்டல் 'ஒடுக்குமுறை என்ற போதிலும் பணிபுரிபவர்களில் பெரும்பான்மையோர் மலையகத்தமிழர்களாக உள்ளமையினாலும் பெருந் தோட்டத்துறையில் மட்டும் இவை அமுல் செய்யப்படுவதாலும், இவற்றைக் கூட ஒரு வகை இனரீதியான ஒடுக்குமுறை என்றே கொள்ளப்பட வேண்டும்.

## மலையகத்தேசியம்

மலையகத் தமிழர் என்பதற்காக மேற்கொள்ளப்படும் இவ் ஒடுக்குமுறைகளை பாராளுமன்றத்திற்கு ஆட்களைத் தெரிவு செய்வதனாலோ மாகாண சபை உள்ளுராட்சி சபைகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதனாலோ தீர்க்க முடியாது என்பதை இன்று புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர். மலையக மக்கள் சொந்தமாக வாழ்கின்ற பிரதேசங்களில் அவர்களுக்கேயான சொந்த நிர்வாக அதிகாரப் பிரிவினை ஏற்படுத்துவதே இதைச் சரி செய்யவுள்ள வழி என்ற புதிய சிந்தனை வெளிப்பட்டு வருகின்றது. ஒரு வகையில் இக் கோரிக்கை நியாயமானதும் தவிர்க்க முடியாததுமாகும். ஆனால் இக்கோரிக்கையை முன்னெடுத்துப் போராடும் வலிமை துரதிர்ஷ்டவசமாக இன்றுள்ள எந்தக் கட்சிக்கோ, தொழிற் சங்க அமைப்புக்கோ கிடையாது. அது ஒரு புதிய வகையான மலையகத் தேசிய இயக்கம் ஒன்றின் மூலமே சாத்தியமாகும். இன்றைய வரலாறும், வரலாற்றிலிருந்து எதையும் கற்றுக் கொள்ள

............................15

# வட - கிழக்கு பிரிப்பு : குருதிப்புனலில் புது வரலாறோ?

இலங்கையின் புதிய அரசியலமைப்புச் சட்டமொன்றை உருவாக்குவதற்கு பிரித்தானிய ஏகாதிபத்தியம், 20 களின் பிற்பகுதியில் டொனமூர் ஆணைக்குழுவை நியமித்தது. அவ் ஆணைக்குழுவிற்கு கண்டி இராச்சியத்தில் பிரதானிகளாக இருந்த குடும்பங்களை சேர்ந்த மலையகச் சிங்களத் தலைவர்களின் அமைப்பான கண்டி தேசிய அசெம்பிளி ஒரு விண்ணப்பத்தை வழங்கியது. அதன்படி இலங்கை சமஸ்டி முறையிலமைந்த மூன்று மாநிலங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமெனவும்; மலையகச் சிங்களவர்க்கு பழைய கண்டி இராச்சியத்துக்குரிய மத்திய ஊவா, சப்பிரகமுவ மாகாணப் பிரதேசங்களை கொண்ட ஒரு மாநிலமும், கீழ் நாட்டுச் சிங்களவர்க்கு தென்னிலங்கை தொடக்கம் வடமேல் பகுதிவரையுள்ள கரையோரப் பிரதேசங்களைக் கொண்ட ஒரு மாநிலமும், தமிழர்களுக்கு இலங்கையின் வடகிழக்குப் பிரதேசங்கள் ஒரு மாநிலமாகவும் சமஷ்டி முறை வழங்கப்பட வேண்டுமெனவும், கண்டியின் சிங்களப் பிரதானிகள் ஆங்கில அரசை தமது விண்ணப்பத்தில் வலியுறுத்தினர். பிற்காலத்தில் பிரதமராக வந்த பண்டாரநாயக்கா இதன் பிரதான ஆதரவாளராக விளங்கினார். சிங்கள பௌத்தப் பேரின வாதத்தின் ஊற்றுமூலம் எனச் சிலரால் கருதப்படும் கண்டிச் சிங்களவரின் பாரம்பரியத்தலைமை கூட, ஒரு கட்டத்தில் வடகிழக்கு தமிழர் தாய்மண், அது அவர்களின் சொந்தமண் என ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இன்றோ, சில தமிழ் எட்டப்பர்களுக்கு வடக்கு வேறு கிழக்கு வேறு என்ற எண்ணம் தோன்றி உள்ளது. நாற்பது ஆண்டுகள் நடைபெற்ற போராட்டங்களும், சிந்திய இரத்தமும் பேசிய பேச்சுகளும் சோரம் போகத் தீர்மானித்து விட்டவர்களுக்கு ஒரு மனச்சாட்சிப் பிரச்சினையாக அமையப் போவதில்லை என்பது இன்று வெளிப்படை. முரட்டுச் சிங்கள இனவாத வெறியர்களுக்குச் மண்டியிட்டுச் சலாம் போடவேண்டிய நிர்ப்பந்தங் காரணமாக கிழக்கு தனியாக இருந்தாலென்ன என்று கிசு கிசுப்பவர்கள் ஒரு சிலர். தமிழரின் உரிமைப் போராட்டம் என்றால் வீசைக்கு என்ன விலை என்று கேட்கும், அண்மையில் கிளம்பிய சில திடீர் இயக்கத்தலைமைகள், தம் அரசியல் விபச்சாரத்திற்கு நியாயம் தேடுவதற்கு புதியதோர் தந்திரோபாயத்தை கையாளுகின்றனர். கிழக்கு மாகாணம் தனியாகப் பிரிய வேண்டும் என்பது கிழக்கு வாழ் மக்களின் ஏகோபித்த கருத்து என்றும், தாம் அதனையே பிரதிபலிக்கிறோம் என்றும் கொழும்பில் வந்து ஏனைய தமிழ்த் தலைமைகளின் காதில் பூ வைக்கிறார்கள்.

1992 இன் பிற்பகுதியில் சிங்கள அரசு ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொண்டது. தமிழர்தாயகமான வடக்கையும், கிழக்கையும் துண்டாடவும் கிழக்கில் சிங்கள மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் எட்டப்பன் குணம் கொண்ட தமிழ் தலைமைகளை வெற்றிகரமாக பயன்படுத்தலாம் என்பதை அரசு இன்று அனுபவரீதியாக உணர்ந்துள்ளது. எனவே தான் கிழக்கை தனியாக பிரிப்பது'தமிழர்கள் மத்தியில் இருந்து உருவாகும் ஒரு பலமான கோசமே என்று இன்று அரசும், சிங்கள பேரின வாதிகளும் பிரச்சாரம் செய்ய முற்பட்டுள்ளனர். கிழக்கு மாகாண மக்களுக்குத் தனித்துவமான கலாசாரம் உண்டு. அவர்கள் வட மாகாணத் தமிழரோடு சேர்ந்து வாழ விரும்பவில்லை என்று அண்மையில் பாராளுமன்றத்தில் துணைச் சபாநாயகர் காமினி பொன்சேகா பேசியிருக்கிறார். அதே காலகட்டத்தில் கொழும்பில் தமிழ் கட்சிகள் மத்தியில் நடைபெற்ற கூட்டமொன்றில், குட்டிமணி, தங்கதுரை பாரம்பரியம் என்று ஒரு காலத்தில் கூறிய கிழக்கு மாகாணத் திடீர்த் தலைவர் ஒருவர், இதே பாணியில் பேசியிருக்கிறார்.

தமிழர் தாயகத்தைத் துண்டாடுவதற்கு, சோரம் போகும் தமிழ்த் தலைமைகளைப் பயன்படுத்துவதே சிறந்த வழி என அரசும், சிங்களப் பேரினவாதிகளும் உணரத் தொடங்கிய நேரத்திலிருந்து சில தமிழர்களுக்கு யோகம் அடித்துள்ளது. கிழக்கு தனிப்பிராந்தியமாக வேண்டும் என்று கோஷமிடுவதே தம்பணப்பைகளைத் தாராளமாக நிரப்பிக் கொள்வதற்கு இன்றுள்ள சிறந்த வழி என 'புத்திசாலித்தனமான' தமிழர்கள் அறிந்து கொண்டுள்ளனர். சிங்களத் தலைமைகளும் சிறிநிவாசன், ஜனா , பஷீர் சேகுதாவுத் ஆகியோரை வாஞ்சையுடன் நோக்குகின்றனர்.

கிழக்கை வேறாகப் பிரித்து அங்கு தமிழரைச் சின்னாபின்னப்படுத்தி அழிக்க வேண்டுமென்பது சிங்கள பௌத்தப் பேரினவாதத்தின் நீண்ட நாள் அவா. இது, எட்டப்பர் கூட்டம் உட்பட அனைத்துத் தமிழரும் நீண்ட காலமாக அறிந்த விடயம். ஆனால் இன்று எப்படியாவது கிழக்கிகைத் தனியாகப் பிரித்து விட வேண்டுமென்றும் அதற்குத் தமிழர் தலைமைகளையே பயன்படுத்த வேண்டுமெனவும் அரசு ஏன் அவசரப்படுகிறது?

இதற்கு முதன்மையான காரணம் இராணுவரீதியானது. 92 இல் வடக்கில் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்த இலங்கை இராணுவம், தன்னுடைய மூலோபாயம் பற்றி மீள்பரிசீலனை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது. வடக்கை இழந்து வருகிறோம் கிழக்கையாவது காப்பாற்றுவோம் என்ற மனோநிலையிலேயே இம் மீள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. கிழக்கு மாகாண மக்களுக்குத் தனியான ஒரு நிர்வாக அமைப்பை வழங்கி அவர்களுக்குச் சில சலுகைகளை கொடுத்தால் அவர்கள் தமிழ் தேசிய நீரோட்டத்திலிருந்து அகன்று விடுவார்கள் என்றும் அவ்வாறு அகன்றால் வடக்கில் ஒரு பேரழிவு யுத்தத்தை (Total War) நட்ாத்தி முழுமையான இராணுவ வெற்றியை அடைந்து விடலாம் என்ற எண்ணம் இந்த இராணுவ மீள்பரிசீலனைக்கு அடித்தளமாக அமைந்தது. கெரில்லா யுத்தத்திற்குத் தோதாக அமைந்தவை என இனங்காணப்பட்ட கிராமங்களிலிருந்து தமிழர்களை முற்றாக வெளியேற்றி இராணுவக்கட்டுப் பாட்டில் உள்ள முகாம்களில் அடைத்து வைத்தல், தமது முழுமையான கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களினுள் செல்லும் போது சேனைப்பயிர்களுக்கும், நெற்காணிகளுக்கும் தீவைத்தல், முகாம்களில் அடைத்து வைக்கப்பட்ட கிராம மக்களில் பலரை உலர் உணவு வழ்ங்காமல் தண்டித்தல் ஆகிய கொடூரமான தந்திரோபாயங்களை, கிழக்கு தனி நிர்வாக அரசியல் பிரிவாக அமைவதன் அரசியல் பிரிவாக அமைவதன் ஊடாகவே அரசியல் அங்கீகாரம் உள்ளவையாக வெளி உலகிற்குக் காட்டலாம் எனவும் கருதப்பட்டது. தனியான கிழக்கு மாகாணத்தில் இராணுவம், பொலீஸ் ஆகியவற்றின் ஆசிகளோடு தமிழர் சிலர் தெரிவு செய்யப்பட்டால், அத்தமிழர்களின் அனுசரணையுடன் கெரில்லா யுத்த எதிர்ப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் இன அழிப்பில் ஈடுபடலாம் என்றே நவசிங்களப் பேரினவாதம் கனவு காண்கிறது.

இக்கனவை நனவாக்கும், எசமான விசுவாசமும் பண ஆசையும் சில தமிழரின் கண்களை மறைந்து விட்டன. அவர்கள் புதுவரலாறு எழுத முனைத்து விட்டார்கள் கிழக்கில் தமிழன் சிந்துகின்ற குருதிப் புனலில்.

மு.கந்தையாபிள்ளை

நன்றி - நூலகத்திட்டம்



## இன்றைய யாழ்ப்பாணத்தில் கலை-4

# கண்தெரியாக் கும்மிருட்டு...

### கலாநிதி ஆ.கிருஷ்ணதுரை

"கண் தெரியாக்
கும்மிருட்டு
கண்மணியைக் காணவில்லை
முன்னிரவுச் சந்திரனின்
முகம் பார்க்க முடியவில்லை
கை விளக்கை நூர்க்கும் காற்றில்
என்
கையோ நடு நடுங்க
என்பிறவி என் ராசா
எங்கை ஐயா கிடக்கிறியள்?"

பாட்டுப் பின்னணியில் ஒலிக்க, கிழவி அரைகுரை வெளிச்சம் கொண்ட லாம்பை ஏந்திப் பிடித்தபடி, சூடுபட்டு இறந்து கிடக்கிற மக்களில் தன் மகனைத் தேடுகிறாள். இது மாற்றம் நாடகத்தில் ஒரு காட்சி.

யாழ்ப்பாணத்தில் 1986 இற்குப் பின்னர் (கவனிக்க: 1986 இன் பின் ஜனநாயகம் முற்று முழுதாக மறுக்கப் பட்ட சூழல்) இவ்வாறு தேடப்பட வேண்டிய நிலையில் இருந்த கலைகள் மாற்றம் நாடகத்தினூடாக புது வடிவம் பெறத் தொடங்கியது.

முற்றவெளியில் தான் முதலில் பார்த்தோம். பின் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கு, அளவெட்டி மாவீரர் அரங்கு, நெல்லியடி மகா வித்தியாலயம் என ஓடி ஓடிப் பார்க்கிறோம். கவிஞர் முருகையனின் பிரதியை சிதம்பரநாதன் நெறியாள்கை செய்த 'உயிர்த்த மனிதர் கூத்து' எனும் நாடகம் அது. நாடக அரங்கக் கல்லூரித்தயாரிப்பு, இந்நாடகம் தந்த அரங்க அனுபவம், உணர்வு மிகத்திருப்தியானது.

அவையோரின் இடையாக இரு பக்கலிலும் தீபத்தை, சுவரொட்டிகளை ஏந்தியபடி கலைஞர்கள் வருகிறார்கள். இதுவரையான போரில் கொல்லப்பட்ட மக்களுக்கும், போராளிகளுக்கும் அஞ்சலியாக இது அமைகிறது. (சமகால யாழ்ப்பாணத்தில் போராளிகள் என புலிகளை மட்டும் குறித்து வருகிற துயரமும் உண்டு.)

"கொட்டுண்டு கருகி விழுந்த
கொழுந்துகளே,
இளந்தளிர்களே
மொட்டாகி மலர்ந்து குலுங்கிய
மோகனங்களே,
எம் சீவியங்களே
பட்டென்று வீசிய சூறையில்
சாய்ந்து கிடக்கும்
பழக் குலைகளே"

என அஞ்சலி தொடர்கிறது. மந்திர உச்சாடனமாக பின்வரும் வரிகள் வருகின்றன. "உடும்மை நாங்கள் நினைவு கூர்கிறோம் உயிர் கலந்து நாம் உணர்வு சேர்கிறோம்"

பிறகு ஆவேசமாகக் குரல் எழுகிறது.

"ஊழித்தாண்டவம் முடிந்து
போயினும்
உயிர்ப்பு மீளவும் நிகழ வேண்டுமே
ஆழிக் கூத்தினை ஆட வாழ்கிறோம்
அடிமை மனநிலை அகல வேண்டுமே".

இவ்வாறு தொடங்குகிறது நாடகம். குறியீட்டுப் பாங்கில் இலங்கையில் தமிழ் மக்களின் வரலாறு காட்டப்படுகிறது. சுதந்திரம் கிடைத்து, சிங்களப் பெருந்தேசிய இனவாதம் அதிகாரத்தைக் கைப்பற்றி, பௌத்த மதவாதம் அதற்கு அரணாக நின்று, தமிழ்க் கட்சிகள் பேச்சு வார்த்தை நடத்தி, அது தோல்வியில் முடிந்து- இளைஞர்கள் திரளுகின்றனர். ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். முதலில் மக்கள் அவர்களுடன் சேர மறுத்து, அதிகாரத்தின் அடக்குமுறை உச்சம் பெற, மக்களும் ஆயுதப் போராட்டத்தை நோக்கித் திரளுகின்றனர்.

இது கட்டுரைக்குரிய விஷயம் தான். ஆனால் அரங்க அனுபவம் எனும் வகையில் இந்நாடகம் உச்சப்பயன் பாட்டைப் பெறுகின்றது.

கலைஞர்கள் யாவரும் ஒரே மாதிரி உடையுடன் மேடை ஏறுகின்றனர். ஆனால் உடையில் சிற்சில மாற்றங்கள் ஏற்படுத்துவதனூடாக பாத்திரங்களை உருவாக்குகின்றனர். பல்வேறு பாத்திரத் தன்மையைப் பெறுகின்றனர்.

இங்கு சொல்லப்படுவது இது தான்: செய்தி ஒன்றினைப் பரிமாறுகின்ற போது மேடை, நாடகம் அரங்கு என்பன அதற்கு ஊடகங்களாகும். கலைஞர்கள் அந்த ஊடகத்தைச் செவ்வனே பயன் படுத்துகிற கருவிகள் ஆகும்.

யாழ்ப்பாணத்து அரங்குக்கு இது மிகப்புதியது. காட்சிப் பொருட்கள் பயன்படுத்தப் பட்டிருக்கும் விதம், அதன் வடிவம் அரங்கத்தின் உணர்வை அற்புதமாக வெளிப்படுத்துகின்றது. பிக்குமார் விசிறியால் விசிறுகின்றனர். விசிறியாக அமைபவை மனிதனை வெட்டுகிற கைக்கோடரிகள். இளைஞன் மிதவாதத் தலைமையுடன் முரண்பட்டு காட்டுக்குச் செல்கிறான். இடுப்பில் அணிந்திருந்த சால்வைய்ய தோளுக்குள்ளால் செருகி இடுப்பில் இறுக்குகிறான். துப்பாக்கி ரவைக் கூட்டினை முதுகில் பெல்ட்டால் இறுக்கிக் கட்டியது போல அமைகிறது. கலைஞர்களே பீரங்கி வாகனமாக அசைந்து மனிதர்களை நசுக்குகிறார்கள். "சாத்தானுடனும் கூட்டுச் சேர்வேன்" எனும் ஜே. ஆரின் பிரசித்தி பெற்ற உரை தெளிவான, அழகான வடிவமாக்கப்படுகின்றது. மந்திரவாதி மந்திர உச்சாடனம் செய்கிறார். உச்சஸ்தாயியில் பேய்கள் தோன்றுகின்றன. அது ஏகாதிபத்தியத்தைக் குறித்து நிற்கின்றது. பேய்கள். துப்பாக்கிகள், விமான வீச்சுக் குண்டுகள், ஷெல்கள் ஆகியவற்றை வழங்குகின்றன. இவற்றைப் பெற்றவுடன் மந்திரவாதி கூத்தாடுகிறான்.

இந்நாடகத்தில் காட்சிப் பொருட்கள் (visual things)காட்சிப் படிமம் (visual images) படிகள் (levels)கலைஞனின் குரல், உடல், இசையாவும் அரங்கின் முழுமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மக்கள் புரிந்து கொள்ள முடியாது எனத் தோன்றுகிற சந்தர்ப்பங்களில், நெறியாளர் மேடையில் குறிப்பிட்ட கலைஞருடன் உரையாடுவதனூடாக செய்தியைத் தெளிவு படுத்துகிறார். இது கூடப் புதுவடிவம் எனலாம். இது சாதாரண மக்களின் அரங்க அறிவை விருத்தி செய்வதற்கும், நாடகம் தன் கலைத் தரத்திலிருந்து இறங்காது பேணுவதற்கும் வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

அதன் காரணமாகக் கூட இந்நாடகம் மக்கள் அரங்கு (People's theatre) பெற்றதாக அமைகிறது. மக்கள் அரங்கு என்பது மக்களுடன் கலந்துரையாடி, அவர்கள் பிரச்சினையை வெளிப்படுத்தி, அவர்களது சகல வளங்களினூடாக, அரங்க உணர்வு குன்றாது நாடகம் படைத்தல் எனலாம்.

இறுதியாகப் பின்வரும் பாடலுடன் நாடகம் முடிவடைகிறது.

"மனிதர்கள் உயிர்க்க வேண்டும்
மானுடம் தழைக்க வேண்டும்
புனிதர்கள் பிறக்க வேண்டும்
பொய்யரை அகற்ற வேண்டும்
இனிமையின் எழுச்சி கண்டே
இதயங்கள் சிலிர்க்க வேண்டும்
பனிமலர் குளிர்ச்சி தென்றல்
பாரெல்லாம் சிறக்க வேண்டும்
முயற்சிதான் எமக்கு வேண்டும்

முணுமுணுத்து என்ன கண்டோம்.
மலர்ச்சிதான் எமக்கு வேண்டும்

முனகலும் சோர்வும் வேண்டாம்"

ஆனால், இந்நாடகத் தூடாக மனிதர்கள் உயிர்க்கவில்லை; புலிகள் உயிர்த்தார்கள். அவர்களது பிரச்சாரத்திற்கு இந்நாடகம் உயிர்ப்பாக அமைந்தது.

இந்நாடகம் அரங்கக் கலை எனும் வகையில் முழுவெற்றியை எய்திய போதிலும், செய்தி எனும் வகையில் மக்களுக்குத் தெளிவாகத் தெரிகிற ஒரு பிரச்சினை ஏன் இவ்வாறு குறியீடு, படிமங்கள், உத்திகளுக்கூடாக மக்களைச் சென்றடைய வேண்டும்? அவ்வாறு சென்றடைவதனால் வருகிற விளைவு என்ன? ஒரு அரங்கத்தைச் சுவைத்தார்கள் என்பதனைத் தவிர.

அதனால் தான் இறுதியில் 'மண்சுமந்த மேனியர்" போல, அவையினரையும் கலைஞர்களுடன் கூட்டாகச் சேர்ந்து,

"உயர்ந்தவர்கள் நாமெல்லாம்
உலகத்தாய் வயிற்று மைந்தர்
நலிந்து இனிக் கிடக்க்
மாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து
நிற்போம்"

எனப் பாடச் சொல்லிக் கேட்ட போது, அவையினரிடமிருந்து போதிய உற்சாகம் கிட்டவில்லை. அதற்குக் காலமும் ஒரு காரணம். ம.சு.மேனியர் காலத்தில் பல விடுதலை அமைப்புகள் இயங்கின. பலத்தோடும் பலவீனத்தோடும் அவை மக்களால் நேசிக்கப்பட்டன. விடுதலை பற்றிய நம்பிக்கையும் மக்களுக்கு இருந்தது. அதனால் மக்கள், ம.சு.மேனியருடன்,

"எத்தனை காலங்கள் இப்படிப்
போயின
நீங்கள் எழுந்திருங்கள்
எங்கள் நிலத்தினில் எங்கள்
பலத்தினில்
தங்கி நிற்போம் நாங்கள்
பொங்கி வரும் நதி வெள்ள
மெனப்
புயல் வேகமுடன் எழுக
சிந்திய செங்குருதித் துளியோடு
நீர்
போரிடவே வருக"

எனப் பாடினர்.

அது அவையினரிடம் எதிரொலித்தது.

நாடக அரங்கக் கல்லூ



---

## கேட்டதை எழுத விடு

### பார்த்தது

மனைவி இறக்கும் வரை மனதில் இளமை ததும்பி வாழ்கிற கிழவன். மனைவி இறந்த பிற்பாடு தன் தம்பி மகனுடன் சில நாள் இருந்து, தொட்டாட்டு வேலை செய்து சின்னச் சுடுசொல் பொறுக்காது முதியோர் இல்லத்தில் அடைக்கலமாகிறார். இவ்வளவு தான் இந்தச் **சந்தியாராகம்.** கிழவராகச் **சொக்கலிங்க பாகவதரும்,** தம்பி மகனாக ஓவியர் **சந்தானமும்,** தம்பி மகன் மனைவியாக **அர்ச்சனாவும்** நடித்திருக்க **பாலு மகேந்திராவின்** படைப்பு இது. எளிமை இச்சினிமாவுக்கு வலிமை. ஒரு சின்னச் சினிமா. **பாலுமகேந்திரா** அழுத்தமான சினிமா தருவதில்லை எனக் கூறுவதுண்டு. **இச்சந்தியாராகம்** அவ்வாறல்ல. இச்சினிமாவின் பிறேம்களிலிருந்து நாம் மீள சில நாட்கள் எடுத்தன. **பாலுமகேந்திராவின்** கமெராவை எப்போதும் ரசிப்பதுண்டு. இப்போதும் அவ்வாறு தான். நல்ல ஓவியன் பென்சில் எடுத்து சில கோடுகள் கிழித்து ஒரு கணத்தில் அற்புதமான ஓவியத்தை நம்முன் காட்டுவானே, சந்தியாராகம் அந்த வகையானது. பாலு, எங்கே உங்கள் கையைக் காட்டுங்கள்.



### சொல்வது

நாடகம், அரங்கியல் துறை சார்ந்த **கலாநிதி சி.மௌனகுரு** எழுதிய **"பழையதும் புதியதும்"** எனும் புத்தகம் வெளியானது. இத்தகைய நூல் மௌனகுருவால் மாத்திரமே எழுதப்பட முடியும். மட்டக்களப்புக் கூத்தினூடாக அண்ணாவி மரபின் வழி அரங்கில் நுழைந்தவர். ஈழத்து நவீன அரங்கின் அத்திவாரத்திலும், வளர்ச்சியிலும் நேரடிப் பங்கு கொண்டவர். யாழ்ப்பாணத்து அரங்க அனுபவங்களை தம்முள் வாங்கிக் கொண்டவர். சுருங்கச் சொல்லின், நாடக அரங்கு தொடர்பான மாணவன், நடிகன், தயாரிப்பாளன், ஆய்வாளன். இவரது பேச்சு நாடகம் எனில், மூச்சு அரங்கு தான். இந்நூலின் முக்கிய விசேஷம் அரங்கின் பன்முகத்தன்மையை வெளிக்காட்டி இருத்தல் எனலாம். ஒரு கட்டுரை சோழர்கால அரங்கு பற்றிக் கூறுகிற போது இன்னொரு கட்டுரை நவீன அரங்கு பற்றிப் பேசுகிறது. **பேரா. சிவத்தம்பியின்** முன்னுரை இந்நூலுக்கு அணி ஆகிறது. மட்டக்களப்புக் கூத்துத் தெரிந்தவர், நவீன அரங்கு தெரிந்தவர். நாடகத்தயாரிப்பு முயற்சியில் ஈடுபடலாம். வருடம் இரு நாடகமாவது தயாரிக்க வேண்டாமா?

### கேட்பது

சில நாட்கள் கழிந்து விட்டன. மாற்றுக் கலாசார நிறுவனமான **விபவியின் விதர்சனம்** பார்க்கக் கிடைத்தது. மனித உரிமைகள் தினத்தை ஒட்டி இந்நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி இருந்தன. புத்தகக் கண்காட்சி, கார்ட்டூன் கண்காட்சி, கலை நிகழ்வுகள் என மூன்று நாட்கள் விழா அமர்க்களப்பட்டது. கார்ட்டூன் கண் காட்சி குறிப்பிட வேண்டியது. மற்றைய நிகழ்ச்சிகளும் திருப்தி. ஆனால் திருப்தி தராத இன்னொரு விஷயமும் உண்டு. மூன்று நாட்கள் நடைபெற்ற விழாவில் ஒரு நிமிடம் கூட தமிழுக்கு ஒதுக்கப்படவில்லை. எனது கணக்கு இதுதான்: மூன்று நாள் நிகழ்ச்சி எனில், ஒரு நாள் தமிழுக்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது ஒவ்வொரு நாளும் மூன்றிலொரு பங்கு நேரம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். **"நல்லது நாங்கள் கேட்பது முழு உணவு. நீங்கள் தருவது சோற்றுப் பருக்கை".** இங்கு சோற்றுப் பருக்கையும் தரப்படவில்லை. தமிழர்களும் மனிதர்கள் அல்லரோ? இந்நிறுவனத்தின் ஆரம்ப அங்கத்தவரில் (Founder member)தமிழரும் அடங்குவர்.

விபவி

இந்நிகழ்ச்சித் தயாரிப்பிலும் தமிழர் சிலர் பங்கு கொண்டிருந்தனர். அவர்கள் என்ன செய்தார்கள்? பரதநாட்டிய நிகழ்ச்சியும் ஏற்பாடாகி இருந்தது. பரத நாட்டியம் தமிழரின் கலை என்றார்கள். இல்லை; அது சும்மா ஒரு கதை. இனியாவது, இத்தகைய நிறுவனங்களாவது தமிழுக்குரிய இடத்தை வழங்க வேண்டும் என நாம் எதிர் பார்ப்பதில் என்ன பிழை? **மகாகவியின்** கவிதைதான் இதற்கு முத்தாய்ப்பு;

**"நாமும் நமக்கோர் நலியாக்கலை உடையோம்
நாமும் நிலத்தினது நாகரிக வாழ்வுக்கு
நம்மால் இயன்ற பணிகள் நடத்திடுவோம்
சும்மா இரோம்".**

சூர்யா

நன்றி - நூலகத்திட்டம்



# "நாங்கள் புரட்சியாளர்கள்"

## -சுனில் மாதவ

'அயல் வீட்டில்' பகுதி சிங்கள முற்போக்கு சக்திகளின் மத்தியில் நிலவும் கருத்துக்களை தமிழ் வாசகர்கட்கு தரும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
சென்ற இதழில் 'யுக்திய ' ஆசிரியர் சுனந்த தேசப்பிரியவுடன் ஆரம்பித்த இந்தப்பகுதி இம்முறை 'லக்திவ' ஆசிரியர் சுனில் மாதவவின்நேர்காணலுடன் தொடர்கிறது.
இவ்வாறு இந்தப்பகுதி தொடர்ந்து வெளிவர வாசகர்களின் ஆலோசனையையும் ஒத்துளைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

**சரிநிகர்**

**முன்னணியில் நிற்கும் சிங்கள வாராந்தரப் பத்திரிகை என்ற வகையில் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான எத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொல்வது அவசியம் என்று நினைக்கிறீர்கள்?**

**சுனில் மாதவ**


இந்த நாட்டிலே தமிழ் மக்கள் எமது சகோதரர்கள் என்கிற கருத்தை நான் சிறுவயது முதலே படித்து வருகிறேன். நான் பத்திரிகைத் துறையில் செயற்படுகின்ற போதும் இந்தக் கருத்திலிருந்து மாறுபடவில்லை. ஆகவே தமிழ் மக்களுக்கு நீண்டகாலமாக இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைப் பற்றிய உணர்வு, அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் நான் செயற்பட்டிருக்கிறேன். குறிப்பாக சிங்கள-தமிழ் மக்கள் மத்தியில் ஏன் இந்த யுத்தம் நடைபெறுகிறது? தமிழர்கள் ஏன் யுத்தம் புரிகிறார்கள்? என்பது பற்றிய சரியான விளக்கத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது எமது தலையாய கடமை என்று கருதுகிறோம். இதற்காக இந்தப் பிரச்சினை பற்றிய சரியான தகவல்களை, சரியான கண்ணோட்டத்தை சிங்கள மக்களுக்கு வழங்குவதும் சிங்கள-தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதும் ஒரு பாரிய கடமை என நாம் நினைக்கிறோம்.

சிங்கள அரசாங்கத்திற்கெதிராக தங்களுடைய உரிமைகளைக் கோரி தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடாத்துவது சரியானது என்று தான் நான் கருதுகிறேன். ஆனால் இந்த ஆயுதப் போராட்டமானது ஒரு இனவாதப் போக்கை மேற்கொண்டால் பாரதூரமான பிரதிபலன்களைத் தான் ஏற்படுத்தும். எனவே தான் இந்தப் போராட்டம் நடைபெறுகின்ற அதே நேரத்தில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் போராட்டத்தைப் பற்றிய ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவது எமது கடமை என்று நாம் கருதுகிறோம்.

இந்த அடிப்படையில் நான் முன்பு ''லக்மின'' பத்திரிகையை ஆரம்பித்த காலகட்டத்தில் இந்த யுத்தம் யாருக்காக? ஏன் இந்த யுத்தம் நடைபெறுகிறது? என்பதை விளக்கி ஆசிரிய தலையங்கங்களும், கட்டுரைகளும் வெளியிட்டதன் காரணமாக சிங்கள இனவாதிகளிடமிருந்து எனக்கு மிகவும் பயங்கரமான அச்சுறுத்தல் ஏற்பட்டது. எனினும் பின்பு ''லக்திவ'' பத்திரிகையை ஆரம்பித்தது முதற்கொண்டும் இந்த அடிப்படையிலேயே எழுதி வருகிறோம்.

முறிந்த பனைமரம் என்ற நூலை வட-கிழக்கிலே விடுதலைப் புலிகளும், தெற்கிலேயுள்ள இலங்கை அரசாங்கமும், ஏனைய சக்திகளும் எதிர்த்து வந்திருக்கின்றன. அப்படியிருந்தும் கூட பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நாம் அந்த நூலை தொடர்ச்சியாக ''லக்திவ'' வில் வெளியிட்டு வருகிறோம். எமது கடந்த இலக்கிய விழாவின் போது தமிழ் மொழிக்காகவும், தமிழ் இலக்கியத்திற்காகவும் சேவை செய்த சுபைர் இளங்கீரன் என்ற மிகப்பழம்பெரும் எழுத்தாளரைப் போற்றிக் கௌரவித்திருக்கிறோம்.

இந்த நாட்டிலே சிங்கள-தமிழ் மக்களிடையே உறுதியான ஐக்கியத்தை ஏற்படுத்தாவிட்டால் நாட்டில் எந்த விதமான விமோசனத்தையோ விடுதலையையோ காண முடியாது. எமது பத்திரிகையின் பிரதான குறிக்கோளும் சிங்கள-தமிழ் மக்களிடையே ஐக்கியம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தான்.



சுனில் மாதவ 'லக்திவ' என்கிற சிங்கள வாரஇதழின் ஆசிரியர்.
ஆரம்பத்தில் 'லேக்ஹவுஸ்' நிறுவனத்திலும் பின்னர் 'திவயின' விலும் பத்திரிகையாளராக இருந்தவர்.
அதன் பின்னர் 'லக்மின' என்ற பத்திரிகையின் ஆசிரியரானார்.
பல்வேறு காரணங்களால் அதுவும் நின்று போக தற்போது 'லக்திவ' பத்திரிகையின் ஆசிரியராகவுள்ளார்.
இவரது தந்தையார் ஒரு பிரபலமான கவிஞரும் பத்திரிகையாளருமாவார்.

**சரிநிகர்**

**வட-கிழக்கு இணைப்பு, சுயநிர்ணய உரிமை, தமிழ், முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல், மலையக மக்களின் பிரஜா உரிமை போன்ற முக்கியமான விடயங்கள் தொடர்பாக ''லக்திவ'' எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டு வெளிவருகிறது?**

**சுனில் மாதவ**

ஒரு சிறிய நாடு சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்படுவது இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரமாக மாட்டாது. ஆகவே தான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல சிங்கள-தமிழ் மக்கள் மத்தியில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி ஒரு ஐக்கியப்பட்ட போராட்டத்தை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியும்.

வடகிழக்கு பாரம்பரியப் பிரதேசம் என்பதைப் பொறுத்தளவில் இலங்கையின் வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும் போது ஒரு குறித்த பிரதேசம் ஒரு குறித்த இனத்தினுடையது என ஒதுக்க முடியாது. சிங்களப் பிரதேசங்களில் தமிழர்களும், வடகிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே எந்தப் பிரதேசத்தையும் ஒரு குறிப்பிட்ட இனத்துக்கு உரித்தான ஒரு பிரதேசமாக நாம் கருதவில்லை. அவ்வாறான ஒரு கருத்தை எமது பத்திரிகையில் எழுதவுமில்லை. தமிழ்மக்கள், சிங்கள மக்கள் என்ற வித்தியாசமின்றி இந்நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் எவரும் வாழ்வதற்கு உரிமையுண்டு. இந்த பாரம்பரிய பிரதேசம் என்ற பதம் முதலாளித்துவ சக்திகளால் தான் உருவாக்கப்பட்டது என்று நான் கருதுகிறேன். இப்படியான பதப்பிரயோகங்கள் மூலமாகத் தான் இந்த நாட்டின் மக்கள் மத்தியில் ஓர் பிளவை, ஓர் ஐக்கியமின்மையை ஏற்படுத்த முடியும். அதன் மூலம் தான் முதலாளித்துவ ஆட்சியாளர் தங்களது ஆட்சியை நடாத்த முடியும் என்று நான் கருதுகிறேன்.

ஒரு மார்க்ஸியவாதி என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் சுயநிர்ணய உரிமையை எவ்வாறு பெறுவது, எப்படி செயற்படுத்துவது என்பது தொடர்பாக நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டியுள்ளது. ஒரு வர்க்கப் போராட்டத்தின் பின்பு முதலாளித்துவ வர்க்கமற்ற ஒரு சோஷலிஸ சமுதாயத்தில் தான் இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வை நாம் காணமுடியும். முதலாளித்துவ ஆட்சியமைப்பு இருக்கின்ற நாட்டில் சுயநிர்ணய உரிமையை நாம் உறுதிப்படுத்த முடியாது. ஆக, சிங்கள, தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து தமது உரிமைக்காக பொதுப்படையான அடிப்படையில் போராடி நிலைநாட்டுகின்ற அரசமைப்பில் தான் உண்மையான சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்த முடியும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமது நலனுக்காக இந்த மக்களை இந்தியாவிலிருந்து பலாத்காரமாகக் கொண்டு வந்தது உண்மை தான். அப்படியிருந்தாலும் இன்றைய வரலாற்றை எடுத்துப் பார்க்கும் போது இந்தத் தொழிலாளர்கள் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், அபிவிருத்திக்காகவும் தமது இரத்தத்தையும் கண்ணீரையும், வியர்வையையும் சிந்தி இருக்கிறார்கள். எனவே அவர்களை நாங்கள் இந்நாட்டு மக்களாக அங்கீகரிக்க வேண்டும். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலமாகத்தான் முதன்முதலாக இது தொடர்பான ஒரு வெற்றிகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று நான் கருதுகிறேன். குறித்த பகுதியினரை இங்கு பிரஜாவுரிமை வழங்கி வைத்திருக்கவும், மற்றையோரை இந்தியாவுக்கு அனுப்பவும் அவ்வுடன்படிக்கை மூலம் தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்பு பிரஜாவுரிமை வழங்குவது என்பது அரசியல் மயப்படுத்தப்பட்டது. ஒரு அரசியல் கட்சி கூடிய நன்மையைப் பெற அதனைப் பயன்படுத்தியது. அரசியல் இலாபம் கருதி ஒரு குறித்த கட்சியினர் இந்த மக்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கி இருந்தாலும் கூட அவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல இந்த நாட்டிலே அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் சிங்களவர்களாக இருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி வேறுபாடின்றி ஒன்றிணைந்து போராடுவதன் மூலமாக ஒரு அரசை உருவாக்குவதன் மூலமாகத் தான் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். குறிப்பாக இன்றைய எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் கூட அவர்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப் போவதில்லை.

**சரிநிகர்**

**ஜாதிக சிந்தனய, ஹெல உருமய இயக்கம் போன்றவை சிங்களப் பேரினவாதத்தினை வளர்த்து வருவதையிட்டு ''லக்திவ'' என்ன சொல்ல விரும்புகிறது?**

**சுனில் மாதவ**

இவவிரு இயக்கங்களும் பச்சையாகவே இனவாதத்தை வளர்க்கின்ற இயக்கங்கள் என்று நாங்கள் கருதுகிறோம். மற்றையது; இக்கருத்தோட்டங்களை ''லக்திவ''பத்திரிகையின் ஆரம்பம் முதல் இன்று வரை விமர்சித்து வருகிறோம். வேறு எந்தப் பத்திரிகையும் செய்யாத அளவில் நாங்கள் இந்த விமர்சனத்தை முன்னெடுத்து வருகிறோம். எமது பத்திரிகை மிகத் தெளிவாக மார்க்ஸிய சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிவருவதால் இந்நிலைப்பாட்டிலிருந்து எங்களால் மாறமுடியாது.

**சரிநிகர்**

**ஸ்ரீநிவாசனால் முன்வைக்கப்பட்ட சமஷ்டி யோசனை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**சுனில் மாதவ**

ஸ்ரீநிவாசனுடைய யோசனையை விடுதலைப் புலிகளும் எதிர்த்திருக்கிறார்கள். பேரினவாதக்கட்சிகளும் எதிர்த்திருக்கின்றன. இப்படியான ஒரு நிலைமையில் சமஷ்டி முறை மூலம் ஓரளவு தீர்வை நாம் காண முடிந்தாலும் முழுமையான தீர்வை நாம் காண முடியும் என்று நான் நம்பவில்லை. இந்த நாட்டிலே வாழுகின்ற அனைத்து மக்களும் ஒன்றிணைவதால் தான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியும் என்று நம்புகிறேன்.

**சரிநிகர்**

**நீங்கள் அடிக்கடி தமிழ்-சிங்கள மக்கள் இணைந்த ஒரு வர்க்கப் போராட்டத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். கடந்த காலத்தில் இலங்கையின் இடது சாரிகளும் இதையே தான் பேசி சளைத்துப் போயுள்ளார்களே?**

**சுனில் மாதவ**

அவர்கள் புரட்சிவாதிகளல்ல. நாம் புரட்சிவாதிகள்.

**சரிநிகர்**

**4. சுதந்திரமான ஒரு பத்திரிகையை வெளியிடுவதில் உங்களுக்குள்ள நெருக்கடிகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?**

**சுனில் மாதவ**

''லக்திவ'' பத்திரிகையின் ஆசிரியர் என்ற வகையில் எனக்கிருக்கும் அச்சுறுத்தல்கள் வேறு எந்தப் பத்திரிகை ஆசிரியருக்கும் இருக்கும் என்று நான் கருதவில்லை. குறிப்பாக இந்த அச்சுறுத்தல் நான் ''லக்மின'' ஆசிரியராக இருந்த போதும் இருந்து வந்தது. எனது தங்கையை கொல்லப்போவதாக, அவரது குழந்தையைக் கொல்லப் போவதாக தொலைபேசி மிரட்டல்களும், கடிதங்களும் வரும். அச்சுறுத்தல்கள் வரும் என்று தெரிந்து தான் பத்திரிகையை ஆரம்பித்தோம். அவர்கள் முடிந்தால் என்னைக் கொல்லட்டும். எனது பேனாவை எடுக்கப் பலர் இருக்கிறார்கள். மக்களுக்காக உயிரைத் தியாகம் செய்வது ஒரு உயர்ந்த பணி என்று தான் நான் கருதுகிறேன்.

**சரிநிகர்**

**''லக்திவ'' ஒரு சிங்கள முற்போக்குப் பத்திரிகை என்ற வகையில் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறது?**

**சுனில் மாதவ**

இன, மத பேதமின்றி இந்த முதலாளித்துவ அரசைத் தூக்கியெறிந்து ஒரு சோஷலிஸ அரசை, மக்களின் அரசை நாம் உருவாக்க வேண்டும். அதற்கு நாம் திட சங்கத்துடன் செயற்பட வேண்டும். அதற்காக நீங்கள் எங்களோடு ஒன்றிணைய வேண்டும் என்று எங்களது பத்திரிகை சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# சலுகைகள் + சமரச வாய்ப்புக்கள் = முஸ்லிம் காங்கிரஸ்

எம்.எச்.முனீர்

புலிகளின் பாசிச செயற்பாடுகளினால் தமது சொந்தப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, அகதிகளாகச் சீரழியும் வடக்கு முஸ்லீம்கள் ஒருபுறம், குறித்த அச்சத்துடன் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கும் கிழக்கு முஸ்லீம்கள் மறுபுறம். இவற்றோடு, இனவாத அரசு திட்டமிட்ட ரீதியில் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் சிங்களக் குடியேற்றங்களினாலும், அதிகாரங்களை சிங்கள மயப்படுத்துவதினாலும் வடக்கு-கிழக்கு முஸ்லீம்கள் தமது தனித்துவங்களை இழந்து கொண்டிருக்கும் அபாயச் சூழல். இவ்விதம் தம்மை அடிமைப்படுத்த முனையும் சிங்கள, தமிழ் இனவாதங்களிடையே சிக்கிக் கொண்டிருக்கும் வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் வரலாற்றில், முக்கிய கவனத்தைப் பெறுகின்ற விடயமொன்று இப்போது நிகழ்ந்துள்ளது. அதாவது வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லீம்களின் எதிர்காலம் பற்றி எதுவுமே குறிப்பிடாமல், வடக்கையும், கிழக்கையும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கக் கோரும் பிரதான சிங்களக் கட்சிகளின் முடிவுக்கு சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) தலைமை ஆதரவை வழங்கியிருக்கின்றது. வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் தலைவிதியையே கேள்விக்குள்ளாக்கும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கும் இந்த முடிவு பற்றி மு.கா தலைமை வழமைக்கு மாறாக அர்த்தம் பொதிந்த மௌனத்தை மேற்கொள்ள முயல்கிறது; அல்லது நழுவும் பாணியிலான வியாக்கியானங்களைக் கூற முற்படுகின்றது. எனினும் தமது எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கியிருக்கும் விடயம் என்ற வகையில், மு.கா தலைமை எடுத்திருக்கும் இந்த நிலைப்பாட்டை விசாரணைக்குட்படுத்தும் பொறுப்பும் உரிமையும். வடக்கு-கிழக்கு முஸ்லீம்களுக்கு உண்டு.

> வடகிழக்கு பிரிவுக்கு மு.கா.ஆதரவு வழங்கியிருப்பது தமிழ் மக்களது உரிமைகளுக்கு எதிரான செயல் மாத்திரமல்ல. கூடவே தனது சொந்த சமூகத்தின் உரிமைகளுக்கும் எதிரான செயல் தான்

டிசம்பர்19யோனைகள்,இலங்கை-இந்திய ஒப்பந்தம் போன்ற இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட திட்டங்களில் வடக்கு-கிழக்கு முஸ்லீம்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று கூறி அந்தத் திட்டங்களை மு.கா. தலைமை முற்றாகவே நிராகரித்தது. ஆனால் இப்போது அதே போன்று, வடக்கு-கிழக்கு முஸ்லீம்கள் பற்றி **எதுவுமே குறிப்பிடப்படாமல்** வடக்கும், கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு மு.கா தலைமை தனது ஆதரவை வழங்கியிருப்பது ஏன்? இந்தக் கேள்விக்கு ''தமிழ்க் கட்சிகள் முஸ்லீம்களோடு சேர்ந்து கூட்டான ஒரு நிலைப்பாட்டை வைக்கத் தவறிய துரதிர்ஷ்டவசமான நிலைமைதான் காரணம்'' என மு.கா தலைமை பதில் அளித்துள்ளது. (பார்க்க: வீரகேசரி-23/12/92) ஒரு தனித்துவமான முஸ்லீம் சிறுபான்மை இனத்தின் அரசியல் தலைமை என்றவகையில் இந்தப் பதில் எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல. ஏனெனில்,

(1) ஒரு சிறுபான்மை இனத்தின் அரசியல் தலைமையானது, இன்னொரு சிறுபான்மை இனத்தில் அரசியல் கட்சிகளுடன் கூட்டான நிலைப்பாடு ஏற்படவில்லை என்ற காரணத்திற்காக, **தனது சொந்த இனத்தின் உரிமைகளைக் கைவிட முடியாது**. இங்கு கவனத்திற்குரிய விடயம் தமிழ்க் கட்சிகளுடன் உடன்பாடு ஏற்பட்டிருக்கின்றதா, இல்லையா என்பதல்ல; மாறாக, **வடக்கையும் கிழக்கையும் தனித்தனியாகப் பிரிப்பதன் மூலம் அங்குள்ள முஸ்லீம்களின் உரிமைகள் பேணப்பட்டிருக்கின்றனவா, இல்லையா, என்பது**தான். இந்த எளிமையான உண்மையை மறைப்பதற்காக, அதாவது தனது சமூகத்தின் உரிமைகளைத் தான் கைவிட்டு விட்டதை மறைப்பதற்காக, தமிழ்க் கட்சிகளுடன் உடன்பாட்டுக்கு வரமுடியாமல் போன துரதிர்ஷ்டத்தைக் காரணமாகக் கூறி மு.கா தலைமை வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் கவனத்தைத் திசை திருப்ப முற்படுகின்றது.

(2)**தமது உரிமைகளை வென்று கொள்வதற்காக முயற்சிக்கின்ற ஒரு சிறுபான்மை இனம், இன்னுமொரு சிறுபான்மை இனத்தின் உரிமைகளுக்கு விரோதமாக நடந்து கொள்ளக் கூடாது.** எவ்வாறு வடக்கு-கிழக்கு முஸ்லீம்கள் தனியான அதிகார அலகுக்குள் வாழ்வதற்கான உரிமைகளைக் கொண்டிருக்கிறார்களோ, அதேபோன்று தமிழ்மக்களும் வடக்கு, கிழக்கில் தமக்குரிய தனியான அதிகார அலகுக்குள் வாழக் கூடிய உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். இந்த உரிமையை மறுக்கும் எந்த முடிவுக்கும் முஸ்லீம் தலைமைகள் தமது ஆதரவை வழங்க முடியாது.(இந்த உண்மை மறுதலையாக முஸ்லீம்களின் உரிமைகள் விடயத்தில் தமிழ்த் தலைமைகளுக்கும் பொருந்தும்). ஆனால் வடக்கையும் கிழக்கையும் தனித்தனியாகப் பிரிப்பதற்கு ஆதரவு வழங்கியிருப்பதன் மூலம், மு.கா தலைமை அங்கு வாழும் தமிழ்மக்களின் உரிமைகளுக்கு எதிராகச் செயற்பட்டிருக்கின்றது. அத்தோடு **இதன்மூலம் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களையும், முஸ்லீம்களையும் நிரந்தரப் பகையாளிகளாக்கும் நிலைமைக்கும் இட்டுச் சென்றிருக்கின்றது.**

(3) தமிழ்க் கட்சிகளுக்கும், முஸ்லீம் கட்சிகளுக்கும் இடையே ஏற்படக் கூடிய எந்தவொரு உடன்பாடும் இரு இனங்களினதும் உரிமைகளை இலகுவாகப் பெற்றுத் தந்துவிடாது என்பது தெளிவான உண்மை. ஏனெனில் அவ்வளவு கடுமையாக சிறுபான்மை இனங்களின் உரிமைகளை, பௌத்த-சிங்கள பேரினவாதம் மறுத்து வருகின்றது. இந்நிலையில் இந்தப் பேரினவாதத்திற் கெதிராக உறுதியாகப் போராடுவதன்மூலம்தான்வடக்கு-கிழக்கு முஸ்லீம்கள் தமது உரிமைகளை இறுதியாகப் பெற்றுக் கொள்வது சாத்தியப்படும். ஆனால் இதற்கு மாறாக பௌத்த-சிங்கள பேரினவாத அமைப்புக்களினால் (உ+ம் ஹெல உருமய சிங்கள ஆரக்க சங்விதான, பௌத்த சங்கங்கள் போன்றவை) கட்டுப்படுத்தப்படும் பிரதான சிங்களக் கட்சிகளுடன் இணைந்து, வடக்கு, கிழக்கு பிரிவுக்கு மு.கா தலைமை ஆதரவு வழங்கியிருப்பது தமிழ்மக்களின் உரிமைகளுக்கு எதிரான செயல் மாத்திரமல்ல; கூடவே **தனது சொந்த சமூகத்தின் உரிமைகளுக்கும் எதிரான செயலும்தான்.**

வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியே பிரிப்பதற்கு மு.கா தலைமை ஆதரவு வழங்கியிருப்பதால் எழுந்திருக்கும் இன்னுமொரு முக்கியமான கேள்வி, வடக்கு-கிழக்கு முஸ்லீம்களுக்கான தனியான முஸ்லீம் மாகாணசபையின் எதிர்காலம் என்ன? என்பதாகும். தனியான முஸ்லீம் மாகாணசபைக் கோரிக்கை வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உணர்வின் வெளிப்பாடு. இந்தக் கோரிக்கையை வெறுமனே ஒரு தேர்தல் கோஷமாக குறுக்கிவிட்ட செயலைத்தான் மு.கா தலைமை செய்து முடித்திருக்கின்றது. வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் தேசியத் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் தனியான முஸ்லீம் மாகாணசபையை வென்றெடுப்பதற்கான எந்தவொரு செயல்பாட்டையும் இன்றுவரை மு.கா தலைமை நேர்மையாக முன்னெடுக்கவில்லை; மாறாக இந்தக் கோரிக்கையை அது **படிப்படியே கைவிட்டு வந்துள்ளது:** ஆரம்பத்தில் தமிழ்க்கட்சிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போது, தனியான முஸ்லீம் மாகாணசபையை அம்பாறை மாவட்டத்திற்குள் மட்டும் குறுக்கிக் கொண்டது. (ஆனால் வடக்கு-கிழக்கு முஸ்லீம்களிடமிருந்து வெளிப்பட்ட பரவலான எதிர்ப்பின் காரணமாக இந்த முடிவிலிருந்து மு.கா தலைமை பின்னர் பின்வாங்கியது). அதன் பின்பு, அமைச்சர் தொண்டமான் தெரிவுக் குழுவில் முன்வைத்த யோசனைக்கு அதாவது (அதிகாரமற்ற) முஸ்லீம் பிரதேச சபைகளை ஒன்றிணைத்த யூனியன் அமைப்பை உள்ளடக்கிய யோசனைக்கு மு.கா தலைமை ஆதரவு வழங்கியது. (ஆனால் இந்த யோசனைக்கு சிங்கள இனவாதத் தரப்பிலிருந்தும், மரபுவழி முஸ்லீம் தலைமையிடமிருந்தும் கிளம்பிய பெரும் எதிர்ப்பின் காரணமாக மு.கா தலைமை தனது ஆதரவை விலக்கிக் கொண்டது). பின்னர் சிறிநிவாசன் எம்.பி முன்வைத்த, வடக்கு, கிழக்குக்குத் தனித்தனியான சமஷ்டி அமைப்பு என்ற யோசனைக்கு, அதாவது **முஸ்லீம்களுக்கான தனியான அதிகார அலகு பற்றிய எவ்வித குறிப்பும் இல்லாத யோசனைக்கு** மு.கா தலைமை ஆதரவு வழங்கியது. (முன்னர், சமஷ்டி அமைப்புக்கு மு.கா தலைமை கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வந்தமை கவனிக்கத்தக்கது) இறுதியாக இப்போது சமஷ்டி அமைப்பில்லாமல் வடக்கையும், கிழக்கையும் பிரிக்கும் பிரதான சிங்களக் கட்சிகளின் முடிவுக்கு மு.கா தலைமை ஆதரவு வழங்கியிருக்கின்றது.

இவ்வாறு மு.கா தலைமை வடக்கு-கிழக்கு முஸ்லீம்களால் ஆணை வழங்கப்பட்ட தனியான முஸ்லீம் மாகாணசபைக் கோரிக்கையை இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகளில் உறுதியாக முன்வைப்பதைத் தவிர்த்துக் கொண்டு அக்கோரிக்கையைப் படிப்படியே கைவிட்டு வந்திருக்கிறது.

> ''முஸ்லிம் மாகாணசபைக் கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் கைவிட்டுவிட்டது''

ஒரு சிறுபான்மை இனம், தனது உரிமைகளை வென்று கொள்வது என்பது இலகுவான விடயமல்ல. அது கடினமான, நீண்ட ' உறுதியான போராட்டத்தினூடாக மட்டுமே சாதிக்கப்படக் கூடியது. உலகெங்கும் நடைபெற்ற/நடைபெறுகின்ற சிறுபான்மை இனங்களின் போராட்ட வரலாறுகள் இதைத்தான் நிரூபிருக்கின்றன. ஆனால் இந்த உண்மைக்கு மாறாக மு.கா. தலைமையோ வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் உரிமைகளை வென்று கொள்வதை ஒரு எளிமையான செயலாகக் கருதிக் கொண்டிருக்கின்றது. வடக்கு-கிழக்கில் மு.கா. க்குக் கிடைத்த தேர்தல் வெற்றியானது, அங்குள்ள முஸ்லீம்களின் தலைவிதியை தனது விருப்பப்படி நிர்ணயிப்பதற்கு மு.கா. தலைமைக்கு வழங்கப்பட்டிருக்கும் அங்கீகாரம் அல்ல; மாறாக தனியான முஸ்லீம் மாகாணசபையைப் பெற்றுத் தருவதற்காக வடக்கு-கிழக்கு முஸ்லீம்கள் தனக்கு வழங்கியிருக்கும் அங்கீகாரம் என்பதை மு.கா. தலைமை மறந்து விட்டது. இவ்வாறு தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அங்கீகாரத்தின் மூலம், தான் அந்த மக்களுக்காக உறுதியாகப் போராட வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருப்பதையும் மு.கா. தலைமை மறந்து விட்டது. அதற்குப் பதிலாக, அர்த்தமற்ற தர்க்க நியாயங்கள் மற்றும் உணர்ச்சிகரமான வாதங்கள் மூலமோ, அல்லது முஸ்லீம்களை அன்புடன் நடத்துங்கள் என சிங்களச் சமூகத்திடம் பணிவாக வேண்டிக் கொள்வதன் மூலமோ. அல்லது நாட்டின் ஜனாதிபதி வழங்கக் கூடிய உறுதிமொழிகளை நம்புவதன் மூலமோ வடக்கு - கிழக்கு முஸ்லீம்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மு.கா. தலைமை எதிர்பார்க்கிறது. இதனால்தான் ஒரு சிறுபான்மை இனத்தின் உறுதிமிக்க அரசியல் தலைமையாக தன்னை உயர்த்திக் கொள்வதற்கு மாறாக, அற்பச் சலுகைகளுக்கும், சமரச வாய்ப்புகளுக்கும் ஏங்கிக் கிடக்கும் ஒரு சந்தர்ப்பவாதத் தலைமையாக மு.கா. தலைமை சீரழிந்து விட்டிருக்கின்றது.

> வடகிழக்கு பிரிவுக்கு ஆதரவு வழங்கியிருப்பதன் மூலம் மு.கா.அங்கு வாழும் தமிழ் மக்களையும்,முஸ்லிம் மக்களையும் நிரந்தரப் பகையாளிகளாக்கும் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது

வடக்கையும், கிழக்கையும் தனித்தனியாகப் பிரிக்கும் முடிவுக்கு மு.கா. தலைமை ஆதரவு வழங்கியதன் காரணமாகத் தோன்றியுள்ள மற்றுமொரு கேள்வி, இத்தகைய பிரிவினை, வடக்கு-கிழக்கு முஸ்லீம்களுக்கு எத்தகைய தீர்வை வழங்கப் போகின்றது? என்பதாகும். ஒருபுறம் சிங்கள அரசின் திட்டமிட்ட இனச் சிதைப்பு நடவடிக்கைகளினாலும், மறுபுறம் தமிழ் இனவாதத்தின் அராஜக மற்றும் நிர்வாக ஒடுக்கு முறைகளினாலும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் வடக்கு-கிழக்கு முஸ்லீம்களுக்கு, வடக்கும், கிழக்கும் தனித்தனியாகப் பிரிக்கப்படுவதன் மூலம் ஏற்படவிருக்கும் தீர்வு என்ன? தனியான முஸ்லீம் மாகாணசபைக் கோரிக்கையை மன்னார் வரைக்கும் விஸ்தரித்ததன் காரணமாகத்தான் புலிகள் வடக்கிலிருந்து முஸ்லீம்களை விரட்டியிருக்கிறார்கள் என்று ஐ.தே.க. முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டிய போது, மன்னார் முஸ்லீம்கள் மட்டுமன்றி, யாழ்ப்பாண முஸ்லீம்களும் கூட முஸ்லீம் மாகாணத்திற்குள் வாழும் உரிமையைக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அந்த உரிமையை நிராகரிப்பது அவர்களுக்குச் செய்யும் துரோகத்தனம் என்றும் ஆவேஷமாகக் கூறிய மு.கா. தலைமை, இப்போது அந்த வடக்கு முஸ்லீம்களுக்கு, வடக்கையும், கிழக்கையும் தனித்தனியாகப் பிரிப்பதன் மூலம் என்ன தீர்வை வழங்கப் போகின்றது?

ஒன்றுக்கு மேற்பட்ட சிறுபான்மை இனங்கள் வாழுகின்ற ஒரு நாட்டில், பேரினவாத ஒடுக்குமுறைகள் ஒரு குறிப்பிட்ட சிறுபான்மை இனத்தின் மீது மட்டும் பிரயோகிக்கப்படுவதில்லை. மாறாக அந்நாட்டிலுள்ள அனைத்து சிறுபான்மை இனங்களின் மீதும் பேரினவாதம் தனது ஒடுக்கு முறைகளைச் செயற்படுத்துகிறது. **ஈழம் இல்லை; வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லை; சமஷ்டி அமைப்பும் இல்லை; சட்டம், ஒழுங்கைப் பேணும் அதிகாரமோ அல்லது நிலத்தின் மீதான உரிமையோ இல்லை; அத்துடன் ஆயுதங்களையும் ஒப்படைத்துவிட வேண்டும்;** அதாவது மொத்தத்தில் பெரும்பான்மை இனமான நாங்கள் எதைச் செய்தாலும் சிறுபான்மைத் தமிழர்களான நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளவே வேண்டும்: இதுதான் இனப்பிரச்சினை விவகாரத்தில் பௌத்த-சிங்கள பேரினவாதம் இன்றுவரை கடைப்பிடித்துவரும் ஒரே நிலைப்பாடு. **இந்த நிலைப்பாடு தமிழ்மக்கள் சம்மந்தமானது மட்டுமல்ல: அத்துடன் கூடவே, வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லீம்களுக்கும் பௌத்த-சிங்களப் பேரினவாதம் சொல்லும் எச்சரிக்கைச் செய்தி இதுதான்.** இந்நாட்டின் சிறுபான்மை இனங்கள் அனைத்தினதும் உரிமைகளை மறுக்கவும், அவர்களை அடிமைப்படுத்தவும் முனைகின்ற பேரினவாத சக்திகளுடன் இணைந்து கொண்டிருப்பதன் மூலம் மு.கா. தலைமை எதைச் சாதிக்க விளைகின்றது? இது வரை காலமும் சிங்களக்கட்சிகளுடன் இணைந்திருக்கும் மரபுவழி முஸ்லீம் தலைமையிடமிருந்து. தனித்துவமான கட்சியாகத் தன்னை பிரகடனப்படுத்திக் கொண்ட மு.கா. இன்

.............................. 15

நன்றி - நூலகத்திட்டம்



# 1992 இல்: எழுதாதே என்று ...




- 92 ஜனவரி 26 இல் தனது முதல் இதழை வெளியிட்டது 'லக்திவ' என்ற சிங்கள வார இதழ். அதனது முதலாவது இதழிற்கான விளம்பரத்தை வெளியிட அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளும், ரூபவாஹினியும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் மறுத்து விட்டன.
- 'தினமின' என்ற சிங்கள நாளிதழைச் சேர்ந்த இரு செய்தியாளர் தலவல தடுப்புமுகாமில் நடந்த தாக்குதலில் காயப்பட்டவர்கள் தொடர்பான செய்தியைச் சேகரிக்க களுபோவிலை ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது பொலிஸாரால் மிரட்டப்பட்டனர்.
- 'மார்ச் 31 இல் எதிர்க்கட்சியினரின் 'பாதயாத்திரை' தொடர்பான செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்த சேனவிதானகம, சித்ரால் சொய்சா ஆசிய செய்தியாளர்கள் இனந்தெரியாதவர்களால் தாக்குதலுக்குள்ளானார்கள்.
- ஏப்ரல் முதல் வாரத்தில் பிரதி பொலிஸ் மாஅதிபர் உடுகம் பொலவினது அறிக்கைகளை பிரசுரித்தது தொடர்பாக யுக்திய, லக்திவ, ராவய, அத்த ஆகிய சிங்களவாராந்தரப்பத்திரிகைகளும், ஐலண்ட், சண்டே ரைம்ஸ் ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளும் சி.ஐ.டியினரால் விசாரணைக்குள்ளானது. ஆசிரியர், உதவி ஆசிரியர்கள், அச்சிடுபவர், lay-out artist அனைவரும் விசாரனை செய்யப்பட்டனர்.
- ஏப்ரல் 10 :மக்கள் மத்தியில் அரசு பற்றி அவதூறு பரப்பியது என்றதன் பேரில் 'அத்த' பத்திரிகையின் ஆசிரியர் எல்.பி வணிகசேகராவுக்கும், வெளியீட்பாளர் டபிள்யூ தர்மசாசவுக்கும் எதிராக அவசர காலச் சட்டத்தின் கீழ் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.
- ஏப்ரல் 28ல் 'சினிமா சக்விதி' என்ற சினிமா சஞ்சிகையின் ஆசிரியர் மீகல முதியான்சே இனந்தெரியாத நபர்களால் கொகுவலவில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து கத்திக் குத்துக்குள்ளானர்.
- எப்ரல்: மவுண்ட்லவனியா பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டிருந்த போது நவமக அச்சகம் சேதமாக்கப்பட்டது தொடர்பாக அச்சக உரிமையாளர் அடிப்படை உரிமைகளின் கீழ் வழக்குத் தொடர்ந்ததன் பேரில் உரிமையாளர் என்.கே.எம் சேனநாயக்காவுக்கு நட்டஈடாக 25000/- வழங்குமாறு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியது.
- மே7: அரச கட்டுப்பாட்டிலுள்ள ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையத்தில் உதவி தயாரிப்பாளராகப் பணியாற்றும் தர்ஷன பன்னன்கல சுகததாச ஸ்டேஷயத்தில் தான் கடமையிலீடுபட்டுக் கொண்டிருந்த போது கடமையைச் சரிவரச் செய்யமுடியாதவாறு பொலிஸாரால் இடையூறுக்குள்ளானதாக முறையிட்டிருக்கிறார்.
- மே.16: அத்துல பண்டார என்ற 'லங்காதீப' பத்திரிகையாளர் அநுராதபுரத்தில் எதிர்க்கட்சி மாகாண அமைச்சரால் மிரட்டலுக்குள்ளானார்.
- மே:யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்பிரியவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் பொலிஸ்மா அதிபராலும், மற்றும் பொலிஸ் அதிகாரிகளாலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.
- ஜூலை10: முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபரின் அறிக்கையைப் பிரசுரித்தது தொடர்பான வழக்கில் யுக்திய ஆசியர் சுனந்த, தேசப்பிரிய 50,000/- பிணையில் விடப்பட்டார்.
- மே 26: 'ராஜாலியா' என்ற சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் பிறோம் லந்தீவல பிளவர் றோட்டில் வைத்து மூன்று இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டார்.
- மே 29: ராஜாலியா பத்திரிகையில் 'மத்திய மாகாணத்தில் கறுப்புப் பூனைகளின் மனிதப் படுகொலைகள்' என்ற தலைப்பில் வெளிட்ட கட்டுரை தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் ஆசிரியர் லக்தீவல 5000/ பிணையில் விடுதலையானார்.
- ஜுன் 10: வேறுபுதிய தொலைக் காட்சி நிலையங்களைத் திறக்க அனுமதிப்பதில்லையென்று அரசு அறிவித்துள்ளது.
- ஜுலை 1: எதிர்கட்சியினர் நடாத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் படம்பிடித்துக் கெண்டிருந்த 'ராய்ட்டர்' செய்தி நிறுவனப் படப்பிடிப்பாளரான அநுருத்ரா குண்டர் படையொன்றால் தாக்கப்பட்டார். அவரது கமெராவும் சேதமாக்கப்பட்டு, கமெராவிலுள்ளிருந்த பிலிம்களும் இழுத்தெடுக்கப்பட்டது. லங்காதீப பத்திரிகையாளர்களான அருண்பீல் விஜேரட்னவும், இந்திரரத்ன பாலசூரியாவும் இதன் போது பொலிஸரால் தாக்கப்பட்டனர். ராவய படப்பிடிப்பாளரான சுதா மலவீரவினுடைய கமெராவும் நொருக்கப்பட்டது. அதனுள்ளிருந்த படச்சுருள் வெளியே எடுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது.
- ஜுலை 2: முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம் பொலவினது பேட்டியைப் பிரசுரித்தது தொடர்பாக சூலவன்ச சிறிலால் (லங்காதீப), தயாலங் காபுர (திவயின) சனந்த தேசப் பிரிய (யுக்திய) ஆகியோர் சி.ஐ.டியினரால் விசாரணைக் குள்ளானார்கள்.

  ஜுலை 26 நிட்டம்புவவில் வைத்து லங்காதீப பத்திரிகையாளர் சூலவன்ச சிறிலால் இனந்தெரியாத நபர்களால் மிரட்டப்பட்டார்.
- ஒகஸ்ட் 4: 'ஏசியாவீக்' கைச் சேர்ந்த பத்திரிகையாளர் சி.ஐ.டியினரால் விசாரணை செய்யப்பட்டார்.
- 7: கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினன் கையெழுத்து சேகரிப்பின் போது செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள், ஆயுதம் தாங்கிய குண்டர் படையால் தாக்குதலுக்குள்ளானார்கள். இதன் போது சிறிலால் ஹம்ஸ், வருணா கருண்திலக, டெக்ரர் குறூஸ், அநுருத்ரா, சுதாமலவீர போன்ற உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர் தாக்கப்பட்டனர்.

  வீடியோ கமெரா உட்பட பெறுமதிவாய்ந்த உபகரணங்கள் நொருக்கப்பட்டன. பிளாஷ் லைட்டுகள் பறிக்கப்பட்டன.
- ஓகஸ்ட் 20: இத்தாக்குதலைக் கண்டித்து அமைச்சரவையின் வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டை பத்திரிகையாளர்கள் பகிஷ்கரித்தனர்.
- ஓகஸ்ட் 11: மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் இறுதிக்கிரியைகளின் போது கனத்தையில் வைத்து 'லங்கா கார்டியன்' ஆசிரியர்களில் ஒருவரான தயான் ஜெயதிலக தாக்கப்பட்டார்.
- ஓகஸ்ட் 17: 'அத்த' கார்ட்டூனிஸ்ட் யூனுஸ் இன் வீட்டினுள் நுழைந்த 15க்கு மேற்பட்ட குண்டர் கூட்டம், வீட்டைச்சேதப்படுத்தியதோடு, யூனுஸையும் மிரட்டினர்.
- ஓகஸ்ட் 18:யூனுஸ் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த போது காடையர் கூட்டம் ஒன்றினால் கத்திக்குத்துக்காளானார்.
- ஓகஸ்ட்25:யூனுஸ் மீண்டும் வீட்டில் வைத்து தாக்கப்பட்டார்.
- ஓகஸ்ட் 20:யூனுஸ் தாக்குதல் தொடர்பாக செய்தி வெளியிட்ட ஐலண்ட் ஆசிரியர் குழுவை சி.ஐ.டியினர் விசாரணைக்குள்ளாக்கினர்.
- செப்டம்பர்:சுதந்திர பத்திரிகையாளர் இயக்க கூட்டத்தில் கலந்து கொண்ட லேக்ஹவுஸ் பத்திரிகையாளரான கீர்த்தி எச்சரிக்கப்பட்டார்.
- ஒக்டோபர் 10: நுவரெலியாவிற்கு விற்பனைக்கென அனுப்பப்பட்டிருந்த யுக்திய, ராவய, பத்திரிகைகளை நகர மேயர் நளின் டி திலக் அள்ளிச் சென்றார்.
- ஒக்டோபர் 17:இதனை எதிர்த்து நுவரெலியாவில் பத்திரிகை விற்பனையிலீடுபட்ட யுக்திய, சரிநிகர் பத்திரிகையாளர் தாக்கப்பட்டனர். சரிநிகர் செய்தியாளரின் கமெரா பிளாஷ் பறிக்கப்பட்டது.
- ஒகடோபர் 23: முஸ்லீம் கட்சிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட கறுப்பு வெள்ளி நாள் தொடர்பாக மருதானை ஜும்மா பள்ளி வாசலின் முன்செய்திசேகரித்துக் கொண்டிருந்த பத்திரிகையாளர்கள் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டனர். லக்திவ, லங்காதீப, ராவய, ஆகிய பத்திரிகைகளைச் சேர்ந்த படப்பிடிப்பாளர்களது கமெரா நொருக்கப்பட்டது.
- டிசெ 10: சர்வதேச மனித உரிமைகள் தினத்திலன்று அது தொடர்பான செய்திகள் சேகரித்த ரய்ட்டர், அசோசியெட்டெட் பிரஸ், லங்காதீப பத்திரிகையாளர் தாக்கப்பட்டனர். லங்காதீப பத்திரிகையாளரின் கமெரா நொருக்கப்பட்டது.
- டிசெ 22: சித்த வைத்தியத்துறை மாணவர்கள் நடாத்திய எதிர்ப்பு போராட்டம் பற்றிய படங்களை எடுக்கவேண்டாமெனவும், செய்திகளை பிரசுரிக்க வேண்டாமெனவும் பொலிஸார் எச்சரித்தனர்.
- டிசெ 23: 'அத்டித' செய்தியாசிரியர் ரூபசிங்கவினது றாகமவிலுள்ள வீட்டிற்கு ஆயுதம் தாங்கிய நபர்கள் இரவு 11 மணியளவில் சென்று பெற்றோல் குண்டு வீசினர்.
- டிசெ 30:'கொலம' பத்திரிகை அச்சிடும் அச்சகத்திற்கு சென்ற இனம் தெரியாத நபர்கள் பத்திரிகையை அச்சிடக் கூடாது என மிரட்டியுள்ளனர்.

## பேச்சும் மூச்சும்



ஜனவரி 14முதல் 21 வரை பத்திரிகையாளர் வாரம் ஒன்றினைப் பிரகடனப்படுத்தி இருந்தார்கள் சுதந்திரப் பத்திரிகை இயக்கத்தினர்.


தொடர்பு சாதனங்களின் சுதந்திரமான பணியையும், சமூகப்பங்கையும் வலியுறுத்தியும்,பத்திரிகையாளர் மீதான வன்முறையையும் தணிக்கையையும் கண்டித்தும் மக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரம் விநியோகித்தார்கள். சுவரொட்டிகள் ஒட்டினார்கள்.
கூட்டம் வைத்தார்கள்.

இதனை இருட்டிப்புச் செய்வதற்காக, ஒட்டப்பட்ட சுவரொட்டிகளின் ஈரம் காயுமுன்னரே பல இடங்களில் பாதுகாப்பு படையினரின் 'எச்சரிக்கைச் சுவரொட்டிகள்' அதற்கு மேல் ஒட்டப்பட்டன.

இருந்தும் ஜன.21ந் திகதி மாலை நுகேகொடையில் நடந்த சுதந்திரப் பத்திரிகையாளரது பொதுக் கூட்டத்தில் மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டது அவர்களது முகத்தில் கரி பூசுவதாயிற்று.
சீப்பை ஒழித்து வைத்து கலியாணத்தை நிறுத்தப் பார்க்கிறார்களோ?




'கொலய' ஒரு வாராந்த சிங்களப் பத்திரிகை. ஆசிரியர் சிந்தன் ஜயசேன, 'துக்களக் சோ' பாணியிலான கிண்டலும், நையாண்டியும் கொண்டது. இதுவரை ஆறு இதழ்கள் மட்டுமே வெளியானது. ஆறாவது இதழ் அச்சடிக்கும் போது ஆயுதந்தாங்கிய நபர்கள் சென்று 'பத்திரிகையை அச்சிடக் கூடாது. மீறினால் சுட்டுத்தள்ளுவோம்' என மிரட்டியுள்ளர்.
பாதி அச்சிடப்பட்ட நிலையில் மீதி போட்டோ பிரதி மூலம் வெளியாயிற்று.
இதுவரை ஏழாவது இதழ் வரவில்லை. விசாரித்ததில் இனிவராது என்று தெரிந்தது. இன்றைய பத்திரிகையில் ஜனாதிபதி கூறியுள்ளார். ''ஸ்ரீ.ல.சு.க.அரசு தான் வேக்ஹவுஸை கையேற்றது. 'தவச'வை இழுத்து மூடியது. நாங்கள் அப்படிச் செய்வதில்லை'.
அப்போ இப்படித்தான் என்று சொல்கிறார்களே.



ஒரு துயரமான செய்தி.
ஈழநாடு ஆசிரியராகவிருந்த திரு ந.சபாரத்தினம் அவர்கள் காலமானார் என்பது.

கடந்து போன மூன்று தசாப்தங்களும் தமிழ் மக்களுடைய வரலாற்றில் மிக நெருக்கடியான காலங்கள் குறிப்பாக பத்திரிகையுலகு. அதுவும் யாழ்பாண பத்திரிகையுலகு மிக மோசமாக நெருக்கடிகளைச் சந்தித்த காலம்.

தமிழ் மக்கள் ஒடுக்கு முறையையும், இவை பற்றிய செய்திகளைத் தரும் பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் நெருக்கடிகளையும் எதிர்நோக்கிய காலம். இன்று அது தொடர்கிறது.

அந்த இக்கட்டான காலகட்டத்தில் ஆசிரியராக இருந்தவர் சபாரத்தினம் அவர்கள். ''அவரது பரந்த அறிவு, அனுபவம் என்பவற்றுடன் தனக்கே உரிய தனிநடை, அபாயகரமான நெருக்கடிக்குள்ளும் அஞ்சாமையுடன் மண்ணின் குரலாக எழுதப்பட்ட பத்திகள் என்பன தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் உண்மையாய் எழுதப்பட்ட பதிவேடுகள்'' என்கிறார் 'ஊரடங்கு வாழ்வு'(1985) என்ற சபாரத்தினம் அவர்களது குறித்த சில ஆசிரிய தலையங்கங்களை தொகுத்து வெளிவந்த புத்தகத்தின் அறிமுகவுரையில் கலாநிதி பொ.சிரகுபதி.

நன்றி - நூலகத்திட்டம்



# சமஸ்டி: ஊரை ஏமாற்றும்

**- பரந்தாமன்**

ஸ்ரீநிவாசன் அவர்களது முன்மொழிவுகளை அடுத்து, அரசியல் வட்டாரங்களில், அவை தமிழ் மக்களது பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண அக்கறையுடன் முயல்கின்றனவோ இல்லையோ, பரவலாகப் பேசப்படுவது 'சமஸ்டி' முறையிலான ஆட்சியமைப்பு முறைபற்றியே. சமஸ்டி முறை ஒன்றின் மூலம் எமது பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று கொழும்புப் பத்திரிகைகளும் தமது 'அக்கறையை' வெளிக்காட்டிக் கொள்ளும் நோக்குடன் எழுதித்தள்ளுகின்றன. ஆனால் அரசியல் வாதிகள் முதல் பத்திரிகையாளர்கள் வரை யாருமே சொல்லாத ஒரு விடயம், 'சமஸ்டி' என்ற ஒற்றை வார்த்தையில் எதுவும் உள்ளடங்கிவிடவில்லை என்பதாகும். 'சமஸ்டி' என்ற பதத்தால் அழைக்கப்படும் இந்த ஆட்சிமுறை உண்மையில் எதைத்தான் சொல்கிறது? அது திட்ட வட்டமான வரையறுக்கப்பட்ட ஒரு ஆட்சி முறை பற்றிய கோட்பாடா? அது இலங்கைத் தமிழ் மக்களது பிரச்சினையை தீர்க்குமா? என்பது பற்றி அறிந்து கொள்வது, இச்சூழ்நிலையில் மிகவும் அவசியமானதாகும்.

ஒரு நாடு பல நிர்வாகப் பகுதிகளாக்கப்பட்டு, அவை பகுதி அரசாங்கங்களால் ஆளப்படுவதும், இவ் அரசாங்கங்கள் அனைத்தையும் இணைக்கிற ஒருமைய அல்லது மத்திய அரசாங்கத்தையும் கொண்டதுமான ஆட்சி முறையே 'சமஸ்டி' என்ற பதத்தால் அழைக்கப்படுகின்றது. இப்பொதுப்படையான வரைவிலக்கணம் பலமொழி பலமத, பல இன மக்களிடையே ஐக்கியத்தைப் பேண உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு இது என்றதற்கு மேல் எந்த அர்த்தத்தையும் கொண்டிருக்கவில்லை. அனைத்து மக்கட் பிரிவினருக்கும் நிர்வாகத்தில் சமவாய்ப்பும், அதிகார ஒழுங்கை இலகுபடுத்தவுமென சிபார்சு செய்யப்பட்ட இவ்வமைப்பில் மக்களுக்கு வழங்கப்படும் உரிமைகள், அதிகாரங்கள், வாய்ப்புகள் என்பன பற்றிப் பேசாமல் வெறும் 'சமஸ்டி' என்று பேசுவது ஊரை ஏமாற்றும் செயலே அன்றி, நடைமுறைக்கான செயல் அல்ல என்பது வெளிப்படை.

மக்களுக்கான அதிகாரத்தைப் பொறுத்து, சமஸ்டிக்கான சிறந்த உதாரணங்களாக கனடா, சுவிற்ஸ் சலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளையும் அரைகுறைச் சமஸ்டிக்கு உதாரணமாக இந்தியாவையும் முதலாளித்துவ அரசியல் விஞ்ஞானிகள் குறிப்பிடுவர். இலங்கையின் மாகாண சபையை கணக்கிலெடுத்து, சமஸ்டிப் பண்புகள் சிலவற்றைக் கொண்ட நாடு இது என்று கூறுவர். ஆனால் உண்மையான சமஸ்டி முறை இந்த முதலாளித்துவ அரசமைப்பின், கீழ் வெற்றி பெற அந்த நாட்டின் தேசியப்பிரச்சினைகளை மையமாக வைத்து உருவாக்கப்படும் போதே சாத்தியமாகும்.

ஓர் சமஸ்டி ஆட்சி முறையின் வெற்றிக்கு உறுதியான அரசியல் அமைப்பும் அதன் நெகிழ்வற்ற தன்மையும் இன்றியமையாதனவாகும். அதாவது சமஸ்டி அரசியலமைப்பு இலகுவில் மாற்றக் கூடிய ஒன்றாக இருத்தல் கூடாது. மாற்ற வேண்டிய அம்சம் குறிப்பிட்ட ஓர் சமஸ்டி அரசு சம்பந்தப்பட்டவிடயமாக இருந்தால் அச்சமஸ்டி அரசின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியது இன்றியமையாததாகும். அமெரிக்காவின் அரசியலமைப்பை மாற்ற அல்லது திருத்த வேண்டுமாயின் அதற்கான தீர்மானம் மத்திய அரசின் இரு சட்டசபைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுவதோடு 3/4 பங்கு மாநில சட்டமன்றங்களினால் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இந்தியாவில் சில விடயங்களைத் திருத்தவதற்கு மத்திய பாராளுமன்றத்தில் சாதாரண பெரும் பான்மையும் வேறு சில விடயங்களைத்திருத்துவதற்கு மத்திய பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையும் கூட்டாட்சித் தன்மை அதிகாரப் பங்கீடு போன்ற விடயங்களைத் திருத்துவதற்கு பாராளுமன்றத்தின் 2/3 பெரும் பான்மையுடன் 1/2 வாசிக்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆதரவும் தேவையானதாகும். குறிப்பிட்ட மாநில பிரச்சினை தொடர்பில் குறித்த மாநிலத்தின் சம்மதம் தேவை என்பது அங்கு கட்டாயமானதாக குறிப்பிடப்படவில்லை.

இலங்கை மாகாணசபை அரசாங்க முறையில் அரசியலமைப்பைத் திருத்துவதற்கு பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை மட்டும் போது மானதாகும். மாகாண அரசாங்கங்களின் சம்மதம் எதுவும் தேவையானதல்ல. குறிப்பிட்ட திருத்தம் சிறுபான்மைத் தேசிய இனங்களிற்கு எதிராக இருந்தாலும் பாராளுமன்றத்தில் 3/4பங்கு அங்கத்துவம் பெரும்பான்மை தேசிய இனத்திற்கு இருக்கும் போது சட்டத்தை நிறை வேற்றுவது எதுவும் கஷ்டமானதல்ல. மாகாண அரசாங்கங்களின் சம்மதம் தேவை எனக் கூறப்பட்டாலும் கூட வடக்கு, கிழக்கு என்கின்ற இரு மாகாணங்கள் மட்டும் சிறுபான்மைத் தேசிய இனங்களிற்கு உரியதாக இருப்பதனால் இலகுவாக பெரும்பான்மைத் தேசிய இனம் தங்களுக்கு சாதகமான சட்டங்களை இயற்றுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இவ்விடத்தில் குறிப்பிட்ட மாகாணத்தின் சம்மதம் என்பதே அதற்கு பாதுகாப்பானதாக இருக்கும். இது தொடர்பாக 2/3 பெரும்பான்மையுடன் 6வது திருத்தச் சட்டம் தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிராக நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே. சுவிற்ஸ்சலாந்து அரசியலமைப்பில் குறிப்பிட்ட மாநிலத்தின் அனுமதி தேவை எனக்கூறப்படாவிட்டாலும், பெரும்பான்மையான குறுநிலப்பகுதிகளின் அனுமதி தேவை எனக் கூறப்படுகின்றது.

அடுத்த முக்கியமான விடயம் அதிகாரப் பங்கீடாகும்.

மத்திய-மாநில அரசுகளுக்கிடையே பங்கிடப்படும் அதிகாரப் பங்கீடானது அரசியலமைப்புரீதியாக உத்தரவாதப்படுத்தப்படுவதோடு அதன் நடைமுறைச் செயற்பாட்டிற்கும் அரசியலமைப்புரீதியாக உத்தரவாதம் இருப்பது அவசியமானதாகும். பங்கீட்டைப் பொறுத்த வரையிலும் முழுமையான சமஸ்டி ஆக இருப்பின் குறிப்பிட்ட அதிகாரங்களை மட்டும் மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கிவிட்டு ஏனைய அதிகாரங்களை மாநில அரசாங்கங்களின் கைகளில் விட்டு விட வேண்டும் என்றே அரசியலறிஞர்கள் எதிர்பார்க்கின்றனர். அமெரிக்க சமஸ்டியில் வெளியுறவு, போர், அமைதிப்பிரகடனம், நாணயம் வெளியிடுதல், வெளிநாட்டுவர்த்தகம், அஞ்சல் துறை, பாதுகாப்பு போன்ற விடயங்களைத்தவிர ஏனையவை தொடர்பிலான அதிகாரங்கள் யாவும் மாநில அரசுகளிற்கு கொடுக்கப்பட்டுள்ளன. அங்கு மாநில அரசுகள் தமக்கென ஒதுக்கப்பட்ட விடயங்களில் பூரண அதிகாரங்களைப் பெற்றுள்ளன. அவற்றின் அதிகார பிரயோகத்திற்கு தடையாக எவையும் கிடையாது. ஒவ்வொரு மாநில அரசுகளும் தங்களுக்கென தனியான அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ளவும் உரிமைகளைக் கொண்டுள்ளன.

இந்தி ச சமஸ்டியில் அதிகாரங்கள் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல் பொதுப்பட்டியல் என மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மத்தியப்பட்டியலில் மத்திய அரசாங்கமும், மாநிலப்பட்டியலில், மாநில அரசாங்கங்களும், பொதுப்பட்டியலில் இரு அரசாங்கங்களும், சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. குற்றவியல் சட்டம், ஒப்பந்தங்கள் தொழிற் சங்கங்கள், கல்வி போன்ற விடயங்கள் இப்பொதுப்பட்டியலில் உள்ளன. இவற்றில் சட்டங்களை இயற்றும் போது மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும், இடையே முரண்பாடு காணப்படின் மத்திய அரசினுடைய சட்டமே செல்லுபடியானதாக இருக்கும்.

இந்திய அரசியலமைப்பில் மாநில அரசுகள் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்கும் போது மத்திய அரசின் தடைகள் பலவற்றையும் சந்திக்க வேண்டியுள்ளன. மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு எதிர்க்கட்சிகளின் அரசாங்கம் உள்ள மாநிலங்களில் இவ் அதிகாரத்தினை மத்திய அரசாங்கம் அரசியல் பழிவாங்கலுக்காக பயன்படுத்தலாம். 1991 இல் தமிழ்நாட்டில் தி.மு.க அரசாங்கம் கலைக்கப்பட்டமை இவ்வாறான ஒன்றே. மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் மாநில நிர்வாகத் துறைத்தலைவாரான ஆளுனரும் தன்னிச்சையாக பிரயோகிக்கக் கூடிய சில அதிகாரங்களைப் பெற்றவராக விளங்குகின்றார். இதனால் இவரும் மாநில அரசின் அதிகார பிரயோகத்திற்கு தடையாக விளங்குகின்றார். இதைவிட மாநில அரசின் சட்டநிர்வாக, பொதுநிர்வாக, நீதிநிர்வாக அதிகாரங்கள் அதற்கு கொடுக்கப்பட்ட போதும் அதன் அதிகாரிகள் மத்திய அரசினாலேயே நியமிக்கப்படுகின்றனர். உதாரணமாக இந்திய நிர்வாக சேவை, (I.A.S) இந்திய பொலிஸ் சேவை (I.P.S)இந்திய நீதிச் சேவை (I.J.S)என்பவற்றின் அதிகாரிகள் மத்திய அரசினாலேயே நியமிக்கப்படுகின்றனர்.

இலங்கை மாகாண சபை அரசாங்க முறையிலும் அதிகாரங்கள் மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் பட்டியல், மாகாண அரசின் பட்டியல், ஒத்தியங்கு பட்டியல் என்பனவே அம்மூன்று வகைகளுமாகும். மத்திய அரசின் பட்டியலில் மத்திய அரசும், மாகாண சபைப்பட்டியலில் மாகாண சபைகளும், ஒத்தியங்கு பட்டியலில் இரு அரசுகளும் சட்டமியற்றலாம் என அரசியலமைப்பு கூறுகின்றது. ஒத்தியங்கு பட்டியலில் சட்டங்களை இயற்றும் பொழுது மத்திய அரசாங்கம் எல்லா மாகாணசபைகளையும் மத்தியப் பாராளுமன்றத்தையும் கலந்தாலோசித்த பின்னரே சட்டங்களை இயற்றுதல் வேண்டும்.

மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏனைய சமஸ்டி அரசாங்கங்களோடு ஒப்பிடுகின்ற போது மிகக் குறைவாக இருக்கின்ற அதேவேளை ஒதுக்கப்பட்ட விடயங்களில் அதிகாரங்களை பிரயோகிப்பதிலும் பலதடைகள் காணப்படுகின்றன. ஒதுக்கப்பட்ட விடயங்களில் ஏறத்தாழ ஒன்பது விடயங்களில் எவ்வளவு அளவுக்கு சட்டங்களை இயற்றலாம் என்பதை மத்திய பாராளுமன்றமே ஓர் சட்டத்தை இயற்றி மாகாணசபைகளுக்கு அனுமதி கொடுத்தல் வேண்டும். வரிகளை அறவிடுதலிலும் மத்திய பாராளுமன்றத்தின் இவ் அனுமதி அவசியமானதாகும். இத்தகைய ஏற்பாடுகள் சிறுபான்மைத் தேசிய இனங்களின் மாகாண சபைகளுக்கு பாதகமானதாகவே அமையும். சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை பாராளுமன்றம் இவ்விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பது வெளிப்படை. வடக்கு-கிழக்கு மாகாண சபை, சட்டத்தை இயற்றி இலங்கைப் போக்குவரத்துச் சேவையை பொறுப்பெடுக்க முயன்ற போது பாராளுமன்றம் சட்டத்தை இயற்றித் தடுத்தமை யாவரும் அறிந்ததே.

மேலும் மாகாண சபைகளின் அதிகாரப் பிரயோகத்திற்கு ஆளுநரும் பிரதான தடையாக விளங்குகின்றார். மக்களினால் தெரிவு செய்யப்படாமல் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை; அமைச்சரவையிலும் பார்க்க மேலான அதிகாரம் படைத்தவராக விளங்குகின்றார். மாகாண சபையைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல், மாகாணசபை இயற்றும் சட்டங்களிற்கு சம்மதமளித்தல், தனக்கென ஒதுக்கப்பட்ட நிர்வாகக் கடமைகளை மேற்கொள்ளுதல் என்கின்ற விடயங்களில் அதிகாரம் உடையவராக விளங்குகின்றார். ஏதாவது ஒரு விடயத்தில் மாகாண அமைச்சரவையின் முடிவுகளும் ஆளுனரின் முடிவுகளும் முரண்படுமானால் ஆளுனரின் முடிவே செல்லுபடியானதாக இருக்கும். தனக்கென ஒதுக்கப்பட்ட விடயங்களைத் தவிர ஏனைய விடயங்களில் மாகாண அமைச்சரவையின் ஆலோசனையின் படி ஆளுனர் நடக்க வேண்டும் என அரசியலமைப்பு கூறினாலும், அது தொடர்பாக எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாத நிலையேயுள்ளது.

மாகாண சபைகளுக்கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்களிலும் இந்திய சமஸ்டி அமைப்பைப் போல சட்டமும் ஒழுங்கும் காணி உரிமைகள் என்பன மாகாண சபைகளிடம் கொடுக்கப் படவில்லை. அது. தொடர்பிலான அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடமே கொடுக்கப்பட்டுள்ளது. நுணுக்கமாக பார்த்தால் மாநகர சபைகள் போன்ற உள்ளூராட்சி சபைகளிற்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் அளவுக்கே மாகாண சபைகளிற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இந்திய சமஸ்டி அமைப்பிலும் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இலங்கை மாகாணசபை அமைப்புமுறை உள்ளது.

சமஸ்டி ஆட்சி முறையில் மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கு இடையேயும், மாநில அரசுகளிற்கு இடையிலேயேயும் முரண்பாடுகளை பக்கம் சாராது தீர்ப்பு வழங்குவதற்கு என ஓர் நீதிமன்றம் அவசியம் என சமஸ்டிக் கோட்பாட்டாளர்கள் கருதினர். இதற்காக அரசியல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதிகாரம் வாய்ந்த உயர் நீதிமன்றத்தை சிபார்சு செய்தனர். ஆனால் பெரும் பாலான சமஸ்டி ஆட்சிநாடுகளில் இவ் உயர்நீதிமன்றம் மத்திய அரசிற்கு சார்பாகவே இயங்குகின்றது. இந்திய உயர் நீதிமன்றம் தொடர்பாக இக்குற்றச்சாட்டு அதிகமாக சுமத்தப்பட்டுள்ளது. இலங்கை உயர்நீதி மன்றம் பற்றிக் கூறவே தேவையில்லை. இலங்கை நீதிமன்றங்களின் தன்மைக்கு கோடீஸ்வரன் வழக்கு, தமிழ்த்தலைவர்கள் மீதான ட்ரயல் அட்பார் வழக்கு நல்ல உதாரணங்களாகும். 1990 இல் வடக்கு-கிழக்கு மாகாணசபை உத்தியோக ரீதியாக கலைக்கப்படாமலே கலைந்து ஓடிய போது முதலமைச்சரின் ஆலோசனையின் படியே மாகாண சபைகளைக் கலைக்கலாம் என்ற பாதுகாப்பு ஏற்பாட்டை உயர் நீதி மன்றம் அவ்உரிமையை ஆளுநருக்கு வழங்கியதன் மூலம் இல்லாமல் செய்தது.


**பரந்தாமன்**

சமஸ்டிபற்றி: ஒரு கட்

"

நம்பிக்கையீன

பேரா



பேராசிரியர் பஸ்

'சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்தை எடு
டால், முதலாவதாக இந்தியவம்சாவளியின
கள் அழிக்கப்பட்டதுடன் சிறுபான்மை மக்க
கையின்மை தோன்றியது. இதன் பிறகு 1956
பிரச்சினை இதை மேலும் வளர்த்துவிட்டது.
கையின்மையை குறைக்க பண்டா-செல்வ
எழுதப்பட்டது. ஆனால் அதை அவர்கள்
போகவில்லை. பிறகு டட்லி சேனநாயக்கவி
நடந்தன. அவையும் கைவிடப்பட்டன. இ
நம்பிக்கையின்மையைப் பலமாக வளர்த்து
இந்த நம்பிக்கையீனம் முற்று முழுதாக
தற்கு, தமிழ்மக்கள் திருப்திப்படுத்தப்படுவ
அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்து மி
உரிமைகள் சலுகைகள் உத்தரவாதப்படு
தமிழ் மக்களை திருப்திப் படுத்தவோ, நம்பிக்
அகற்றவோ முடியாது.

பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை அவர்க
பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'சம
கருத்துக்கள் குறித்து உரையாட சரிநிகரிலி
ருந்தோம். 'சமஸ்டி' முறை ஒன்றை அமை
இந்நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை தீ
என்ற சிங்கள தமிழ் கட்சிகளினதும் இலங்
யப்' பத்திரிகைகளதும் கருத்துக்கள் குறித்து
வித்த கருத்துக்கள் கவனிப்பிற்குரியவை. 'ச
பதம் சிங்கள மக்களை பயங்கொள்ள வைக்
மாற்றப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி என்று
குப் பெயர்வைத்தது சிங்கள மக்களிடையே
(Thamil Kingdom) என்ற அர்த்தத்தில் புரிந்து
டதால், அவர்கள் மிகவும் அச்சத்துக்கு
எனவே சமஸ்டி என்ற பதத்தைப் பாவிப்பது
யில் பலத்த சிக்கல்களை எழுப்ப இடமுண்டு.
சமஸ்டி என்ற சொல்லை அரசியலமைப்பில்
குப்பதில் சமஸ்டி அரசுக்குரிய உரிமைகளை
ஒரு திருத்தத்தை அரசியலமைப்பை மாற்று
கவே வழங்கிவிட முடியும். ஆனால் அரசிய
மாற்றத்தை ஏற்படுத்தாமல் எத்தகைய மாற்ற
படுத்தி விட முடியாது. ஏனென்றுல், சிறுபான்
ளுக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்கள் சலு
மைகள் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாத
டாத விடத்து, சிறுபான்மை மக்கள் அதை ந
தில்லை.

ஒற்றை ஆட்சி, சமஸ்டி ஆட்சி முறை என்பன
பஸ்தியம்பிள்ளை அவர்கள் தெரிவித்
யுஙகள் கீழே.

**சரிநிகர்: இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க சமஸ்டி தான் சிறந்த வழி என தமிழ் கட்சிகளும் சிங்களக் கட்சிகள் சிலவும் அண்மைக்காலங்களில் தொடர்ந்து பேசிவருகின்றன. உண்மையில் இந்த ஒற்றை ஆட்**

சிக்கும் சமஸ்டி
வேறுபாடுகள் எ
பஸ்தி:ஒற்றை ஆ
மத்திய அரசாங
அதன் அதிகாரம
எப்பகுதிக்கும்
கூடியதாக இருக்

நன்றி - நூலகத்திட்டம்



# ...சயலோ?

...ரை + ஒரு நேர்காணல்

# "...பான்மையினரின் ... தொடரும் வரை ...ச்சினை தீராது"

...ரியர் பஸ்தியாம்பிள்ளை



...பிள்ளை

காரங்களைப் பிரித்து, இறைமையைப் பிரித்து மற்றவர்களுக்கு கொடுக்கலாம். ஆனாலும் அதன் முழு அதிகாரமும் அதனிடம் மட்டுமே இருக்கும்.

சமஸ்டி அரசாங்கத்தில் பிரிவுகள் புவியியல் ரீதியாக உருவாக்கப்பட்டு அவற்றுக்கென தனி அதிகார நிறுவனங்கள் உருவாக்கப்படும். அவற்றிற்கு சிற்சில அதிகாரங்கள் பிரித்து வழங்கப்படலாம். இதனால் உண்மையில் இறைமை அழிந்தோ குறைந்தோ போவதில்லை. ஆனால் எல்லோரும் சேர்ந்து இறைமைக்குப் பாதகம் இல்லாமல் ஆட்சி செலுத்தலாம்.

ஆனால் இங்குள்ளவர்கள் இறைமை போய்விடும் என்று பயப்படுகிறார்கள். ஆனால் உண்மையில் எமது இறைமை இப்போதே குறைந்துதான் உள்ளது. இன்றைய எமது சர்வதேச வர்த்தகம் அன்னியச் செலாவணி கடன் என்பவற்றில் எமது இறைமை குறைந்து விட்டதென்பது வெளிப்படை. பண்டைய அரசுகள் போல தனியதிகாரம் படைத்த தீவுகள் போன்ற அரசுகள் இன்று இல்லை. U.N.O, I,L,O போன்ற அமைப்புகளில் சேரும்போது நாம் எமது இறைமையில் ஒருபகுதியை விட்டுக் கொடுக்கிறோம் அல்லது இழக்கிறோம். உதாரணமாக ஐ.நாவின் நீதிக் கோட்பாடுகளை ஏற்பதன் மூலம் நாம் எமது நீதிசெலுத்தும் அதிகாரத்தை இன்னொருவருக்கு கொடுத்து விடுகிறோம்.....!

**சரிநி: இனப்பிரச்சினையை தீர்க்க சமஸ்டி முறை எந்தளவுக்கு உதவலாம்?**

**பஸ்தி:** இனப்பிரச்சினை உண்டாவதற்கான அடிப்படைக் காரணம் பெரும்பான்மையினர் வழங்க வேண்டிய உரிமைகளையோ, சலுகைகளையோ சிறுபான்மையினருக்கு வழங்க மறுத்தமையே ஆகும். சிறுபான்மையினர் தமது உரிமைகளைப் பெற முடியவில்லை என்பதனால் பெரும்பானமையினர் மீது அதிருப்தி கொண்டார்கள்; அவர்கள் மீது நம்பிக்கை இழந்தார்கள். அவர்கள் எம்மை நியாயமான முறையில் நடாத்த மாட்டார்கள் என்று கருதினார்கள். நாட்டின் சகல வளங்களும் சரியான முறையில் பகிரப்படாமையும், அனைத்தையும் அவர்களே அபகரித்துக் கொள்கிறார்கள் என்பதும் இந்த நம்பிக்கையீனத்தை மேலும் வலுப்படுத்தி விட்டது. சமஸ்டி முறையானது இவர்களை தாமே தமது மூலவளங்களைப் பயன்படுத்தி விவசாயம், கைத்தொழில் போன்ற துறைகளிலான திட்டமிடல் முயற்சிகளில் இவர்கள் ஈடுபட உதவும். இதனால் இவர்கள் அவர்களை நம்பி வாழ வேண்டி இருக்காது. இது நிலவும் நம்பிக்கையீனத்தையும் போக்கிவிடும் என்று கருதுகிறேன்.

**சரிநி: ஒற்றை ஆட்சிக்கு உட்பட்டு, அதாவது அரசியல் அமைப்பை மாற்ருமல் சமஸ்டியை கொண்டுவர விரும்புகின்றனர். இது சாத்தியமா?**

**பஸ்தி: ஆம், அதற்கு வழி இருக்கிறது. ஏனென்றால் உதாரணமாக 13வது திருத்தச் சட்டம் அவ்விதமான மாற்றங்களை கொண்டு வந்தது. அதன்படி சிலசில கடமைகள்** உரிமைகளை அவர்கள் இந்த மாகாணங்களிடம் ஒப்படைப்பார்கள் என்று தீர்ப்பளித்தார்கள். அதன் படி எவ்வளவு தூரம் மாகாணங்களுக்கு இந்த உரிமைகள் வழங்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கு தூரத்திற்கு சமஸ்டி முறையிலுள்ளது போன்ற நிலைமையை இங்கு கொண்டு வர முடியும். ஆனால் இவை கொடுக்கப்படும்போது அரசியலமைப்பில் மாற்றத்தினை உண்டாக்கி இன்ன இன்ன விடயங்கள் மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்டவை, இவை இவைகளில் நாம் தலையிடமாட்டோம் என்ற உத்தரவாதத்தை கொடுக்க வேண்டும்.

**சரிநி: அதாவது அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தாமல்....**

**பஸ்தி:** இல்லை, யாப்பில் மாற்றம் செய்யப்படவேண்டி வரும். அப்படிச் செய்யத்தான் வேண்டும். ஆனால் சமஸ்டி அமைப்பு முறை என்று பகிரங்கமாக கூறிச் செய்ய வேண்டியதில்லை. மாற்றம் செய்ய வேண்டும். அல்லாவிட்டால் ஒருவரும் நம்பமாட்டார்கள். ஏனென்றால் நம்பிக்கையின்மை ஏற்கனவே பலமாக வளர்ந்துவிட்டது.

**சரிநி: சமஸ்டி என்பது தெளிவாக்கப் படாமல், இந்தியா போன்றதொரு அரைகுறை சமஸ்டி வடிவம் பேணப்படுவது இந்திய மாநிலங்களில் சிக்கல்களை உருவாக்கி உள்ளது. அவ்வகையில் இங்கும் அடிப்படையில் சமஸ்டி அரசியல் யாப்பைக் கொண்டு வராவிடில் சிறுபான்மையினரின் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா?**

**பஸ்தி:** ஆம், முடியும் இந்தியாவைப் பொறுத்தவரை அங்கு ஏற்பட்ட நிலமையை நாம் விளங்கிக் கொள்ள முடியும். உண்மையிலேயே ஆரம்பத்தில் இந்தியாவில் சமஸ்டி முறையை கொண்டு வரவே விரும்பினார்கள்; அந்த நோக்கம் இருந்தது. ஏனென்றால் இந்தியா ஒரு நாடாக இருக்கவில்லை. பிரித்தானியர்கள் ஒருமுகப் படுத்தப் பிரித்தார்கள். அப்போது அது 565க்கு மேற்பட்ட சம்ஸ்தானங்களாக இருந்தது. அவை எல்லாவற்றையும் ஒன்று சேர்க்கும் போது, அவர்களிடம் இருந்த அதிகாரங்களை பிடுங்கி மத்திய அரசாங்கத்திடம் வழங்காமல், இந்தியாவின் பாதுகாப்பு, அது ஒரு தனிநாடாக விளங்குதல் என்பவற்றுக்கு தேவையான அதிகாரங்களை மட்டும் வைத்துக் கொண்டு மற்றையவற்றை மாநிலங்களுக்கு பிரித்து வழங்கி விடவே விரும்பினார்கள். ஆனால் பாகிஸ்தானின் பிரிவு அவர்களுக்கு பயத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால், பாகிஸ்தான் பிரிந்தபோது காஸ்மீரிலும் குழப்பம் ஏற்பட்டது. அதனால்தான் அவர்கள் அதை மாற்றி Union of states என்ற பெயரை வைத்தனர். அப்போது மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் கூட்டப்பட்டன. ஆனால் அப்படி மாற்றத்தைச் செய்யாமல் கூட யாப்பை அமைக்க முடியும். உதாரணமாக மத்திய அரசுக்கு அரசியலமைப்பு சட்டத்தின் 356வது சரத்தின்படி ஒரு மாநில அரசாங்கத்தை கலைக்க முடியும். ஆனால் நாம் அப்படிப்பட்டதொரு சரத்தை சேர்க்க வேண்டிய அவசியமில்லை. உதாரணமாக 370வது சரத்து காஷ்மீருக்கு சிறப்பான இடத்தைக் கொடுக்கிறது. அதன்படி வெளிநாட்டுக் கொள்கை, நாட்டின் பாதுகாப்பு, நிதி தவிர்ந்த ஏனைய விடயங்களில் தாம் தலையிடமாட்டோம் எனவும், அவ்வரசு தனது இறைமையை பூரணமாக அனுபவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறது. உண்மையில் இந்த சரத்தின் படி முழு அதிகாரங்களும் நடைமுறையில் வழங்கப்பட்டிருந்தால் இன்றைய காஷ்மீர் பிரச்சினை ஏற்பட்டே இருக்காது என்று சில அறிஞர்கள் கூறுகின்றார்கள். இந்தச் சரத்து இருந்தபோதும் அவசரகால சட்ட விதிகளின் கீழ் அதை நடைமுறைக்குப் போகவிடாமல் தடுத்து வைத்திருக்கிறார்கள்.

**சரிநி: அதாவது 356ன் படிதான் மாநிலங்கள் கவர்னரால் கலைக்கப்படக் கூடியதாக இருக்கிறது...**

**பஸ்தி:** ஓ.. ஒரு மாநிலத்தை கலைப்பது மட்டுமல்ல இதன் பகுதி 3இன் படி ஒரு மாநிலத்தை இன்னொரு மாநிலத்துடன் இணைத்து விடவும் முடியும். இப்படியான தடைகள் இருந்தால் உண்மையான சமஸ்டி இருக்காது. இந்தியாவில் சமஸ்டி என்ற சொல் இல்லாதது போல, அமெரிக்காவிலும் அது இல்லை. உண்மையில் அந்தச் சொல் வேண்டியது இல்லை. அந்த விடயம் வந்தால் போதும். இப்போது இலங்கையில் சமஸ்டி என்ற பெயர் பெரிதும் அச்சமூட்டும் ஒன்றாக மாறியுள்ளது. பெரும்பான்மையினர் இதையிட்டு பெரிதும் அச்சமடைகிறார்கள். தமிழரசு கட்சி என்று பெயர் இடப்பட்ட போது அதை சிங்களமக்கள் ''தமிழ்-அரசு'' (THAMIL KINGDOM) என விளங்கிக் கொண்டார்கள். அதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவ்வாறான மொழிபெயர்ப்பை கொடுக்க முடியும் தானே! சிங்கள மக்களை மயக்க இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டது. அதனால்தான் சமஸ்டி என்ற சொல்லை பாவிக்காமல், அந்த அம்சங்களை கொண்ட ஒரு யாப்பை நாம் உருவாக்கலாம் என நினைக்கிறேன்.

**சரிநி: சமஸ்டி என்ற வரையறைக்குள் என்னென்ன அதிகாரங்களை கொடுத்தால் அது சிறப்பாக இயங்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?**

**பஸ்தி:** முதலாவது, காணி- அங்குள்ள நிலங்கள். உதாரணமாக 370வது சரத்தின் படி காஷ்மீரில் வெளியார் குடியேற்றம் தடை செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் ஒருவர் குடியேறுவது அல்ல- திட்டமிட்ட வகையிலான தொழில், பண்ணை, குடியேற்றம் என்பவற்றுக்கு அவர்களது அனுமதி பெறப்படுவது அவசியமாக உள்ளது. ஆகவே காணி-நில உரிமை அவசியம்.

இரண்டாவது, பாதுகாப்பு அவசியம். உள்ளூர் பாதுகாப்பு- அதற்குரிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

மூன்றாவது, தொழிற்சாலைகளை அமைக்க அனுமதி இருக்கவேண்டும்.

நான்காவது, கல்வி முறை- உயர் கல்விகூடங்கள் நிறுவ, நடாத்த அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

மற்றது அவர்களுக்கென்று சிவில் சேவை அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். இப்படியான விடயங்களுக்கு நாம் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளை உதாரணங்களாக எடுத்துப்பார்க்கலாம். அதாவது முழுத்தீவினதும் பாதுகாப்பு, தபால் சேவை, தொலைபேசி, வெளிநாட்டுறவு போன்றவற்றை மத்திய அரசு கொண்டிருக்க முடியும். மற்றவற்றை அது வைத்திருப்பதில்லை. இந்தியாவைப் போல மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம் தவிர மற்றவற்றை கூட வழங்கிவிடலாம்.

**சரிநி: சமஸ்டி முறை உள்ள நாடுகளில் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்க எம்மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?**

**பஸ்தி: கனடாவை எடுத்துக் கொண்டால் அங்கு இனப்பிரச்சினை மட்டுமல்ல, உண்மையான** வேறுசில பிரச்சினைகளும் காணப்படுகின்றன. உதாரணமாக நியூபவுண்ட்லாண்டில் உள்ளவர்கட்கும் பிரிட்டிஸ் கொலம்பியாவுக்கும் இடையில் வித்தியாசங்கள் உள்ளன. இவை அவர்களது சிறப்பியல்புகள் என்றும், அவை அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கருதியே சமஸ்டியை அவர்கள் அறிமுகப்படுத்தினர். கலாசாரம் அடையாளத்துவம், தனித்துவம் என்பன பாதுகாக்கப்படுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதனால்தான் பிரான்சிய செல்வாக்குள்ள கியுபெக் மாகாணத்திற்கு சிறப்பான இடம் கொடுக்கப்பட வேண்டுமென அவர்கள் கூறுகின்றனர். அரசியல் அமைப்பில் இதை உறுதிப்படுத்த சில சரத்துகள் உள்ளன. அதாவது கலாசாரம் மதம் கல்வி என்பவற்றில் தலையிடாமை. ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் பல இன செல்வாக்குள்ள பிரதேசங்கள் உள்ளன. அவர்களின் சிறப்பான தன்மைகள் பாதுகாக்கப்பட வேண்டிய தென கருதி யாப்பில் சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் படி இவர்கள் உள்ளூர் விடயங்களை கவனிக்க முடியும் .

அவுஸ்திரேலியாவில் மேற்கு அவுஸ்திரேலியா ஒருகாலத்தில் பிரியமுற்பட்டது. தமது பகுதியின் அபிவிருத்தி புறக்கணிக்கப்படுவதாகக் கூறி அதிருப்தியுற்று பிரிந்து தனிநாடாகப் போக முயன்றார்கள். பிரிவதன் மூலம் தமது பகுதிகளை அபிவிருத்தி செய்ய முடியும் என நம்பினார்கள். ஆனால் இப்போது சமமான முறையில் நடாத்தப்படும் விதத்தில் சமஸ்டி ஆட்சி வழங்கப்பட்டபின், தம்மை வளப்படுத்துவதில் அக்கறை காட்டத் தொடங்கிய மேற்கு அவுஸ்திரேலியர் தற்போது தமது பழைய கோரிக்கையை கிட்டத்தட்ட மறந்தே விட்டார்கள்.

சுவிற்சலாந்தில் வளங்களை பகிர்ந்து கொள்வதில், காகரிகளை எடுத்து மத்தியப்படுத்தி பெரும்பான்மையினர் அனுபவிப்பதற்கு தடைகள் உள்ளன. ஒரு பிரதேசத்தில் கூடுதல் வளங்கள் ஏதாவது இருப்பின் அப்பிரதேசத்திற்கே கூடுதல் உரிமை உண்டு. பிறகே அது மத்தியத்துவப்படுத்தப்படும். பிரிட்டனில், ஸ்கொட்லாந்தில் உள்ளவர்கள் தமக்கு ஓரளவு சுயாட்சி வேண்டும் என்றார்கள். ஸ்பெயினில் ஸ்பாக் இனத்தவர் தமக்கு தனிநாடு கோரிப்போரிடுகிறார்கள். இப்படிப் பார்க்கையில் ஒற்றை ஆட்சியை விட சமஸ்டி முறையுள்ள இடங்களில் திருப்தி நிலவுகிற தென்றே சொல்ல வேண்டும். அமெரிக்காவில் எத்தனையோ வேறுபாடுகள் இருந்தும் அவர்கள் தம்மை அமெரிக்கர் என்றே அழைக்கின்றனர்.

**சரிநி: சோவியத் யூனியனின் தோல்வியை சமஷ்டியின் தோல்வி எனக் கூறலாமா?**

**பஸ்தி: இல்லை; நான் அப்படிக் கருதவில்லை. அங்கு ஒரு தனிக் கட்சியினதும் அதன் தலைவர்களதும் கட்டுப்பாட்டிலேயே முழுரஷ்யாவும் இருந்த்து. சுயாதீன செயற்பாட்டுக்கு கூடுதல் அதிகாரம் அங்கு வழங்கப்பட்டிருந்தும் நடைமுறையில் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலேயே எல்லாம் இருந்தன. உண்மையில் அங்கு இருந்தது உயர் அதிகாரக் குவிப்பு** ஆகும். இவ்வாறே யூக்கோஸ்லிலும் கட்சியும் இராணுவமுமே முழுமையான கட்டுப்பாட்டை கொண்டு இருந்தன. இன்று அதுவும் உடைந்துவிட்டது.

**சரிநி: தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவது சமஷ்டியின் வளர்ச்சி படிமுறையில் ஒன்று என்று கூறலாமா?**

**பஸ்தி:** சுயநிர்ணய உரிமை என்பது தனித்துவமாக பிரிந்து செல்லும் உரிமை அல்ல. தமது சொந்த எதிர்காலத்தை; தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை தான் அது. கலாசாரம், இனம், பொருளாதாரம், என்பவற்றை தீர்மானிக்கும் தன்மையை கொண்டு இருப்பது ஆகும். சோவியத்தில் இவ்வுரிமை இருந்த போதும் அங்கிருந்த ஒரு கட்சி ஆட்சிமுறை இதற்கு முரணான ஒன்றே ஆகும்.

**சரிநி: சமஸ்டியில் இலங்கையில் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வாய்ப்புண்டா?**

**பஸ்தி:** கொடுத்தால் பிரச்சி இல்லை. கொடுக்காவிட்டால் சந்தேகம் மேலும் வலுப்படும். நம்பிக்கையீனம் தொடரும் வரை பிரச்சினை தீரவாய்ப்பு குறைவு 'ஒரு நாட்டை, சந்தேகத்தின் மீது கட்டி எழுப்பிவிட முடியாது' நியாயமான முறையில் நடந்து கொண்டால் சந்தேகத்தை குறைக்க வாய்ப்பு உண்டு.

**சரிநி: தமிழ் மக்களின் பிரச்சினையை 13 வது அரசியல் திருத்தச் சட்டம் கூட தீர்க்கவில்லை. முழுமையான சமஷ்டி மாற்ருமா?**

**பஸ்தி:** 13 வது திருத்தச்சட்டமே விடயங்களை சரிவரச் செய்திருந்தால் கொஞ்சக் காலம் செல்ல திருப்தி உண்டாக்கியிருக்கக் கூடும்.

முதலாவது நிலம்பற்றிய விடயம்- அதை கொடுக்கவில்லை. இரண்டாவது குடியேற்றம்-இதை தொடர்ந்தும் செய்து வருகிருர்கள். மூன்ருவது 'சட்டமும் ஒழுங்கும்' அதுவும் மாகாணங்களுக்கு வழங்கப்படவில்லை, இதனால் தான் 13வது திருத்தம் வெற்றி அளிக்கவில்லை. அத்துடன் அதை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்கிறது. கவர்ணர் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவராக உள்ளார். இதனால் சந்தேகம் கொள்ள வேண்டி உள்ளது. ஜனாதிபதியின் விருப்பமே இறுதியில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டி உள்ளது.

ஜனாதிபதி பெரும்பான்மையினரின் பிரதிநிதியாகவே உள்ளார். எனவே சந்தேகம் எழவே செய்யும். மேலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை உயர் அதிகாரமத்திய மயப்படுத்தும் ஒரு முறையாகும். 13 வது திருத்தச் சட்டமோ சாரத்தில் இதற்கு நேரெதிரான திட்டமாகும். எப்படி இவை இரண்டும் ஒன்ருக சாத்தியாக முடியும்? இரண்டையும் ஒட்ட முடியாது.

இதைச் செய்தது ஒன்று அபிவிருத்தி, மற்றது அரசியல் ஸ்திரப்பாடு என்பவற்றுக்காகவே. தனிநாட்டு கோரிக்கை, சுயாட்சிக்கோரிக்கை என்பவற்றை சமரசப்படுத்த எடுத்த திட்டமாகவே இதை அவர் அறிமுகப்படுத்தினார் என்று நாம் விளங்கிக் கொள்ளலாம். எனவே இதைவைத்துக் கொண்டு நாங்கள் உங்களுக்கு அதிகாரம் தந்துள்ளோம் என்று சொல்ல முடியாது. அறிந்தளவில் சிங்கப்பூரை அப்படியே பிரதி செய்ய முயல்வது தெரிகிறது. ஆனால் சிங்கப்பூரில் ஒரு சின்ன (City state) நகர அரசு முறையே இருக்கிறது. அப்படியான இடத்துக்கு எல்லாவற்றையும் மத்தியத்துவப்படுத்தி முழு அதிகாரத்தையும் ஒருவரிடம் கொடுத்து நிர்வகிக்க முடியும். அது இங்கு சாத்தியமாகாது.

நன்றி - நூலகத்திட்டம்



முஸ்லிம் படுகொலைகள்

# வட கிழக்கை ஓரினப்படுத்தவா?

ஏறாவூர்

காத்தான்குடி

அழிஞ்சிப்பொத்தான

பொலநறுவை



மருதூர் பஷீத்

(கடந்த இதழ் தொடர்ச்சி)

## மரபுவழி முஸ்லீம் தலைமைகளும், சிங்களக் கட்சிகளும்

ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சார்ந்த மரபு வழி முஸ்லீம் தலைமைகள் (வடக்கு ) கிழக்கு முஸ்லீம்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளைப் பேணுவது தொடர்பாக இன்றுவரை எவ்வித செயல்திட்டத்தையும் முன்வைக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இந்த மரபுவழி முஸ்லீம் தலைமைகளால், (வடக்கு) கிழக்கில் தங்கியிருந்து நேரடியாகச் செயல்பட முடியாதிருக்கின்றது என்பது ஒரு புறமிருக்க பொருத்தமான தீர்வுகளை முன்வைக்குமாறு தாம் சார்ந்திருக்கும் சிங்களக் கட்சிகளை **நிர்ப்பந்திக்க கூட முடியாத நிலையிலேயே** அவர்கள் இருக்கின்றனர். மேலும் தாம் சிங்களக் கட்சிகளின் அடிவருடிகளாக இருப்பதை மறைக்கும் நோக்குடன் நடுநிலையான முஸ்லீம் அமைப்புக்களை உருவாக்க முனைகிறார்கள். 'முஸ்லிம் தகவல் நிலையம் (MIC) ஸ்ரீ லங்கா மக்கள் காங்கிரஸ் (SLPC) போன்றவை இதன் விளைவுளே. தமது சொந்த அரசியல் பொருளாதார நலன்களுக்காக தாம் சார்ந்திருக்கும் சிங்களக் கட்சிகளின் தயவை வேண்டி நிற்கும் இந்த மரபுவழி முஸ்லீம் தலைவர்கள் வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் நலன்களைப் பேணக்கூடிய தீர்வை முன்வைக்கும்படி இக்கட்சிகளை நிர்ப்பந்திப்பார்கள் என்பது வெறும் அர்த்தமற்ற எதிர்பார்ப்பாகவே அமையும்

மறுபுறத்தில் பேரினவாத உணர்வுகளை அடிப்படையாக் கொண்டே தேர்தலில் தமது வெற்றியை பெற்றுக்கொள்ளும் அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட, சிங்களக் கட்சிகள் வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் நலன்களுக்கு சாதகமான தீர்வுகளை முன்வைப்பார்கள் என்பதும் முன்னர் போன்றே வெறும் அர்த்தமற்ற எதிர்பார்ப்புக்குரியதாகத்தான் அமையும்.

## சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC)

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் 'தனித்துவமான' இளந் தலைவர் இலங்கையின் இன்றைய அரசியலில் ஒரு மந்திரவாதியின் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார். முஸ்லிம்களுக்கு மாத்திரமன்றி, முழுநாட்டையுமே வேரோடு அரித்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கும் உரிய தீர்வை மு.கா.வின் தலைவர் தனது சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டு திரிகிறார். (இன்னமும் அந்தத் தீர்வை வெளியே எடுத்துக் காட்டுவதற்குத்தான் அவருக்கு நேரம் வரவில்லை.) மற்றவர்களைப் பிரமிப்பில் ஆழ்த்துவதன் மூலம் முஸ்லீம்களின் அரசியல் உரிமைகளை வென்று கொள்ள முடியும் என்று அவர் எதிர்பார்க்கிறார். முழு நாட்டிலுமுள்ள முஸ்லீம்கள் விடயம் ஒரு புறமிருக்கட்டும். வடக்கு, கிழக்கு முஸ்லீம்களுக்குரிய பாதுகாப்பு, மற்றும் உரிமைகளைப் பேணும் விடயத்தில் கூட அவர் எவ்விதத்திலும் தனது நேர்மையை வெளிப்படுத்தவில்லை. மாறாக அவர், தன்னை ஒரு உயிருள்ள முரண்பாடாகவே வெளிப்படுத்தி வருகிறார். தான் பலவீனமடையும் சந்தர்ப்பங்களில் வீராவேசமாகப் உணர்ச்சி பொங்கப் பேசுவதோடு எதிர்க்கட்சிகளுடன் இணையும் போக்கையும் அவர் வெளிப்படுத்துவார். மறுபுறம் தனது நிலை ஓரளவு பலப்படும் போது வீராவேசம் தணிந்து பெட்டிப்பாம்பாகி அரசாங்கத்திற்கு முற்றிலும் விசுவாசமாக நடந்து கொள்வார். இந்த இரு வேறுபட்ட தன்மைகளையும் அவர் ''கறுப்பு வெள்ளியின்'' போது- ஒரே சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தினார். அதாவது பொலநறுவ முஸ்லீம்களின் படுகொலைகளுக்கான **முழுப் பொறுப்பையும்** அவர் **அரசின் மீது** சுமத்தினார். பாராளுமன்றத்தில் தாம் அரசாங்கத்திற்கு வழங்கும் **ஆதரவை** மீள்பரிசீலனைக்குட்படுத்தப் போவதாக எச்சரித்தார். ஆனால் அதே நேரத்திலேயே ''கறுப்பு வெள்ளியானது'' **எவ்விதத்திலும் அரசுக்கு எதிரானது அல்ல** என்பதை மிகவும் அழுத்தமாக தெளிவாக அவர் குறிப்பிட்டார். ஸ்ரீ.ல.மு.காங்கிரஸுடன் **தொடர்புபடாமல் மருதானை ஜும்மா பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட்ட ''கறுப்பு வெள்ளி'' ஆர்ப்பாட்டங்களை அவர் தனக்கு உரிமையாக்கிக்** கொண்டார். ஆனால் ஜனநாயக பூர்வமான அந்த ஆர்ப்பாட்டத்தின் போது முஸ்லீம்கள் கொல்லப்படவும், காயப்படவும் காரணமாக அமைந்த **பொலிசாரின் தாக்குதல் பற்றி** அவர் எவ்வித கண்டனத்தையும் வெளிப்படுத்தவில்லை.

உண்மையில் -குறிப்பாக -கிழக்கு முஸ்லீம்கள் தமது பாதுகாப்பையும் உரிமைகளையும் வேண்டி நடத்தக் கூடிய போராட்டங்களை நேர்மையாக முன்னெடுப்பதற்குப் பதிலாக,, சுயமாக வெளிப்படுஇத்தகைய போராட்டங்களைத் **தணித்து விடவும்** இவை அரசுக்கு எதிராகக் கிளர்ந்து விடாமல் தடுக்கவுமே அஷ்ரஃப் முற்படுகிறார். இதைவிட அவர் வேறுவிதமாக நடந்து கொள்ள முடியாது. ஏனெனில் வடக்கு கிழக்கு முஸ்லீம்களுடையே உருப்பெற்று வந்த தேசிய எழுச்சியை உரிய நேரத்தில் பிரதிபலித்ததன் மூலம் மட்டுமே அவரால் வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் தலைமையை வென்று கொள்ள முடிந்ததே தவிர, அந்த தேசிய எழுச்சியை உறுதியாகவும் நேர்மையாகவும் முன்னெடுத்துச் சென்றதினூடாக அல்ல. இப்போதும் கூட வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சியை தனக்குரிய விதத்தில் (அதாவது இதை ஒரு வெகுஜனப் போராட்டமாக மாற்றாமலும், அரசுக்கு எதிராக கிளர்ந்துவிடாமலும்) ஒழுங்கமைக்க முற்படுவதன் மூலமே தனது தலைமையைப் பேண முயல்கிறார். இன்றைய நிலையில், வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சியில் அஷ்ரஃப் வகிக்கும் பாத்திரம், 1970 களின் இறுதியில் தமிழ்த் தேசிய இயக்கத்தில் அமிர்தலிங்கம் வகித்த பாத்திரத்தையே பெரிதும் ஒத்திருக்கிறது. அதாவது தாம் அரசியல் தலைமையைப் பெற்றுக் கொள்ளக் காரணமாக அமைந்த தமது சொந்த மக்களது தேசிய அபிலாசைகளைத் துறந்துவிட்டு, தமது நலன்களை முதன்மைப்படுத்தி அரசுடன் கூடிக் குலாவும் துரோகத்தனத்தை வெளிப்படுத்தியிருப்பதில் இவர்கள் இருவரும் அதிகம் வேறுபடவில்லை.

இவ்விதம் முரண்பாடுகளும் சுயநலமுமிக்க ஒரு அரசியல்வாதியிடம் தமது பாதுகாப்பையும் உரிமைகளையும் ஒப்படைப்பதிலுள்ள பாதகமான விளைவுகளை குறிப்பாக- கிழக்கு முஸ்லீம்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டிய தருணம் இது.

## இராணுவத்தில் இணையக் கூடிய முஸ்லிம்கள் அல்லது தனியான முஸ்லிம் படைப்பிரிவு

வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மீது நேர்மையான அக்கறை ஏதுமின்றிச் செயல்படுகின்ற மரபுவழித்தலைமையும், ஸ்ரீ.ல.மு.கா. தலைமையும் பொலநறுவைத் தாக்குதலின் பின்னர் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் ஆழமாக மதிப்பிடப்பட வேண்டியவை. இராணுவத்தில் முஸ்லீம்களைச் சேர்த்தல் (மரபு வழித்தலைமை), தனியான முஸ்லீம் படைப்பிரிவு அமைத்தல் (ஸ்ரீ.ல.மு.கா. தலைமை) என்ற கோரிக்கைகள் முற்றிலும் வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டே முன்வைக்கப்படுகின்றன என்று கருதக்கூடாது. ஏனெனில் முதலாவது, ஒரு குறிப்பிட்ட தொகையில் சேர்க்கப்படக் கூடிய முஸ்லீம் இராணுவ வீரர்கள் மூலமோ அல்லது சில நூறு பேர்கள் வரை கிட்டத்தட்ட 800 பேர்கள் வரை கொண்ட ஒரு முஸ்லீம் படைப்பிரிவின் மூலமோ (வடக்கு) கிழக்கிலுள்ள் முழு முஸ்லீம் கிராமங்களையும் சமகாலத்தில் பாதுகாப்பது என்பது எவ்விதத்திலும் சாத்தியப்படப்போவதில்லை. (பல ஆயிரக்கணக்கான சிங்கள ஆயுதப்படையினர் இருந்தும் கூட சிங்கள கிராமங்கள் மீதான புலிகளின் தாக்குதல்களை அவர்களால் தடுத்துவிட முடியவில்லை என்ற உண்மையை இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்). இரண்டாவது முஸ்லீம் இராணுவத்தினரோ அல்லது தனியானபடைப் பிரிவோ முற்றிலும் அரசின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இயங்கக் கூடியவை. எனவே மேலதிகாரிகளின் அனுமதியும், கட்டளையும் கிடைக்கப் பெறும் போது மட்டுமே செயல்பட வேண்டிய கட்டுப்பாடு கொண்டிருப்பார்கள். இந்நிலையில், வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தாக்கப்படும் சந்தர்ப்பங்களில் இவர்கள் அதை எதிர்த்து சுயமாகவும் விரைவாகவும் செயல்பட முடியும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. (இதுவரையிலான தாக்குதல்களின் போது இராணுவத்தினர் நடந்து கொண்ட முறையை இங்கு ஒப்பிட்டுப் பார்க்க முடியும்).

இந்த உண்மைகள் வெளிப்படையாகவே புரிந்து கொள்ளப்படக் கூடியதாவிருந்தும், மரபுவழித் தலைமையும், ஸ்ரீ.ல.மு.கா. இன் தலைமையும் இத்தகைய கோரிக்கைகளை முன் வைப்பதற்குரிய முதன்மைக் காரணம், தமது கட்டுப்பாடுகளை மீறி(வடக்கு) கிழக்கு முஸ்லிம்களிடையே சுயமான தனித்துவமான தேசிய எழுச்சி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதே. (வடக்கு) கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சியை, அரசுக்கெதிராக அமைந்துவிடாமல் ஒழுங்கமைப்பதில்தான் இவ்விருவகைத் தலைமைகளின் அரசியல் நலன்களும் அடங்கியிருக்கின்றன. இந்த உண்மையை தமது சொந்த பாதுகாப்பிற்காகவும், உரிமைகளுக்காகவும் போராடுகின்ற, இன்னும் தீவிரமாகப் போராட வேண்டியுள்ள வடக்கு-கிழக்கு முஸ்லீம்கள் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மேற்கூறிய பிரிவினரில் எவருமே வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் பாதுகாப்பையும் அவர்களின் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்தக் கூடியவர்களாக இல்லை. இந்நிலையில் தம்மை அடிமைப்படுத்த முனையும் தமிழ் இனவாதத்திலிருந்தும், தம்மை அழித்து விரட்ட முயலும் புலிகளின் பாசிச இன ஒழிப்பு நடவடிக்கைகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளப் போராடுகின்ற (வடக்கு) கிழக்கு முஸ்லீம்களின் உணர்வெழுச்சியானது தொலைபோக்குடன் சரியான திசையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இதற்கு அடிப்படையாக, முதன்மை நடவடிக்கையாக இம்முஸ்லிம்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் உறுதியாக நிலைநாட்டக் கூடிய ஒரு வெகுஜனத் தலைமை உடனடியாக உருவாக்கப்பட வேண்டும். இந்த முதன்மையான சமூகப் பொறுப்பை வடக்கு, கிழக்கு முஸ்லீம்களிடையேயுள்ள முற்போக்கு ஜனநாயகப் பிரிவினரும், புத்திஜீவிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. கிழக்கில் இடம் பெற்றுவரும் அண்மைக்கால சம்பவங்கள் இந்தக் கடமையின் அவசியத்தை மேலும் வலியுறுத்துகின்றன. புலிகளால் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் காரணமாக, கிழக்கு முஸ்லீம்கள் அரசு மற்றும் முஸ்லீம் தலைமைகள் மீதான நம்பிக்கைகளைப் படிப்படியே இழந்து வருகிறார்கள். உண்மையில் இவ்வாறான போக்கு (வடக்கு) கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் வென்று கொள்ளப்படுவதை நோக்கிய சரியான முனைப்பு எனக் கொள்ள முடியும். ஆனால் இத்தகைய தன்னியல்பான போக்கு சரியான முறையில் ஒழுங்கமைக்கப்படாதிருப்பின் , (வடக்கு) கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சியானது பிற்போக்கு சக்திகளினால் எளிதில் கையகப்படுத்தப்படும் நிலை தோன்றிவிடும். இத்தகைய நிலைமை (வடக்கு) கிழக்கு முஸ்லீம்களுக்கு எவ்விதத்திலும் சாதகமான விளைவைத் தரப் போவதில்லை. மாறாக முஸ்லிம்களிடையேயும் ஒரு புலிகள் இயக்கம் தோற்றம் பெறுவதே இறுதி விளைவா இருக்கும் . விடுதலைப் புலிகளின் தோற்றம் தமிழ் மக்களின் தேசிய இயக்கத்தில் ஏற்படுத்தியிருக்கும் பாதகமான விளைவுளைப் புரிந்து கொள்ளக் கூடிய வடக்கு கிழக்கு முஸ்லீம் முற்போக்கு ஜனநாயகப் பிரிவினரும், புத்திஜீவிகளும் அத்தகைய நிலைமை தமது சமூகத்திலும் ஏற்படுவதை எவ்விதத்திலும் அனுமதிக்கக் கூடாது.

எனவே வடக்கு கிழக்கு முஸ்லீம்களிடையே உருப்பெற்றிருக்கும் தேசிய எழுச்சியானது இன்று வேண்டி நிற்கும் நேர்மையான, உறுதியான வெகுஜனத் தலைமையாக அமையக் கூடிய வரலாற்றுப் பொறுப்பை இந்தப் பிரினர் ஏற்றுக் கொள்வது இனியும் தாமதப்படக் கூடாது.

நன்றி - நூலகத்திட்டம்





# இந்திய திரைப்பட விழா
# ஒரு வெட்டு முகம்

சாம்பவி

(13.12.92.-19.12.92)வரை கொழும்பு எல் பின்ஸ்டன் திரையரங்கில் நடைபெற்ற இந்தி யத் திரைப்படவிழா பற்றிய சில குறிப்புகள்.)

சமீபத்தில் பவளவிழா கொண்டா டிய இந்தியச் சினிமா வரலாற்றின் ஒரு சிறு வெட்டு முகத்தை சமீபத் தில் நடைபெற்ற இந்தியத் திரைப் படவிழாவில் காணமுடிந்தது. இந் தியாவின் பிரதேச மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, குஜராத்தி, ஹிந்தி ஆகிய மொழிகளில், 1977ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட **'கடசி ரார்த்தா'** எனும் சினிமாவிலிருந்து 1989 ஆம் ஆண்டு தயாரிக்கப் பட்ட **'பேர்சி'** எனும் சினிமா வரை யிலான ஒரு சினிமா வரலாற்றினை யும் பார்க்க முடிந்தது. காலம் என் பது சினிமாவில் பெரிய மாறுத லினை காட்ட முடியவில்லை, நெறி யாளரின் ஆளுமையே வர லாற்றை மாற்றி எழுத வைத்தது. உண்மையில் 1977 இல் தயாரிக்கப் பட்ட **'கடசிரார்த்தா'** திரைப்படத் திற்கும், 1989 இல் தயாரிக்கப்பட்ட **'பேர்சி'** திரைப்படத்திற்கும் இடை யில் தரத்தில் வித்தியாசம் இருந்தது, **'கடசிரார்த்தா'** காலத்தை வென்று நிற்கும் காவியம் எனில், மற்றை யவை அதன் அருகில் நிற்கவே தகுதி பெற்றன. 1981இல் தயாரிக் கப்பட்ட **'எலிபத்தாயம்'** ஒன்றே கடசிரார்த்தாவுடன் சமமாக நிற் கக் கூடியது எனக் கூறலாம்.

தமிழ்ச் சினிமாக்கள் பற்றியும் சில குறிப்புக்கள் **'வீடு'**, **'நெஞ்சத் தைக் கிள்ளாதே'** எனும் இரு திரைப்படங்களும் இங்கு காட்டப் பட்டன. **'வீடு'** ஏனைய சினிமாக்க ளுடன் போட்டி போடும் தகுதி யைப் பெற்றிருந்து போது, **'நெஞ் சத்தைக் கிள்ளாதே'** தமிழர்களின் தலையைக் குனியச் செய்து விட் டது. ரசிகர்கள் சிலர் எழுந்து போன தையும் காண முடிந்தது. **'வீடு'** தயாரித்த பாலுமகேந்திராவுடன் ஒப்பிடுகிற போது **'நெஞ்சத்தைக் கிள்ளாதே'** மகேந்திரன் எவ்விதத் திலும் குறைந்தவர் அல்லர். தமி ழின் மிக முக்கிய நெறியாளராக வும், 'ஆழமான' நெறியாளராக வும் மகேந்திரன் கருதப்படுபவர்.' **உதிரிப் பூக்கள்'**, **'பூட்டாத பூட் டுக்கள்'** ஆகிய திரைப் படங்கள் தமிழ்ச் சினிமா வரலாற்றில் மகேந் திரனை எப்பொழுதும் இனங் காட் டக் கூடிய திரைப் படங்கள். ஆனால் **'நெஞ்சத்தைக் கிள்ளா தே'**யின் தெரிவு சங்கடப்படுத்துகி றது. தமிழின் மிக முக்கிய நெறியா ளர் எனக் கருதத்தக்க **பீம்சிங், ஸ்ரீதர், கே.பாலச்சந்தர், எஸ்.பா லச்சந்தர், பாரதிராஜா, மகேந்தி ரன், பாலுமகேந்திரா, மணிரத்தி னம்** போன்றோரில் முதன்மையாக எண்ணப்படத்தக்கவர் மகேந்திரன் ஆவார்.

இவைகள் ஒரு புறமிருக்க; திரையி டப்பட்ட ஒவ்வொரு சினிமாக்கள் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு.

**நரசிங்கராவின்**
**தாசி.**(தெலுங்கு)

1925இல் இடம் பெறுகிற கதை. வர லாற்றுக் குறிப்பு. தெலுங்குப் பிரதே சத்தில் வாழ்கின்ற ஜமீந்தார் குடும் பம். நிலப்பிரபுத்துவத்தின் வாரிசு. இக்குடும்பங்களுக்கிடையே திரும ணம் முடிகிற போது தாசிகளும் சீத னமாக வழங்கப் படுவார்கள். பக லில் சமைத்தல், மாடுகளைப் பராம ரித்தல், பாத்திரங்கள் தேய்த்தல், உடுப்புக்கள் தோய்த்தல் எஜமானி யம்மாவுக்குரிய அனைத்து வேலைகளையும் செய்தல் எனப் பொழுது போக, இரவில் குடும்பத் தலைவனுக்கும் வரும் விருந்தி னர்க்கும் இரையாதல் என விடி யும். கமலாக்சி இவர்களில் ஒருத்தி. இவளைக் காட்டுவதனூடாக ஒவ் வொரு தாசியும், அவர்களின் சீரழி வும் காட்டப் படுகிறது. கமலாக்சி கருத்தரிக்கிறாள். எஜமானியம்மா வின் உத்தரவில் கரு கலைக்கப்படு கிறது. ஒன்றிலும் அவள் உடன் பாடு கொள்வதில்லை. இதுதான் தாசி.

**அர்ச்சனா** பிரதான பாகத்தில் நடித் திருக்க **நரசிங்கராவின்** நெறியாள் கையில் இத்திரைப் படம் உருவா னது. இத்திரைப் படத்தினூடாக **அர்ச்சனா** இந்தியாவின் சிறந்த நடிகை எனும் விருதினையும் பெற் றிருந்தார்.

எடுத்த எடுப்பிலேயே கூறிவிட லாம். ஒரு விவரணத் திரைப் படத் தின் (Documentory Film) சாயல் இதில் தெரிகிறது. அது தான் நோக்க மெனில் அது ஒன்றும் பிழையல்ல. சொல்ல வருகிற விட யம் தொற்ற வைக்கப் படவில்லை. சில செய்திகளைப் பெற்றுக் கொள் கிறோம்; அனுபவத்தை அல்ல. தாசிகளிடம் அனுதாபம் கூட வரு வதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது. இவ்வாறு கூறுவதனால் இச்சினிமா நல்ல சினிமாவுக்கான அம்சங்களை இழந்து போகின்றது என்று அர்த்த மல்ல.

1920 களைப் பிரதி பலிக்கிற காலப் பின்னணி, களம். அது கண்முன் நிறுத்தப்படுகிறது. பின்னணி இசை யும், ஒளிப்பதிவும் மேலும் வலு சேர்க்கிறது. கமலாக்சியினூடாக தாசிகள் மீதான வன்முறை அப்பட் டமாகப் படம் பிடிக்கப் பட்டுள் ளது. இவர்கள் மிருகங்களாகக் கூட மதிக்கப் படாத தன்மை நேர்த்தி யாக வெளிப் பட்டிருக்கிறது.

**அர்ச்சனாவின்** நடிப்பில் கம லாக்சி உயிர் பெறுகிறாள் என்ற போதிலும், **'பசி'**யின் **ஷோபா** வைப் போல, **'சக்ரா'** வின் **ஸ்மிதா பட்டீலைப்** போல, **சிறீமதுராவின் அனோஜா வீரதுங்காவைப்** போல மிக நுண்ணிய நடிப்பைத் தரத் தவறி விடுகிறார். ஆனாலும் இதுவே திருப்தி.

ஆனால் என்ன அது ஒரு விவர ணத் திரைப்படத்தின் சாயல்? ஏன் எவ்வாறு ஆனது?

நிலப் பிரவுத்துவ சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை. அது வெளிப்படுத்தப்ப டல் வேண்டும் எனும் உயரிய நோக்கம். ஆனால் அழுத்தமான கரு அதற்குப் பயன்பட்டிருக்க வில்லை. இதனை வெளிப்படுத்த எடுத்துக் கொண்ட பிரதி சாதாரண மானது. இதனை வைத்துக் கொண்டு சொல்ல வருகிற விஷ யத்திற்கு அழுத்தம் கொடுக்க முடி யவில்லை. நெறியாளர் நிறைய முயன்றிருந்த போதும், முழுமை யாகத் தொற்ற வைக்க முடியாமல் போகிறது. இதனால் விவரணப் படத்தின் சாயலாகிறது.

இவ்வாறு கூறுவதனால் இத்திரைப் படம் சினிமா ஊடகத்தைப் பயன்ப டுத்த முனைகையில் ஒரு தோல் வியா? இல்லை, அப்படி அல்ல. சரியாகச் சொல்வதனால் ஒரு கலைப்படைப்பு அவ்வளவு தான்.

**பாலுமகேந்திராவின்**
**வீடு**(தமிழ்)

செய்நேர்த்தியான சினிமா பாலும **கேந்திராவின் வீடு**. எற்கனவே தமிழில் புகழ் பெற்ற நெறியாளர் இவர். வர்த்தக ரீதியாகவும் இவரது சினிமாக்கள் வெற்றியைக் கண்ட துண்டு. **அழியாத கோலங்கள், மூடுபனி, மூன்றாம் பிறை**, எனும் தமிழ்ச் சினிமாக்களும், **கோகிலா** எனும் கன்னடச் சினிமா வும், **ஓளங்கள், ஊமக்குயில், யாத்ரா**, எனும் மலையாளச் சினி மாக்களும் வர்த்தக ரீதியாக வெற்றி யைக் கண்டும் தரமான ரசிகர்க ளால் நல்ல சினிமாவுக்கான அடை யாளம் காணப்பட்டதுமான திரைப் படங்களாகும். இவற்றில் **மூன் றாம் பிறை கமலகாசனுக்கு** இந்தி யவின் மிகச் சிறந்த நடிகர் எனும் விருதினையும், **வீடு, அர்ச்சனா** விற்கு மிகச்சிறந்த நடிகை எனும் விருதினையும் பெற்றுக் கொடுத் தது. பாலுமகேந்திராவும் இரு முறை இந்தியாவின் சிறந்து ஒளிப் பதிவாளர் எனும் விருதினைப் பெற்றுள்ளார்.

ஆனால், முதன் முதலாக, எவ்வ கையான பிசிறல், சமரசம் இல்லா மல் எடுத்த படைப்பு வீடு. இதன் பின்னர் இவரது படைப்பில் உரு வான **சந்தியாராகம்** மிக முக்கிய படைப்பென சினிமா விமர்சகர்க ளால் கூறப் படுகின்றது.

**சுதா** என்கிற பெண்-அவளது தாத்தா (அட, என்னமாய் நடித்தி ருக்கிறார் இந்தச் **சொக்கலிங்க பாகவதர்**) தங்கை இந்து-சுதாவின் நண்பன் கோபி(தமிழ்ச் சினிமாச் சூழலில் அவனைக் காதலன் என்று கூற வாய் கூசுகிறது). கதை இது தான்; சுதா ஒரு வீடு கட்ட முயலுகி றாள் வீடு கட்டப்படுகிறது. அவ ளும், தங்கையும், நண்பனும் (தாத்தா வீடு கட்டி முடிந்ததைப் பார்த்து விட்டு இறந்து விடுகிறார்). அந்து வீட்டில் வசிப்பார்களா? தெரிய வில்லை. ஒரு சின்ன, நுண் ணிய பிரச்சினை. சினிமா எனும் சாதனத்தில் அது முழுமை பெறுகி றது.

கமெராவே வீட்டினைக் கட்டி முடிக்கிறது. பாலுமகேந்திராவின் மிகப் பெரிய பலம் கமெராதான். எப்போதும் கமெரா கதையை மீறித்தன் தலையை நுழைத்துக் கொண்டதில்லை. பாலுமகேந்திரா நெறியாளராக இருப்பதனாலும் தான் இது சாத்தியம். சினிமா எனும் சாதனத்தின் மிக முக்கிய துறைகளான நெறியாள்கை, ஒளிப் பதிவு, படத்தொகுப்பு, திரைப்படப் பிரதி ஆகியன யாவும் பாலுமகேந் திராவின் கைகளில் தான். படத் தொகுப்பின் அர்த்தம் இச்சினிமா வில் முழுமையாகத் தெரிகிறது.

இத்திரைப்படத்தில் குறைகளே இல்லையா? இருக்கிறது. தமிழ்ச் சினிமாவின் மரபில் வந்த பாலும கேந்திராவிற்கு தமிழ்ச் சினிமா வின் மரபை சில சந்தர்ப்பங்களில் மீற முடியாமல் போகிறது. அது சின்னக் குறை தான். ஆனால் இதை யெல்லாம் மீறி இச்சினிமா முழு மையைத் தருகிறது. தமிழ்ச் சினி மாவில் இது வித்தியாசமான முயற்சி.

**பெர்வெஸ் மெவன்ஜியின்**
**பேர்சி.**(குஜராத்தி)

**பேர்சி** பாவம். நைந்து போனவன் பம்பாய் நகரத் தெருக்களில் பாவப் பட்ட ஜென்மமாக அவன் திரிகி றான். பனிக் குளிரில் காலையில் அவனுக்கு மிகச் சோம்பலாக இருக்கிறது. வேலைக்கு அவன் போக வேண்டும் நேரம் ஆகிறது. அம்மா எழுப்புகிறாள். ''அம்மா தயவு செய்து...'' என்று கெஞ்சுகி றான். காலையில் அம்மா ரொட்டி சுட்டுக் கட்டிக் கொடுக்கிறாள். பேர் சியும், இன்னொருவனும், முதலா ளியும் மட்டும் வேலை செய்கிற சிறு அலுவலகம் அவனுடையது. சம்பளம் 500ரூபா. வேலை முடிந்து களைத்து வீடு திரும்புகிற போது ஒரு கோப்பை பாலும், பிஸ் கட்டும் இவனுக்குக் காத்திருக்கும். அம்மாவும் பாவம். இவனை அனுப்பி விட்டு ஊறுகாய், வேறும் உணவுப் பண்டங்களை வீடு வீடாக விற்பாள். பேர்சி அபூர்வ மாகத் தன்னுடன் சிறுவயதில் விளையாடித் திரிந்த பெண்ணை விரும்புகிறான். கேட்க முயல்கிற சந்தர்ப்பத்தில் அவள் தனது திரும ணத்திற்கான அழைப்பை விடுக்கி றாள். ''அப்படியா?'' என்று கேட்டு தன் அம்மாவுடன் திரும ணத்திற்குப் போகிறான். மணப் பெண் சிரித்துக் கொண்டே இருக்கி றாள். அம்மா இரவு விருந்தில் மீன் நல்ல சுவையாக இருந்தது என்கி றாள்.

பேர்சி சிறுவயதில் வசதியுடன் வாழ்ந்த ஒருவன் - அதாவது அப்பா குடித்து விட்டு சீட்டாடத் தொடங்குவது வரை. சீட்டாடத் தொடங்க குடும்பம் சிதைகிறது. பேர்சிக்கு அப்பா பற்றிய நினைவு களும், அப்பாவின் இறப்பும் ஞாப கத்தில் உள்ளன.

அலுவலகத்தில் பேர்சி தவிர்ந்த மற் றவனின் கையாடல் கண்டு பிடிக் கப் படுகிற போது, அது பின்னர் பேர்சி பலமாகத்தாக்கப் பட்டு முகம் உடைவதற்கும் (அவன் உட னேயே விம்மி அழுகிறான். அம் மாவின் மடியிலும் நெடு நேரம் அழுகிறான்) அலுவலகம் எரிக்கப் படுவதற்கும் காரணமாகிறது. பேர் சிக்கு தற்போது வேலை இல்லை. அம்மா செய்த வேலையை- அதாவது உணவுப் பண்டங்களை விற்கிற வேலையை-பேர்சி செய்கி றான். ஒரு போதும் விற்க அவ னால் முடிவதில்லை.

பேர்சிக்கு மிகமிகச் சந்தோஷமான ஒரு விஷயம் மேல் நாட்டுச் சங்கீ தம் கேட்பது. அதனைக் கேட்கிற போது இறந்த காலத்தில் அவன் வாழ்கிறான். அவன் இரவு பிந்தி வருகிற போது குடித்திருப்பானா என அம்மா சந்தேகப் படுகிறாள்.

நன்றி - நூலகத்திட்டம்



# உப்புக் கரித்தது!

- ஒரு சிறுகதை

## வை அஹ்மத்

"மச்சி எழும்புகா" - கண்ணசந்துகிட்டுப் போன என்னை யாரோ எழுப்புறாப் போல அல்லவா கிடக்கு? இது ஆரு? இதென்ன ஊரு நிறைஞ்ச சனம்; உம்மாவையும் காணல் லய... சல்மா மச்சியா?

"படுத்தது போதும் எழும்புகா!" - அவதான்!

"ஏன் மச்சி இந்த நேரத்தில என்ன எழுப்புகிறாய்?" ஊரும் காலும் அடங்கின நேரம். பன்னிரண்டு மணி இருக்குமோ; பத்து மணிக்கு பேப்பர் பெக்டரியில விசில் ஊதினதுக்குப் பிறகுதானே படுத்தனான் ஓ... இப்பதான் ஞாபகம் வருகுது. வாப்பா, உம்மா, மத்து. இந்தக் காலத்து மனுஷனுக்கு மனுஷன் தேவையில்ல; பணந்தான் வேணும்.

வாப்பாவும் அப்படித்தான். அவரும் சும்மா இருக்கிறதல்ல ஒரே புறு புறு வெண்டு யாருதான் பொறுப்பா?

அப்துஸ்ஸலாம் மச்சான் எண்டா நல்ல அழகு. என்னப் போலத்தான் சந்தன நிறமான வெள்ள. அவரைக் கல்யாணம் முடிக்கிறதுக்கு மூணு மாத்தைக்கு முந்தித் தான் நான் சாமத்தியப் பட்டது. அவரைக் கல்யாணம் பண்ணி அவரும் ஒரு வருஷத்துக்கு மேலே இருந்தாரு. மூணு மாத்தயால ஒரு கட்டி விழுந்து போச்சு. அதுக்குப் போட்டாரு. ஆசைக்கு ஒரு ஆம்புளப்புள்ளயுமில்லை. எனக்கு மூத்தவங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் முடிஞ்சிட்டு. அவங்களுக்கு வீடுமில்ல வளவுமில்ல. மூத்த தாத்தா குளனிக்குள்ள வளவெடுத்துக்கிட்டு ஒதுங்கிட்டா. வாப்பாக்கிட்ட வீடுவளவு கேட்டுச் சண்டை பிடிச்சுப் பாத்தா. வாப்பா தாறன் தாறன் எண்டு ஏமாத்திப் போட்டாகு மூத்த மச்சான் நல்ல மனுஷன். அவரு ஒண்டும் பேசுறதில்ல. தாத்தா தான் வந்து சண்டை பிடிப்பா. இளைய மச்சான் திருக்குணாமலயில் என்னவோ வேலையாம். அதனால கல்யாணம் முடிச்சு மூணு மாசத்தால தாத்தாவ

வை.அஹ்மத் அவர்கள் பிறந்தது 1945இல், ஆசிரியராக தமது
சேவையை ஆரம்பித்த அவர் அநியாயமாக கண்ணிவெடியில் கொல்
லப்பட்ட போது மேலதிக அரசாங்க அதிபராக இருந்தார். இவரது
முதற்சிறு கதை 'அடித்த கரங்கள்' சிறந்த சிறுகதைகளில் ஒன்று என
சிலாகிக்கப்படுகிறது. சாகித்திய மண்டல பரிசு பெற்ற 'புதிய தலைமு
றைகள்' என்ற நாவல் 1978இல் கிடைத்தது ஆக்க இலக்கியத்துறையில்
முதல் முதல் சாகித்திய பரிசு பெற்ற முஸ்லிம் இவரே ஆவார். சென்ற
ஆண்டு இவரது 'மொழியும் வழியும்' 'வாழைச்சேனை ஒரு வரலாறு'
ஆகிய நூல்கள் வெளிவந்தன. அவரது 'புதிய தலைமுறைகள்' நாவ
லில் அவர் எழுதினார். இலக்கியம்என்பது மனிதனுக்காக படைக்கப்ப
டுவது என்று நீ ஏற்றுக்கொள்வாயாயின் நான் அதனையே 'மனிதம்'
என்று புதுப்பெயர் சூட்டி அழைக்கிறேன். மனிதத்தைப் புரிந்து கொள்
வதற்கு நீ மனிதனாக இருக்கிற வரையில் பொருத்தமானவன்.

மாமி, சாச்சாவெல்லாரும் கதைச்சுக்கிட்டிருந்த விஷயம் சொல்லவும் வெக்கமாய் இருக்கு. நேத்து இராத்திரி வாப்பா என்னக் கூப்பிட்டு சொன்னாரு தான்...

"என்னத்துக்கா? மாப்பிள்ளை வரப்போறாரு. குளிக்க வாங்க"- இதைச் சொல்லிப் போட்டு சல்மா மச்சி சிரிக்கிறா. அவ சிரிச்சா வெண்டா அவட பல்லெல்லாம் அப்பாம் உடைச்ச தேங்காப் பாதி மாதிரி, அவ்வளவு வெள்ள! எனக்கும் சிரிப்பு வருகுது. எண்ட பல்லும் அப்படித்தானாம், மச்சான் ஒரு நாள் கண்ணாடியைக் கொண்டாந்து காட்னாரு, பாத்தன்.

"புள்ள சல்மா, அந்தப் புள்ளயக் கூட்டியாந்து குளிப்பாட்டுங்க கெதியா"- ஆயிஷா மாமிதான் சொல்லிப் போட்டு அங்கால போறா.

கூதலாவும் கிடக்கு. இந்த நேரத்தில என்னில தண்ணியை அள்ளி ஊத்தப் போகுதுகள். குளிக்கிற இடத்தில சும்மாவிடவும் மாட்டுதுகள். எனக்கு இந்தக் கேலியெல்லாம் கொஞ்சமெண்டாலும் பிடிக்கிறதில்ல. சும்மா சதையைப் புடிச்சுப் பாக்கிறதும், கிள்ளுறதும் நல்லா இருக்காய், வடிவுதான் என்கிறதும், அவங்க கேலி பண்ருங்க எண்டு நாம கோவிக்கலாமா, எல்லாரும் மச்சி மாரு.

இப்படித்தான் முந்தின கல்யாணம் முடிந்த போதும், அந்தக் கல்யாணம் எனக்கும் அப்துஸ்ஸலாம் மச்சானுக்குந்தான் நடந்தது. அந்தக் கல்யாணத்தை நெனச்சுப் பாத்தா இப்பவும் இன்டைக் கெண்டாப் போலத்தான் இருக்கு. என்ன செய்யலாம் அந்த அல்லாட வேலை. கட்டின முதல் புரிஷனோட காலமெல்லாம் கழிச்சுப் போடலாம் எண்டு தான் எண்ணியிருந்தன். அது தானே நல்ல சிறப்பு, ஆனா அதெல்லாம் புள்ள வாழணும் எண்டா உம்மா வாப்பா ஒதுங்கிப் போயிடனும். தலையிடப் போடா, கொடுக்கிறதையும் கையோட கொடுத்திடனும். புருஷன் பெஞ்சாதியை ஏசுவான்; அடிப்பான் என்னவெண்டாலும் செய்வான். அவனுக்குக் கொடுக்கிறதைக் கொடுத்திட்டு, எங்கேயாச்சும் அக்கரையிலாவது போய் குடிலகிடில வைச்சுக்கிட்டு போயிடனும். அப்படி யெண்டாத்தான் சலா புறகு ஒண்டும் தரிக்கல்ல. மச்சான் தான் போயிட்டாரே.

மூணு மாத்தயால கட்டி விழுகுறதுக்கு முன்ன எனக்கு ஒரு பிள்ள பெறப் போகுதெண்டு எவ்வளவு ஆசையாகத்தான் இருந்து. பயமுந்தான் என்ன செய்யலாம் ஆண்டவன் 'கல்பி'க்கலயாக்கும்!

அப்துஸ்ஸலாம் மச்சான் எனக்கு கொஞ்சம் தூரத்து உறவு தான். வாழைச்சேனை கடதாசி பெக்டரியில் கூலிவேலை செய்யிறவரு. மாதாமாதம் இல்லையெண்டு போனா நூத்திச் சொச்சம் ரூபா கொண்டாருவாரு. அவருக்கு கஞ்சாக் குடிக்க இருபத்தைஞ்சு



ரூபாக்கு மேலே போயிடும். ஏதோ 'கோபிறட்டி' யெண்டு சாமான் எடுத்து வருவாரு. அங்கமாதம் முப்பத்தைஞ்சு ரூபாய் எடுத்துக்குவானுகள். இங்கேயும் சாலிச்சாச் சாட கடையில நாப்பது, ஐம்பது வரும். மிச்சம் ஒண்டுமில்லை என்னவோ, 'ஓவடையம்' வேலை எண்டு சொல்லுவாரு. அதையிதைச் செய்தா மாதம் அஞ்சோ பத்தோ மிஞ்சும். அதுக்குள்ள அறுதாலியாக இருக்கிற அவங்க உம்மாவுக்கும் என்னவும் குடுக்கணும்.

எங்க வாப்பா மீன் பிடிக்கப் போவாரு. ஒரு சின்னத் தோணியிருக்கு. காலையில் சுபஹுு தொழுதிட்டு வலையெடுத்துக் கொண்டு போனாரெண்டா பன்னிரண்டு மணிக் கிடையில வந்துடுவாரு. நாலஞ்சு ரூவா கிடைக்கும். அதுக்குள்ளாக அவங்கட கஞயத்துப் போகும். வாப்பாவுக்கு துணையாக யாருமில்லை. எல்லாம் அஞ்சு பொம்புளயளாய் பெத்துப் கொண்டு போயிட்டாரு. எப்ப வெண்டாலும் நினப்பு வந்தா வந்துட்டுப் போவாங்க. இந்தக் காலத்தில போறவாற செலவைக் கணக்குப் பாத்தா ஒரு குமரக் கல்யாணம் பண்ணிப் போடலாம் எண்டு வாப்பா தான் சொல்லுவாரு. மூத்த தாத்தாவுக்கு இரண்டு பிள்ளையளும், இளையவவுக்கு ஒண்டுமில்ல.

ஒரு வீட்டையும் வைச்சுக் கிட்டு இரண்டு பேரையும் கட்டிக் கொடுத்திட்டாரு வாப்பா. என்னையும் அப்படித்தான் செய்தாரு. ஆனா அப்துஸ்ஸலாம் மச்சான் வீடுவளவு வேணு மெண்டும் உம்மா வாப்பா பிள்ளையள் எல்லாரும் எங்காச்சும் போகணும் எண்டும் ஒரு நாள் சொல்லிப் போட்டாரு. இதனால எனக்கு அடி. அவங்க என்ன செய்வாங்க. ஒண்டும் பேசல்ல. எனக்கு அடிச்சா வாப்பா புறுபுறுப்பாரு. வேறு ஒண்டும் செய்ய முடியா அவராலே. ஒரு நாள் அவர் எனக்கு நல்லா அடச்சுப்போட்டாரு. மச்சான் அவர் சாமான்களைத் தூக்கிக் கொண்டு போயிட்டாரு. நானும் வர்றனெண்டு குளறினன். "வீடுவளவு வாங்கிக் கிட்டுவா" எண்டு ஒரேயடியாச் சொல்லிப் போட்டுப் போயிட்டாரு.

அதுக்குப் பிறகு நானும் உம்மாவும் உறவாகலாம் எண்டு அவங்க வீட்டபோனம் 'இனிமே வர மாட்டன்' எண்டு ஒரேயடியாச் சொல்லிட்டாரு. அதுக்குப் புறகு வரல்ல. வாப்பாவும், 'பிறகு வீடு வளவு தாறன் வாங்க' எண்டு சொன்னாரு. எனக்கு இந்த ஊட்டத் தந்தா அவங்க எங்கால போற? இன்னும் இரண்ட குமருகள்.

மூணு, நாலு மாசமா மச்சான் வரல்ல. அவருக்கு எங்கேயோ தொடுப்பாம், ஒரு நாள் வாப்பா கொடுத்த மோதிரமும், காசு இருபத்தைஞ்சு ரூபாயும் மகராம், அவங்க பெத்தா கொண்டு வந்தா. எனக்குச் சரியான கோவம்; வெப்புசாரமுந்தான். 'அவருட்ட கொடுத்திடுங்க' எண்டு சொல்லிப் போட்டன். அவ உம்மாக்கிட்ட போய் கொடுத்துட்டுப் போயிட்டா.

.............................. 15

# "சுடத்தெரியும் சொல்லத் தெரியாதே"

முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடாத்த வேண்டாமெனப் புலிகளின் தலைமை உத்தரவிட்டிருக்கிறது. 'முஸ்லிம்கள் மீது கைவைப்பவர்களுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபா அபராதம்' எனப் படுவான் கரையில் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கும் புலிகளுக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள், மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியேறலாமெனப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்றெல்லாம் செவிவழிச் செய்திகள் வந்து கொண்டிருந்த டிசெம்பர் மாதத்தின் 26ந் திகதி, வாகனேரியில் வெடித்த கண்ணிவெடி, இவையெல்லாம் வெறும் வதந்திகள், முஸ்லிம்களுக்கு வைத்த கண்ணிகள் என நிரூபித்தது.

இந்தக் கண்ணியில் வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த மேலதிக அரசாங்க அதிபரும் எழுத்தாளருமான வை. அஹ்மத், உதவி அரசாங்க அதிபரான ஏ.கே. உதுமான், சட்டத்தரணி எ.பி.எம். முகைதீன், முஸ்லிம் பாடசாலை ஒன்றின் அதிபர் மர்ஹும் எஸ்.எ. எஸ். மகுமூது என்பவர்களோடு வாகனச் சாரதியான மகேந்திரனும் கொல்லப்பட்டார்.

ஏ.கே.உதுமான் மீராவோடைக் கிராமத்தின் முதல் பட்டதாரி, முதல் உதவி அரச அதிபரும் கூட, இதே போலவே எ.பி.எம்.முகைதீன் வாழைச்சேனை கிராமத்தின் முதல் சட்டத்தரணி. மகுமூது காத்தான்குடி பள்ளிவாசலில் புலிகள் நடாத்திய துப்பாக்கிச் வேட்டில்


.............................. 13



வை.அஹ்மத்



ஏ.கே.உ.துமான்



எம். பி. எம். முகைதீன்



மகுமூது

"எஸ்ஸெல்லெம் உங்கள் 'வை' கண்ணிவெடியில்..." நான் மூன்றாண்டுகளுக்குப் பிறகு - நண்பன் செல்வராசாவுடன் கல்குடா வீதியில் வந்து கொண்டிருக்கிறேன். புலிகளின் பிரதேசம்தான். சேதி சொன்ன மனிதன் நினைவில்லை.

அவன் சொன்ன வார்த்தைகள் பொறிவெட்டிகளாக என் காதுக் குருத்துகளைச் சிதைத்தது.

'நண்பனே! என் நண்பனே!!

'இனிமேல் புலிகள் முஸ்லிம்களுக்கு எதுவும் செய்யமாட்டார்களாம்'

ஊர் பெரிய மனிதர்கள் கூட கிரானில் போய் கண்டு கதைத்துவிட்டார்களாம்.

போன கிழமை கடைக்குவந்து போன கிரான் வட்ட விதானையார் கூடச் சொல்லிச் சென்றாரே!

எல்லாம் பொய்யாய் போனதடா நண்பனே!

வெப்பிசாரம் பொங்கி எழ- என் நினைவுக்காளைகள் மூக்கணாங்கயிறுகளை அறுத்து வாலைக் கிளப்பிக் கொண்டு -புற்றுமணலில் கொம்புகளைத் தீட்டியதில் ஒரு பொறி.

வை. அஹ்மதின் வாப்பா. உயர்ந்து கருங்காலி போன்ற உடல்வாகு. அடர்ந்து சிலிர்த்து நிற்கும் புருவ மயிர்கள். நீண்ட கூர்மை பெற்ற நாசி.

ஊரிலிருந்து ஐந்து மைல்களுக்கப்பால் காயங்கேணி தமிழ்க் கிராமம். அங்கு தான் 'வை'யுடைய வாப்பாவின் சில்லறைக் கடையும் தோட்டமும், மீன்பிடி காலங்களில் உப்புக் கருவாடு போடும் தொழிலும். அவர் கையிலுள்ள மேசைக்கத்தி- கயல், செங்கண்ணன், சிறையால் மீன்களை 'கரகர' வென்று கீறிப் பிளக்கும். மீன்களின் வயிறுகளில் உரிச்செ பறங்கிவாழைப்பழம் போலே சினைபடுக்கும். நானும் 'வை'யும் சினைகளையும் பொக்கணிகளையும் சேகரிப்போம்.

மூட்டிய அடுப்பில்-சினையுடன் சீவிய மாங்காய், கொச்சிக்காய், வெங்காயம் உப்பும் சேர்ந்து... சினை சுண்டி முறுகி மணக்கும். ஆளுக்கொரு சிரட்டையில் அள்ளிக் கொண்டு தென்னைமர நிழலிருந்து சுவைப்போம்.

"டேய்! தம்பிமாரெ. கரையாக்கன் பார்வெகொள்ளும் கடைக்குள்ளெ போங்கெ" என்பார் 'வை'யின் வாப்பா.

நாங்களோ வெற்றுச் சிரட்டையை கரையாக்கனுக்கு வீசிவிட்டு- துள்ளிப்பாய்ந்து கடலில் குதிப்போம்!

கண்கள் சிவக்கும் வரையிலும் கடலில் குளிப்போம்!
அன்று உப்புக் கடலில் உலலாசம்
இன்று இரத்தக்கடலில்....வெப்பிசாரம்.

தம்பிகளே! நீங்கள் தமிழ் ஈழம் காண்பதற்கு என்
நண்பன் செய்த கேடென்ன? தடையென்ன?
உங்களுக்குச் சுடத் தெரியும்.
சொல்லத் தெரியாதே!

எஸ்.எல்.எம் ஹனீபா

நன்றி - நூலகத்திட்டம்



# சோமாலியா :

# அமெரிக்க உதவி ஒரு பம்மாத்து

## உலகாயதன்



எண்பதுகளில் வறுமை, பட்டினிச்சாவுகள் என்றால் எதியோப்பியா என்று இருந்தது. ஆனால் 90 களில் உலகின் பொது சனத்தொடர்பு சாதனங்கள் எல்லாம் சோமாலியா என்றே கூறுகின்றன.

ஆபிரிக்காவின் கிழக்கு கரையோரமாக நீண்டு கிடக்கும் இந்த சோமாலியா வடக்கே மத்தியதரைக்கடலையும், தெற்கே கென்யாவையும் மேற்கே எதியோப்பியாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஏறத்தாழ 80 லட்சம் மக்களைக் கொண்டுள்ள சோமாலியா பல இனக் குழுக்களை கொண்டுள்ளது. பேர்சி இனத்தவர்களும், அரபுக்களும், மலைஜாதிப் பிரிவினரும் அதிகளவில் வாழ்கின்றனர்.

தரையமைப்பில் உயர்மேட்டு நிலங்களையும் காலநிலையில் அதிக வறட்சியையும் பாலைவனப் பகுதிகளையும் கொண்ட ஆபிரிக்க தேசம் இயல்பிலே வளம் குன்றிய கண்டமாகவே காணப்படுகின்றது. அதற்கமைய சோமாலியாவின் ஜீவனோபாய தொழிலாக கால்நடை வளர்ப்பே காணப்படுகின்றது. 70%மானவர்கள் ஈடுபடும் இத்தொழில் மூலம் 90%மான அந்நியச் செலாவணியை இந்நாடு பெற்றுக் கொள்கிறது.

15ம், 16ம் நூற்றுண்டுகளில் இருந்தே மேற்கத்தேய வல்லரசுகளின் குடியேற்ற ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது சோமாலியா. ஏனைய குடியேற்றம் போலவே வல்லரசுகளினால் மாறிமாறி சூறையாடப்பட்டது. இந்நாடு 1960களில் காவனித்துவ பிடியில் இருந்துவிடுபட்டு நவகாலனித்துவத்தின் மறைமுக ஆதிக்கத்திற்கு உட்பட்டது. 1941ல் ஏனைய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து பறித்தெடுத்த பிரித்தானியா 1960களில் சோமாலியாவை சுயமாக செயற்பட விட்டுவிட்டது.

ஒரு புறம் பௌதீகவியலின் சாதகமற்ற நிலமை, மறுபுறம் காலனித்துவத்தின் கொடூர அடக்குமுறை, சுரண்டல், சூறையிடல் என்பவற்றுக்கு இடையே அகப்பட்டு ஆபிரிக்க கண்டம், அல்லற்படுகிறது.

ஏனைய ஆசிய, வத்தீன் அமெரிக்க நாடுகளைப் போலவே நிலையற்ற அரசியல் தன்மையை ஆபிரிக்கநாடுகளும் கொண்டுள்ளன. 1960களில் வல்லரசுகளின் பிடியில் இருந்து விடுபடத் தொடங்கிய ஆபிரிக்க தேசம் கானாவின் நிக்ரூமா, தன்சானியாவின் நியரரே முதலானவர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆபிரிக்க சோஷலிசத்தின் தாக்கத்திற்கும், சோவியத் சோஷலிசத்தின் தாக்கத்திற்கும், மேற்கத்தேய சார்பு முதலாளித்துவத் தாக்கத்திற்கும் உட்பட்டதனால் அடிக்கடி இராணுவ ஆட்சிகளின் மூலம் சர்வாதிகார ஆட்சிக்கு உட்பட்டன.

இந்த வகையில் 1949ல் சோமாலிய நாட்டின் ஜனாதிபதி பதவியை ஏற்ற மொகமட் சியாட்பாரே கடுமையான சர்வாதிகார ஆட்சியை நடாத்தினார். இவருடைய சர்வாதிகார மேற்கத்தேய சார்பு பொம்மை ஆட்சிக்கு எதிராக ஆயுதப்போராட்டம் உருவெடுத்த தன்விளைவாக ஏறத்தாழ 14 ஆயுதக் குழுக்கள் இங்கு தோற்றம் பெற்றன. 22ஆண்டுகள் பாரே தனது தர்பாரை நடாத்தி இறுதியில் ஆயுதக் குழுக்களுக்கு எதிராக நின்று பிடிக்க முடியாமல் 1991 ஜனவரியில் பதவி இழந்தார். இன்றுவரை அந்நாடு போராளிகளின் பிடியிலேயே சிக்கி உள்ளது. அதனால் அது உலகில் 1991ற்கு பின் அங்கீகரிக்கப்படாத நாடாக விளங்குகின்றது.

இவ்வாறு யுத்தத்தை நடாத்துகின்ற 14 குழுக்களிலும் 9 குழுக்களே ஐ.நாடுகள் சபையினால் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படும் குழுக்களாக காணப்படுகின்றன. இவற்றுள் யுத்தப்பிரபு அலிமஹ்தி மொகமட்டின் குழுவும், இதற்கு எதிரான மொகமட்பரா அயிட்டியின் குழுவுமே இங்கு பலம் பெற்று உள்ளன. ஆயினும் இவற்றில் ஒரு குழுவாயினும் எந்த ஒரு பகுதியையும் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் சக்தியை பெற்றிருக்கவில்லை. தலைநகர் மொகடிஸ்லும் ஏனைய ஆறுமாகாணங்களிலும் இவர்களுக்கு இடையிலான மோதல்களினாலும் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனை விட பட்டினியில் இறந்தவர் தொகை 30,000 என மதிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது.

ஆரம்பத்தில் மொகமட்சியாட்பாரேயின் சர்வாதிகார ஆட்சிக்கும் மேற்குலக சார்புக்கும் எதிராக போராடிய குழுக்கள் இன்று தமக்கிடையே அதிகாரத்திற்காக போட்டியிடுகின்றன. ஆரம்பத்தில் சிறிதளவிலான தேசியத் தன்மை இவர்களிடம் காணப்பட்ட போதும் இப்போது அதிகாரத்தைக் கைப்பற்றுவதை தவிர்ந்த எந்தவிதமான இலட்சியங்களும் இவர்களுக்கு கிடையாது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி சில ஆயுதக் குழுக்களுக்கு அமெரிக்காவும், சிலவற்றிக்கு லிபியாவும் ஆயுதங்கள் வழங்குவதாக பேசப்படுகிறது. ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் பூட்ரோ காலி சோமாலியாவுக்கு விஜயம் செய்த போது சில ஆயுதக்குழுக்களை சேர்ந்தவர்கள் பூட்ரோ காலி வேண்டாம் அமெரிக்கப்படை வேண்டும் என கோஷமிட்டதில் இருந்து அமெரிக்கசார்பு நிலை புலப்படுகிறது.

ஏற்கனவே எதியோப்பியாவில் ஏரிற்றிய பிரச்சினையில் சோவியத்தின் தலையீட்டை பொறுக்கமுடியாமல் தவித்த அமெரிக்கா சோவியத்தின் வாபசோடு வறுமை, அமைதியின்மையைக் காரணம் எதியோப்பியாவை காட்டி தனது பிடியின் கீழ் கொண்டு வந்தது. இப்போது சோமாலியாவின் மக்களில் திடீரென பொழிந்த இரக்கத்தினால், 28000 படையினரை அனுப்பி தனது நீண்ட நாள் பகையாளியான லிபியாவை பயமுறுத்து வதற்கும் ஆபிரிக்காவில் தனது நிலையைப் பலப்படுத்துவதற்கும் சோமாலியாவில் இருந்து எதியோப்பியா வரையிலான நீண்ட கடற்கரையை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. மக்களுக்கு கப்பல்களில் உணவு, அனுப்புகின்ற போர்வையில் ஆபிரிக்க கிழக்கு கடற்கரை தளங்களுக்கு எவ்வளவோ யுத்த ஆயுதங்கள் நகர்த்தப்பட்டுள்ளதனை இதுவரை யாரும் அறியவில்லை.

ஆக, சோமாலிய மக்களின் பட்டினிக்கு உணவு என்பதைவிட, தனது இராணுவ மேலாண்மை முக்கியத்துவமானது அமெரிக்காவிற்கு. பட்டினி என்றும், மரணம் என்றும், அமைதியின்மை என்றும் நீலிக்கண்ணீர் வடிக்கும் அமெரிக்காவும், மேற்குலகும் மூன்றாம் உலகுமீது கருணை காட்டியது போதும். காலத்திற்குகாலம் போதைவஸ்துக்களையும், ஆயுதங்களையும் வளர்முக நாடுகளுக்கு அள்ளி வழங்குவதையும் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதையும் நிறுத்துவதே சோமாலியாவினதும், அதனைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளினதும் மீட்சிக்கு வழியாக அமையும்.

## சுடத்தெரியும் ...

தனது சகோதரர் சரீப்தீனை ஏற்கெனவே பறிகொடுத்திருந்தார்.

தாக்குதலை 'வெற்றிகரமாக' முடித்துச் சென்ற புலிகள் தமது காட்டு வழியில் விறகு வெட்டும் தொழிலாளியான யு.எல்.சாகுல் ஹமீதுவையும்(வாழைச்சேனை) விட்டு வைக்கவில்லை என்று அவரது சடலம் காட்டு வழியில் கண்டு பிடிக்கப்பட்ட போது தெரியவந்தது. இவையெல்லாம் எப்போதோ படித்த ஏதோவொரு நாவலில் வருகிற பின்வரும் வசனங்களை ஞாபகப்படுகிறது ''முதலில் அவன் எல்லோரையும் கொள்ளையடித்தான், நிலங்களை எல்லாம் பறிந்துக் கொண்டான். மக்களுடைய செல்வங்களை எல்லாம் அபகரித்து, யாவற்றையும் தனதாக்கிக் கொண்டான். தனக்கு எதிராய் இருந்தவர்கள் எல்லோரையும் கொன்றான். பிறகு கொள்ளையடிக்காதே என்றும், கொல்லாதே என்றும் சட்டங்கள் எழுதினான். ஆரம்பத்திலேயே அல்லவா அவன் இந்தச் சட்டங்களை எல்லாம் எழுதியிருக்க வேண்டும்''.

## இந்திய ...

ஒரு முறை பேர்சி இன்ரர்வியூவிற்குப் போகிறான். அம்மா வழியனுப்புகிறாள். வேலை இல்லாது வீடு வராதே என்றும் கூறுகிறாள். பேர்சி - வேலை கிடையாது, காசு கொடுத்துப் புறாக்களுக்கு குறுணல் விசிறி - வீடு திரும்புகிற போது அவன் அம்மா இல்லை. இறந்து கிடக்கிறாள்.

சினிமா முடிகிற போது நிமிர்கிறோம். நான் தான் பேர்சியா? பேர்சியின் சில இயல்புகளில் நானும் உண்டு; நீங்களும் உண்டு. இது தனிமனித அவசம் எனக் கூறி ஒதுக்கி வைக்க முடியாத சினிமா.

கமெரா அழகு. இசை நளினம். சினிமாவில் எங்கும் தலைகாட்டாத உத்திகளில்லாத நெறியாள்கை. இதனை ஒரு குறுநாவலாக எழுத முடிகிற அளவுக்கு நெறியாளர் சரியாகத் தொகுத்துள்ளார். இச்சினிமா முடிந்து போகிற போது பேர்சியும் அவன் அம்மாவும் வீடு வரை வருகிறார்கள். பேர்சியாக நடித்தவரூடாக இந்தியச் சினிமாவுக்கு இன்னொரு நஸ்ரூதீன் ஷா கிடைத்திருக்கிறார்.

நல்ல சினிமா.

**கிரிஷ் காசரவல்லியின் கடசிரார்த்தா.** (கன்னடம்)

அதிர்ந்து போனேன்.

வேதங்கள் முழங்குகிற அக்ரஹாரம். வேதப்பாடசாலை நடக்கிற வீடு. ஒரு சின்னப்பயல் கட்டுக்குடுமியுடன் அப்பாவுடன் அந்த வீட்டுக்கு வருகிறான். பிராமணியத்தின் சகல கட்டுப் பாடுகளும் நிலவுகிற இடம். சிறு வயதிலேயே விதவையான யமுனா அங்கு வாழ்கிறாள். சாதியில் தாழ்த்தப்பட்ட கிராமத்து வாத்தியாருடன் அவள் வைத்திருக்கிற இரகசிய உறவு கர்ப்பத்திற்குக் காரணமாகிறது. சின்னப் பயலுடனான அவளின் அன்பு மிகப் பிரத்தியேகமானது. யமுனா தற்கொலைக்குப் பலமுறை முயல்கிறாள். சமயங்களில் சின்னப்பையனால் காப்பாற்றப்படுகிறாள். தகப்பன் இல்லாத சமயத்தில் வாத்தியாரின் உதவியுடன் வேறிடம் சென்று கருச்சிதைவு செய்கிறாள். கிராமம் முழுவதும் விஷயம் பரவுகிறது. தகப்பனுக்கு இது தெரிகிறபோது, தகப்பன் அவள் இறந்ததாகக் கருமாதி செய்கிறார். அவள் பிறந்த வீட்டில் அவளுக்கு இடமில்லை. இனி அங்கு வேதப் பாடசாலையும் இல்லை. சின்னப் பையனின் தகப்பனார் வந்து அவனை அழைத்துச் செல்கிறார். வழியில் யமுனா மொட்டைத் தலையுடன் அழுத படி நிற்கிறாள். சின்னப் பயலோ அதிர்ந்து போகிறான். திரும்பித் திரும்பிப் பார்த்தபடி செல்கிறான்.

அதிர்ந்து போனேன். இருக்கையிலிருந்து எழு முடியவில்லை. வெள்ளித்திரையில் பிம்பங்களால்(images)உருவான படைப்பு. எமக்கும் அந்தப் படைப்புக்கும் மிடையில், எவ்வளவு சாதனங்கள்? கமெரா, எடிற்றிங், பிரதி, இசை, புரொஜெக்ரர், மின்சாரம், திரை இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் காலம். இவையாவற்றையும் மீறி நாம் அந்தப் படைப்புடன் இழைந்து போகிறோம். அழகான, பரிதாபமான யமுனாக்கா யாரு? அந்தச் சின்னப் பயல் எவன்? பலவீனம் நிறைந்த மற்றவர்கள். சாதி அமைப்பு இறுகக் கட்டிய பிராமணர்கள். இவர்களெல்லாம் யார்?
கிரிஷ் காசரவல்லிக்கு இது முதல் படம். 1977 இல் எடுக்கப் பட்ட கறுப்பு வெள்ளைப் படம். வண்ணப் படங்கள் யாவற்றையும் மிஞ்சி விடுகிறது. கறுப்பு வெள்ளையுடன் ஒரு உயிர் எம்முடன் உலாவுகிறது. மிகக் கட்டுப்பாடான பிராமணச் சமுதாயம். வேதப்பாடசாலைக்குள் இரகசியமாகப் பீடி குடிக்கிற, சீட்டு விளையாடுகிற சிறுவர்கள், அர்த்தமேயில்லாத சடங்குள், சம்பிரதாயங்கள். இறுக்கமான அமைப்பு. ஆனால் இவையெல்லாம் மீறப்படுகிற போது தனிமனிதன் சிதைகிறான். 1920 இல் நடக்கிற கதை இது. ஆனால் 1990 இலும் இது தான். இதே அமைப்புத் தான்.
இவை ஒரு புறம் இருக்கட்டும். அந்த மனித உறவுகளின் உன்னதத்தை எப்படிப் படம்பிடிக்க முடிந்தது? யமுனாவும் சின்னப் பையனும் எத்தகைய மானிடர்கள்? உயிர் துடிக்க வைக்கிற சினிமா- கடசிரார்த்தா.

கிரிஷ்காசரவல்லிக்கு உதவியாக ராமச்சந்திரனின் ஒளிப்பதிவும், பி,வி.காரந்தின் இசையும், உயிரை உலுப்புகிறது. இது இந்தியத் திரைப் பட வரலாற்றில் உச்சங்களில் ஒன்று எனக் கூறலாமா? கூறலாம்; மறுவார்த்தையின்றிக் கூறலாம்.

**அடூர் கோபால கிருஷ்ணனின் எலிபத்தாயம்.**(மலையாளம்)

சிதைந்து போகிற நிலப்பிரபுத்துவ அமைப்பு. அதில் ஒரு குடும்பம். அண்ணன், இரு தங்கைகள். அண்ணன்காரன் ஒரு -யாழ்ப்பாணத்து வழக்கில் சொல்வதானால்- 'வெங்காயம்'. எலிக்கு மிகப்பயந்தவன். ஒழுங்கையில் தேங்கி நிற்கும் சிறு வெள்ளம் கண்டு தன் பயணத்தை ஒத்திப் போடுகிறவன். தென்னங் கன்றினை மேய்கிற மாட்டினைத் துரத்துகிற தைரியம் இல்லாதவன். இரவு வீட்டின் வளவில் திருடன் புகுந்தது தெரிந்தும், திருடனின் திருட்டை அலட்சியம் செய்கிறவன். அவன் தங்கைகளில் மூத்தவள் பாவம் வயது நிறைந்த விட்டது. இன்னும் திருமணம் இல்லை. வீட்டின் பொறுப்பு அவள் தலையில் இளையவள் குதுகலமானவள். அவள் ஒரு சமயத்தில் இன்னொருவனுடன் ஓடிப்போகிறாள்.

உலகம் நிறைய மாறி விடுகிறது. இவர்கள் வீட்டின் மேலால் இருதடவைகள் இறக்கை அடிக்காத பெரும் பறவை பெரும் இரைச்சலுடன் பறந்து சென்றது. மூத்தவளுக்கு ஒரு முறை தாங்க முடியாத வயிற்று வலி. அவள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறாள். வீட்டின் அண்ணன் மாத்திரம் அந்த இருண்ட, தனிமையில் விடப்படுகிறான்.

பழைய சம்பிரதாயத்துக்குள்ளும், அந்தப் அழுங்குப் பிடிக்குள்ளும் அண்ணனும் மூத்தவளும் மாத்திரமே இறுகுகின்றனர். மூத்தவள் விரும்பியோ விரும்பாமலோ அவ்வாறு இருக்கின்றாள். அண்ணனுக்குப் அது திருப்திதான். தானே பொறிக்குள் அகப்பட்டுக் கொண்ட, எலியைப்போல- பழைய அமைப்பினுள் சிக்கிக் கொண்ட இவர்கள்.

எலிபத்தாயம் மிகச் சிறந்த திரைப் படமாக உருவாகின்றது. அடூர் கோபால கிருஷ்ணன் ஒவ்வொரு பிரேமையும் திட்டமிட்டு அமைத்துள்ளார். சரியாக நகர்த்தியுள்ளார். இந்தியாவின் மிகச் சிறந்த திரைப்படத்திற்கான விருதினை 1981 இல் இது பெற்றுள்ளது. தகுதியுள்ளது தான். மூன்று முறை இந்தியாவின் மிகச் சிறந்த என்பதற்கான விருதி

........................... 15

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு மீளாய்வை நோக்கி....

12

அன்ன பூரணா

## மாற்று அமைப்புக்கள் மீதான வன்முறை :

## தொடக்கி வைத்து கூட்டணியே

1975ம் ஆண்டு யூலையில் தமிழ் இளைஞர் பேரவையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தமிழ் இளைஞர் பேரவை முதலாவது தடவையாக சிதைவுற்றிருந்தது. இச்சிதைவின் காரணமாக தமிழ் இளைஞர் பேரவையை விட்டு வெளியேறியவர்கள் அதே ஆண்டு யூலை 14ம் திகதி தமிழ் ஈழ விடுதலை இயக்கம் எனும் அமைப்பை உருவாக்கினார்கள். இவ் அமைப்பிற்கு என ஒரு மத்திய குழுவும் தெரிவு செய்யப்பட்டது. த.முத்துக்குமாரசாமி, அ.வரதராஜப் பெருமாள், தங்க மகேந்திரன், சந்திரமோகன், சி.புஸ்பராஜா ஆகியோர் இதில் அங்கம் வகித்தனர். புஸ்பராஜா செயலாளராகவும், சந்திரமோகன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களை விட கோப்பாய்நந்தன், பிரான்சிஸ், மன்னார் கெமிலஸ், பருத்தித்துறை சந்திர மோகன், பருத்தித்துறை ஜெயம், ஜெயக்கொடி, நல்லையா, உரும்பிராய் ஜெகநாதன், ஜோதிலிங்கம், பாலநடராஜ ஐயர், பாலகுமார், அன்னலிங்கம் ஐயா, கென்ஸ் மோகன், பத்மநாபா, புஸ்பராணி, அங்கையற்கண்ணி ஆகியோர் முன்னணி உறுப்பினர்களாக விளங்கினர். சங்கானை அம்மா, குருநகர் குலமக்கா, நீதவான் தம்பித்துறை ஆகியோர் முக்கியமான ஆதரவாளர்களாக விளங்கினர்.

அமைப்பு உருவாக்கப்பட்டு ஒரு மாதம் முடிவதற்கிடையில் யாழ் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா புலிகளால் சுடப்பட்டு கொல்லப்பட்டார். தொடர்ந்து முன்னர் இளைஞர் பேரவையில் வெளிப்படையாக வேலை செய்த அனைவரும் கைது செய்யப்பட்டனர். இவ் அமைப்பிலிருந்தும் மத்திய குழுவிலிருந்த த.முத்துக்குமாரசாமி, அ.வரதராஜப்பெருமாள், சி.புஸ்பராஜா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதனால் மத்தியகுழுவில் எஞ்சியிருந்த சந்திரமோகனும், தங்க மகேந்திரனும் மட்டுமே மத்தியகுழுவின் சார்பில் அமைப்பின் வேலைகளை முன்னெடுக்க வேண்டியநிலைக்கு தள்ளப்பட்டார்கள். கொழும்பிலும், திருகோணமலையிலும் இருந்தபடியால் கைதுசெய்யப்படுவதிலிருந்தும் தவிர்க்கப்பட்ட இவர்கள், ஏனையவர்கள் கைதுசெய்யப்பட்டதும் யாழ்ப்பாணத்திற்கு வந்து முன்னணி உறுப்பினர்களோடு கலந்துரையாடி அமைப்பின் வேலைகளை பரவலாக்க ஆரம்பித்தனர். நிதி நெருக்கடிகளை சமாளிப்பதற்கு ஆதரவாளர்களிடம் நிதி சேகரித்தனர். அமைப்பின் வேலைகளை மையப்படுத்தி பரவலாக்குவதற்காக யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் ஓர் தலைமை செயலகத்தையும் திறந்தனர் தமிழ்த் தேசிய போராட்டத்தின் பிரதான ஆதரவாளராக இருந்த சங்கானை அம்மாவே தலைமைச்செயலகத்தை திறந்து வைத்தார். ஆனால் தலைமைச் செயலகம் இயங்கத் தொடங்கி ஓரிரு வாரங்களுக்கிடையிலேயே இவர்களுடைய அரசியல் வேலைகளை பொறுத்துக் கொள்ளாத கூட்டணியினரால் தலைமைச் செயலகம் உடைக்கப்பட்டது. அமைப்பின் பெயர்ப்பலகை அடித்து நொருக்கப்பட்டது. மத்திய குழு உறுப்பினர்களான சந்திர மோகனும், தங்க மகேந்திரனும் நையப்புடைக்கப்பட்டனர். தலைமைச் செயலகம் கூட்டணியினரால் அடித்து நொருக்கப்பட்டபின், செயலகம் இல்லாமலேயே இயங்குவதற்கு இவர்கள் முனைந்தார்கள். தங்கள் இயக்க நடவடிக்கைகளை பிரச்சாரப்படுத்துவதற்காக எரிமலை என்னும் பத்திரிகையையும் நடாத்தினார்கள். இவ் எரிமலை பத்திரிகையை நடாத்துவதில் பிரதானமாக முன்னின்றவர் பிரான்சிஸ் ஆவார். இவ் எரிமலை பத்திரிகையின் மூலம், தமிழ் ஈழம் என்ற பதத்தை முதன்முதலாக பயன்படுத்தினார்கள். வடக்கு கிழக்கை குறிப்பதற்கு தமிழ் ஈழம் என்ற பதத்தையும், தென் இலங்கையைக் குறிப்பதற்கு சிறீலங்கா என்ற பதத்தையும் பயன்படுத்தினாரார்கள். தமிழ் ஈழமக்களின் தலைவிதியை தமிழ் ஈழ மக்களே தீர்மானிக்கலாம் என்றும் சிறீலங்காவைச் சேர்ந்தவர்கள், தமிழ் ஈழமக்களின் தலைவிதியைத் தீர்மானிக்க முடியாது என்றும் வலியுறுத்தினார்கள். தமிழ் ஈழமக்களுக்கு ஏன் தனிநாடு அவசியம் என்பதையும் வலியுறுத்தியதோடு பாராளுமன்ற தேர்தல் முறையினால் தமிழ் ஈழத்தினை பெற்றுவிட முடியாது என்றும் கூறினார்கள்.

தேர்தல் முறை என்பது தமிழ் ஈழ மக்களை கூறு போடுவதற்கு உதவுமே தவிர, ஐக்கியப்படுத்துவதற்கு உதவாது என்றும் எனவே தமிழ் ஈழமக்கள் தேர்தலை புறக்கணித்து புரட்சிப்பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கூறினார்கள். பாதுகாப்பு நிதி நெருக்கடிகள் காரணமாக இரண்டு இதழ்களுடன் எரிமலை நிறுத்தப்பட்டது. எனினும் அவ் இரு இதழ்களும் தேசியப் போராட்டத்திற்கு ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

பத்திரிகையினால் மேற்கொள்ளப்படும் பிரச்சாரத்துக்கு புறம்பாக கிராமப்புறங்களில் கருத்தருங்குகளையும், அரசியல் வகுப்புகளையும் நடாத்தினார்கள். கருத்தரங்குகளை பரந்துபட்ட மக்களுக்கு தமது கருத்துகளை கூறும் வகையிலும், அரசியல் வகுப்புகளை முன்னனி தோழர்கள் அரசியல் அறிவைப் பெறும் வகையிலும் நடாத்தினார்கள். **அரசியல் வகுப்பு முறை என்ற ஒரு அரசியல் மயப்படுத்தும் முறையினை தமிழ்த் தேசியப் போராட்டத்தில் முதன் முதலாக தொடக்கி வைத்தவர்கள் இவர்களே யாவர்.** இதன் மூலம் தமிழர் கூட்டணியின் பிரமாண்டமான பொதுக்கூட்டம் என்ற பிரச்சார வடிவத்தை விலக்கி, கருத்தரங்குகள், வகுப்புகள் என்ற வகையில் மக்களை அணுக ஆரம்பித்தனர் இவ்வாறு இவர்கள் நேரடியாக மக்களை அணுகிய போது மக்கள், பல கேள்விகளை இவர்களிடம் கேட்க ஆரம்பித்தனர். அக்கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்காக இவர்களும் அரசியலை படிக்க ஆரம்பித்தார்கள். அதுவும் சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்கு செலுத்திய வடமராட்சி கிராமங்களுக்கு சென்ற போது, மாக்சீய நோக்கினாலான கேள்விகளுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருந்தனர். இதனால் அவற்றுக்கு பதில் கூறுவதற்காக மாக்சீய நூல்களையும் படிக்க ஆரம்பித்தனர். இந்த வகையில் தேசியப்போராட்டத்தினை இடதுசாரி கண்ணோட்டத்தில் அணுகுவதற்கு முதன்முதலாக முயற்சித்தவர்களும் இவர்களே யாவர்.

இவ்வாறு அரசியல் ரீதியாக முன்னெடுத்தவர்கள் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டும் என்று கருதி 1976 மே இல் முறையான வளர்ச்சி எதுவும் இன்றியே ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளில் இறங்கினார்கள். அதன் ஒரு நடவடிக்கையாக புலோலி வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட போது அமைப்பு அரச படையினரின் தீவிர தேடுதல் வேட்டைக்குள்ளானது. பெரும்பாலும் முன்னணியில் நின்றவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதனால் அவ்வாண்டு யூலை மாதத்துடன் அமைப்பின் பணிகள் அனைத்தும் நின்று போனது எனலாம்.

1977ம் ஆண்டு தேர்தலை ஒட்டி சிறையில் இருந்தவர்களில் முதலில் கைது செய்யப்பட்ட மத்திய குழு உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டனர். தொடர்ந்து பின்னர் கைது செய்யப்பட்டவர்களும் வழக்குத் தொடரப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு அமைப்பை சேர்ந்தவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டாலும், மத்திய குழு உறுப்பினர்களிடையேயும், முன்னணி உறுப்பினர்களிடையேயும் கருத்தொருமைப்பாடு இருக்கவில்லை. மத்திய குழுவிலிருந்த பெரும்பான்மையான அமைப்பின் உறுப்பினர்கள் வழக்குக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்ததால் கூட்டணியின் ஆதரவாளர்களாக இருந்து வழக்கு விடயங்களில் அவர்களின் உதவியை பெற விரும்பினார்கள். இதனை விரும்பாத வரதராஜப் பெருமாள், பிரான்சீஸ், குமரன் போன்றவர்கள் வழிகாட்டி எனும் பத்திரிகையை நடாத்த முயற்சித்து அதுவும் தோல்வியுறவே ஆரம்பத்தில் ஒதுங்கியும், பின்னர் பிரான்சிஸ், குமரன் போன்றவர்கள் EROS இயக்கத்திலும், வரதராஜப் பெருமாள் EPRLF இயக்கத்திலும் சேர்ந்தார்கள்.

> **"முன்னைய தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஸ்ரான்லிவீதி தலைமைச் செயலகத்தை கூட்டணியினர் அடித்து நொருக்கினர் பெயர்ப்பலகையையும் விட்டு வைக்கவில்லை மத்திய குழு உறுப்பினரான தங்க மகேந்திரனும் சந்திரமோகனும் நையப் புடைக்கப்பட்டனர்."**

தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்த குழுவினர். மத்திய குழு உறுப்பினரான முத்துக் குமாரசுவாமி தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்காக 1977 தேர்தல் பிரச்சாரத்திலும் ஈடுபட்டனர். த.முத்துக் குமாரசுவாமி சி.புஸ்பராஜா, சி.புஸ்பராணி, கோவை-நந்தன் அங்கையற்கண்ணி, ஜோதிலிங்கம் ஆகியோர் தேர்தல் கூட்டங்களிலும் உரையாற்றினர். முன்பு தேர்தலை புறக்கணித்த இவர்கள், 1977 ம் ஆண்டு தேர்தலை தமிழ் ஈழத்துக்கான சர்வஜனவாக்கெடுப்பு என்றும், இத்தேர்தலில் கூட்டணியினரை வெல்ல வைக்க வேண்டியது மக்களின் தார்மீகக்கடமை என்றும் பிரச்சாரம் செய்தனர். முன்னணித் தோழர்களில் பலர் பருத்திதுறைத் தொகுதியில் போட்டியிட்ட வீரவாகுவுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தார்கள். எனினும் பருத்தித்துறைத் தொகுதியில் தமிழர் கூட்டணி வேட்பாளர் துரைரத்தினத்தை வெல்லவைக்க வேண்டும் என்பதற்காக இவ்அமைப்பின் முன்னணி உறுப்பினர் பருத்தித்துறை ஜெயம் தனது தலைமையில் பருத்தித்துறை தொகுதி யெங்கும் ஒரு பாதயாத்திரையையே நடாத்தியிருந்தார். அரசியல் வரலாறுகளில் போராட்டங்கள், கோரிக்கைகள் வென்றெடுத்தல் என்பவற்றிற்காகவே பாதயாத்திரை நடாத்தப்படுவது வழக்கம். ஆனால் இங்கு தேர்தலுக்காகவே பாதயாத்திரையை நடாத்தியிருந்தார்கள். அன்றய நிலையில் தொகுதி நலன்கள் எவற்றையும் ஒழுங்காக கவனிக்காததால் மக்கள் மத்தியில் செல்வாக்கு அற்றவராகவே துரைரத்தினம் இருந்தார். அவர் தேர்தலில் வெல்வது கூட சந்தேகமாக பேசப்பட்டது. அதுவும் அவருக்கு போட்டியாக முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தரும் தொகுதி மக்களிடையே செல்வாக்கு மிக்க வருமான வீரவாகு போட்டியிட்ட போது இச்சந்தேகம் பெரிதும் வலுத்தது. உண்மையில் பருத்தித்துறை நகர் சார்ந்த பகுதிகளில் கூட்டணியினர் பிரச்சாரத்துக்கு போகவே வீரவாகுவின் ஆட்களால் தாக்கப்படுவோம் என அஞ்சியிருந்தனர். இந்நிலையில் தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் துரைரத்தினம் அல்ல முக்கிம் தமிழீழமே முக்கியம். இத்தேர்தல் தமிழ் ஈழத்துக்கான சர்வஜன வாக் கெடுப்பு, இதுவே கடைசித் தேர்தல், இனிமேல் தேர்தல் நடைபெறுவதாக இருந்தால் தமிழ் ஈழத்தில் தான் நடைபெறும் எனக்கூறி இத்தேர்தலில் மட்டும் கூட்டணிக்காக வாக்களிக்கும் படி மன்ருட்டமாக மக்களைக் கேட்டுக் கொண்டார்கள். உண்மையில் இத்தேர்தலில் துரைரத்தினம் வெல்வதற்கு இவர்களுடைய பிரச்சாரமே பெரும்பங்காற்றியிருந்தது. இவ்அமைப்பின் மத்திய குழு உறுப்பினரான சி.புஸ்பராஜா. உடுப்பிட்டித் தொகுதியில் இராஜலிங்கம் வெல்வதற்காக முன்னின்று உழைத்தார்.

தேர்தல் கூட்டங்களில் உரையாற்றும் போதும் ஆவேசமான பேச்சுக்களையே பேசினார்கள். இத்தேர்தலுக்கு பின் தமிழ் ஈழத்துக்கான போராட்டத்தை தமிழர் கூட்டணியினர் முன்னெடுக்கா விட்டால் சிறீலங்கா அரசுக்கெதிராக தூக்கப்படும் துப்பாக்கிகள் கூட்டணியினருக்கு எதிராக திருப்பப்படும் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் பேசியவர்கள் நடைமுறையில் செயற்படவில்லை புலிகளே பின்னர் செயற்படுத்தினார்கள்.

தேர்தலின் பின் அமைப்பு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட வழக்கில் இவர்கள் சார்பில் கூட்டணித் தலைவர். மு.சிவசிதம்பரமே தலைமையேற்று வழக்காடினார். தங்களால் வழக்கை வெல்ல முடியும் எனக் கூறிய போதும் அவர்களால் வெல்லமுடியவில்லை வழக்கின் தீர்ப்பில் நீதிமன்றம் அமைப்பு உறுப்பினர்களில் நான்கு பேருக்கு 10வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து ஏனையவர்களை விடுதலை செய்தது. நல்லையா, கோவைநந்தன், ஜெயக்கொடி, தங்க மகேந்திரன் என்பவர்களே அந்நால்வரும் ஆவர். இவர்களில் கோவைநந்தன், நல்லையா என்போர் ஒன்றாக நாட்டை விட்டு வெளியேறியமையினால் மற்றைய இருவருமே தண்டனையை அனுபவிக்க வேண்டியிருந்தது. பின்னர் அவர்கள் இருவரும் மட்டக்களப்பு சிறை உடைப்பின் போது தப்பி இந்தியாவுக்கு ஓடி E.P.R.L.F இயக்கத்துடன் சேர்ந்து கொண்டார்கள்.

காலப்போக்கில் புஸ்பராஜா, நந்தன், ஜோதிலிங்கம் பத்மநாபா ஜெகநாதன் போன்றவர்கள் E.P.R.L.F இயக்கத்திலும் பாலநடராஜா ஐயர், பாலகுமார், போன்றவர்கள் EROS இயக்கத்திலும் சேர்ந்த கொண்டனர். இவர்களில் பத்மநாபா EROS இயக்கத்தில் சேர்ந்து பின்னர் கருத்து முரண்பாடு காரணமாக அதிலிருந்து விலகி E.P.R.L.F ஐ உருவாக்கி அதன் செயல் அதிபர் ஆனார். பாலகுமார் EROS இன் நிர்வாகச் செயலாளர் ஆனார்.

அமைப்பில் இருந்து சந்திர மோகன் கென்ஸ்மோகன், நல்லையா, ஆகியோர் ஒதுங்கிக் கொண்டனர். மத்திய குழு உறுப்பினராக இருந்த சந்திரமோகன் பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகராக மாறினார்.

மத்திய குழு உறுப்பினராக இருந்த நீதவான் தம்பித்துரையின் மகன் த.முத்துக்குமாரசுவாமி பின்னர் TELO இயக்கத்தில் சேர்ந்து கொண்டார். இவரே அமைப்பின் பெயரை TELO இயக்கத்தினர் பயன்படுத்துவதற்கு அனுமதி கொடுத்தார். இப்பெயர் மாற்றத்தை தவிர இப்போது இருக்கின்ற TELO, இயக்கத்திற்கும் பழைய தமிழ் ஈழவிடுதலை இயக்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை.

இத்தமிழ் ஈழவிடுலை இயக்கம் சுமார் ஒரு வருடகாலமே உயிர் வாழ்ந்திருந்தது. எனினும் தமிழ் தேசியப் போராட்டத்தில் பலவகைகளில் முக்கிய மானதாக விளங்கியிருந்தது. அது எவ்வகையில் முக்கியமானதாக விளங்கியிருந்தது என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

நன்றி - நூலகத்திட்டம்



## சலுகைகள் ....

தலைமை எவ்விதம் தன்னை வேறுபடுத்திக் காட்டியிருக்கின்றது?

இறுதியில் மு.கா. தலைமை செய்திருப்பதெல்லாம் மரபுவழி முஸ்லீம் தலைமையைப் போன்று, பேரினவாதத்தின் பிடிக்குள் தன்னை ஒப்படைத்திருப்பதுதான்; இதன் மூலம் எந்த சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதோ **அந்தச் சமூகத்திற்குத் துரோகம் செய்திருப்பதுதான்.** ஒரு மந்திரிக்குரிய கதிரையின் மீது கொண்டுள்ள அதீத ஆர்வத்தின் காரணமாக, தனது சமூகத்தின் உரிமைகளை மு.கா. தலைமை முற்றாகவே ஒதுக்கிவிட்டது. இவ்விதத்தில், மரபுவழி முஸ்லீம் தலைமையும், மு.கா. தலைமையும் சாராம்சத்தில் ஒரே நாணயத்தின் இருபக்கங்களாகவே அமைந்திருக்கின்றன.

மு.கா. தலைமையின் பதவி மோகமும், அற்பச் சலுகைகளைக் குறியாகக் கொண்ட சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளும், வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் பெரும் நம்பிக்கையைப் பெற்றிருந்த ஒரு கட்சியின் சீரழிவுக்கும், சிதைவுக்கும் காரணமாகியுள்ளது. தலைமையின் இத்தகைய பண்புகளால், மு.கா. இன் ஸ்தாபகரான காத்தான்குடியைச் சேர்ந்த மர்ஹூம் அகமட் லெப்பை ஹாஜியாரிலிருந்து இன்றுவரை எத்தனை நல்ல சக்திகள் அக்கட்சியிலிருந்து விலக நேர்ந்திருக்கிறது! தனது இனத்தின் உரிமைகளை வென்று கொள்வதற்கான போராட்டத்தில் ஈடுபடும் ஒரு கட்சியானது, தன்னைத் தொடர்ச்சியாக வளர்க்கவும், பலப்படுத்தவுமே முயற்சிக்கும். ஆனால் மு.கா. ஐப் பொறுத்தவரையிலோ இது எதிர்மாறாக நடைபெறுகின்றது. உண்மையில் மு.கா. க்கு இன்று ஏற்பட்டிருக்கும் சீரழிவுக்கும், - சிதைவுக்குமான அடிப்படைக் காரணம், **வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சியை சரியாக முன்னெடுத்துச் செல்லாததே.** போராடும் திராணியற்ற, குறுகிய நோக்கங்கள் கொண்ட ஒரு தலைமையின் பிடிக்குள் இருக்கும்வரை மு.கா. க்கு ஏற்பட்டுள்ள இத்தகைய சீரழிவும் சிதைவும் தொடர்ந்தும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

வடக்கு-கிழக்கு முஸ்லீம்கள் விடயத்தில் மு.கா. தலைமை மீற முடியாத கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் பரம்பரை பரம்பரையாக பிரதான சிங்களக் கட்சிகளுக்குத் தாம் வழங்கி வந்த ஆதரவைக் கைவிட்டு, அக்கட்சிகள் மூலம் தமக்குக் கிடைக்கக் கூடிய(அற்பச்) சலுகைகளை நிராகரித்து, **தனியான முஸ்லீம் மாகாணத்திற்காக** தமது அமோக ஆதரவை அவர்கள் மு.கா. க்கு வழங்கியிருக்கிறார்கள். ஆனால் இப்போது, வடக்கையும், கிழக்கையும் தனித்தனியாகப் பிரிப்பதற்கு ஆதரவு வழங்கியதன் மூலம் தனியான முஸ்லீம் மாகாணசபைக் கோரிக்கையை மு.கா. தலைமை முற்றாகவே கைவிட்டு விட்டது; இதன் மூலம் தனக்கு வாக்களித்த வடக்கு-கிழக்கு முஸ்லீம்களுக்கு மாபெரும் துரோகத்தை இழைத்திருக்கிறது.

எனவே வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் பிரதிநிதிகளாகத் தம்மைக் கூறிக் கொள்வதற்கும், அவர்களின் பிரதிநிதிகளாகச் செயற்படுவதற்கும் உள்ள உரிமையை மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் இழந்து விட்டார்கள். தமக்கு வாக்களித்த 23,0000 முஸ்லீம்களின் அபிலாஷைகளுக்கும், உணர்வுகளுக்கும் விரோதமாக அமைந்துவிட்ட மு.கா. இன் குரல் இனிமேல் அம்முஸ்லீம்களின் சார்பாக பாராளுமன்றத்தில் ஒலிக்கும் தகுதியை இழந்து விட்டது. இந்நிலையில், **மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டும்!**

வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் தேசிய எழுச்சியை மு.கா. தலைமை கைவிட்ட போதும், அந்த எழுச்சி இன்னமும் நிலைத்திருக்கிறது; உயிர்த்துடிப்புடன் இயங்குகிறது. இத்தேசிய எழுச்சிக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் நேர்மையான, உறுதியான தலைமையே. உருவாகக் கூடிய இத்தகைய தலைமை இன்றைய மு.கா. தலைமையிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளட்டும்! சிங்கள, தமிழ் இனவாதங்களின் ஆதிக்கத்தில் இருந்து தனது சமூகத்திற்கு விடுதலை பெற்றுத்தர புத்துணர்ச்சியுடன் முன்வரட்டும்!

## எழுந்து வருகிற ....

தயாரற்ற இனவாத அரசின் போக்கும் மலையகத்தில் அப்படி ஒரு எழுச்சி வலிமையுடன் எழ நீண்ட நாளாகாது எனத் தெரிவிக்கின்றன.

இந்தப்புதிய தேசிய இயக்கம் மலையகத்தவர் என்பதை அடிப்படையாக கொண்டிருக்குமே தவிர இந்தியர் என்பதை அல்ல. இந்தியர் என்ற வகையில் எழுச்சி பெறுகின்ற தேசியம் ஓர் அந்நியத்தன்மையை ஏற்படுத்துகின்ற ஒன்றாக இருப்பதோடு மலையகத்தவர்களுக்கு பயன் படக்கூடியதாக இருக்காது என்பதும் அவை இலங்கையிலுள்ள அனைத்து இந்தியர்களினது நலன்களைப் பேண முன்வருகின்ற போது மலையகத்தில் ஓர் தனியான நிர்வாகப்பிரிவு தேவை என்பதை வலியுறுத்த முன்வராது என்பதும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைக்கும் தேசியம் இத்தகையதே என்பதும் மலையக மக்கள் அறிந்து வைத்திருக்கின்ற உண்மைகளாகும். இ.தொ.கா.கொழும்பில் உருவான கொழும்பு வாழ் இந்தியர் வர்த்தகருடைய நலன்களைப் பேணுகின்ற அமைப்பாக உள்ளமையினால் இந்தியத் தேசியத்தினூடாக கொழும்பு வாழ் இந்திய வர்த்தகர்களையே காப்பாற்ற முனைகின்றது. இதன் மூலம் மலையக மக்களை இந்தியவர்த்தகர்களின் நலன்களுக்கு பயன் படுத்த முற்படுகின்றதே தவிர அவர்களது நலன்களை அடிப்படையாகக் கொண்ட தேசியத்தை முன்னெடுக்க அது விரும்பவில்லை.

இவ்விடத்தில் மலையகத் தேசியத்தை முன்னெடுப்பதால் மலையகத்திற்கு வெளியே வாழ்கின்ற இந்தியவம்சாவழியினர் விடுபட்டுப் போகலாம் என்ற கேள்வி எழலாம். மலையகத்திற்கு வெளியே இருப்பவர்கள் வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் போன்றவர்கள் தான். எவ்வாறு வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற தமிழ் மக்களுக்காக வடக்கு கிழக்கு மக்கள் தமது தேசியத்தை விட்டுக் கொடுக்க முடியாதோ அதே போல் மலையகத்திற்கு வெளியே வாழும் இந்தியவம்சா வழியினருக்காக மலையகத்தினர் தேசியத்தை விட்டுக் கொடுக்க முடியாது என்பதும் உண்மையே.

## கண் தெரியா ....

ரியில் தயாரிப்பாக இருந்த போதிலும், பல இடங்களில் தமிழீழ கலை பண்பாட்டுக் கழகத்தின் தயாரிப்பு எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதுதான் இங்கு (யாழ்ப்பாணத்தில்) நடக்கிறது. ஒரு புறம் கலைஞன் சுதந்திரமானவன். அவன் எதனையும் படைக்கலாம். புலிகளுக்கெதிராக இல்லாவிட்டால் சரி. மறுபுறம் அவன் கலை விலைக்கு வாங்கப் படுகின்றது. அவன் ஏதோ ஒரு விலை செலுத்தியே ஆக வேண்டும். இதிலிருந்து எந்தக் கலைஞனும் விலகி நிற்க முடியாது.

நாடக அரங்கக் கல்லூரியின் மற்றைய தயாரிப்பு:"எந்தையும் தாயும்" குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பிரதி. குழந்தையும் சிவயோகனும் நெறியாளர்.

நாற்சார் வீடு. மூன்று பக்கமும் பார்வையாளர் அமர்ந்திருக்க, நடுமுற்றமும், ஒரு பக்கமும் அரங்கிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. கட்டிலில் கிழவர் படுத்திருக்கின்றார். அயலில் இன்னொரு குடும்பம். கிழவரின் 11 பிள்ளைகளும் வெளிநாட்டில். அயல் வீட்டுக்காரரே இவருக்கு உதவி. 11 பிள்ளைகளின் கடிதத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பது இவர் கடமை. யாழ்ப்பாணத்தின் சராசரிக் குடும்பத்தின் பிரதி பலிப்புத்தான் இது. வெளிநாட்டிலிருந்து கடிதம் வருவதற்கு நிறையத்தடைகள். பியோன் வருகிற சமயம் ஹெலி சுத்தினால் அன்று கடிதம் இல்லை. ஊரடங்குச் சட்டம் என்றால் பியோனைக் காணக் கிடைக்காது. கடிதம் வருவதற்குக் கொழும்பிலிருந்து கப்பல் வரவேண்டும். கப்பலின் பெயர் கூட கிழவனுக்கு நன்கு தெரியும். ஒவ்வொரு நாளும் கடிதத்தை எதிர்பார்த்துக் காத்திருத்தல் சீவியம். அன்று அவர் மகன் மோகனின் பிறந்த நாள். கடிதத்தை எதிர்பார்த்தே அன்று இறந்து போகிறார்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி
இருந்ததும் இந்நாடே"

என்பது தான் இந்நாடகத்தின் செய்தி. செய்தி மிகச் சுருக்கமாக, சரியாக வெளிக் கொனரப்பட்டுள்ளது. இது யதார்த்த வகை(Straight play) நாடகம் என்பதனால், நுணுக்கமான அம்சங்கள் கூட வெளிப்படுகிறது. கை நடுங்கியபடி கிழவன் காலுக்குள் செருப்பைத்திணிப்பது கூட நுணுக்கமாகக் காட்டப்படுகிறது. மூச்சுப்படக் கூடிய அளவில் நடிகர்கள் இருப்பதும் காரணம். கிழவனாக நடித்த பிரான்ஸிஸ் ஜெனத்தின் நடிப்பு மிகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது. அரங்க அனுபவம் எனும் வகையில் இந்நாடகம் மிக வெற்றிகரமான ஒரு படைப்பு எனலாம். இந்நாடகம் அதிகம் ரசிகர்களைச் சென்றடையவில்லை. அது இந்நாடகத்தின் நோக்கமுமல்ல. கச்சிதமாக அமைக்கப்பட்ட பிரதியும், நெறியாள்கையும் தன்னளவில் முழுப் பயன் பாட்டையும் எய்தியது.

இந்நாடகம் தொடர்பாக எழுகிற மற்றொரு கேள்வி இது தான்: 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி இருந்த' இந்நாட்டில்இருப்பதற்குச் சுதந்திரம் மறுக்கப்பட்டதனால், கொழும்பு லொட்ஜ்களிலும், வெளிநாட்டு அகதி முகாம்களிலும், புலிகளின் சிறைகளுக்குள்ளும் அல்லல்படுகின்ற ஆயிரக்கணக்கான இளைஞர்கள் என்ன செய்வார்கள்? **"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி இருந்த நாட்டில் நான் இருக்க முடியாதிருக்கிறதே"** எனக் கேட்கிறானே அவன். இவற்றுக்கான விடை இப்போதைக்கு அல்ல; எப்போதைக்கும் சொல்லுதல் இயலாது.

## உப்புக் கரிக்குது ...

எனக்கு அண்டு இரா முழுக்க நித்திர இல்ல. குளறிக் குளறி கண்ணில தண்ணியும் வத்திப் போச்சு.

புறகு கல்யாணம் முடிஞ்சதாம் எண்டு கேள்விப்பட்டன். என்ன செய்யலாம். நம்மட தலையெழுத்து இப்படியாக்கும் எனக் இருந்திட்டன். எனக்கெண்டா அவரு போனதுக்குப் புறகு ஒண்டும் செய்ய மனமில்ல. உம்மா சொல்லுவா சரியான இட்டுமகாரியெண்டு. எனக்கு ஒண்டுக்கும் மனதுக்க ராகத்து இல்லய.

வாப்பாவும் ஓடியாடித் திரிந்தாரு, எப்படியெண்டாலும் வேறு யார்ர கையிலயாவது ஒப்படைச்சுப் போடனும் எண்டு துடிச்சாரு. கடைசியில யாரோ இரண்டு பெஞ்சாதிமாரப் பறி கொடுத்தவராம்; நாலு பிள்ளையள் இருக்காம். என்னக் கல்யாணம் பண்ணிக்கிறன் எண்டும், வீடு வளவு தேவையில்லை எண்டும் சொல்லிப் போட்டாராம். எங்கட ஊர்தான் அவரு. ஆள நல்லாத் தெரியாது. சின்னப் புள்ளயாக இருக்கக்குள கண்டிருப்பன். என்ன மனசோ இந்த ஆம்புளயளுக்கு. பொஞ்சாதி மவுத்தாகி இரண்ட மாசமும் போயிருக்காதாம். மத்தக் கல்யாணத்தக்கு விசளம் அனுப்புறாரு. அவருக்குச் சோறு கறியாக்கத் தான் கல்யாணமாம்....வாப்பாவுக்கு நல்ல விருப்பம். உம்மாவும் ஓமெண்டு சொல்லிப்போட்டா... இப்ப எனக்குச் கல்யாணம்!

ஒரு மாதிரியாக குளிப்பாட்டு போட்டதுகள். இவளுகள் படுத்தினபாடு: உம்மா! எனக்கு ஒண்டும் சுரணயில்ல. எனக்குத்தான் நெனப்பெல்லாம் எங்கேயோ போயிட்டுதே. குளிரும் தெரியல்ல.

அவருதான் வாங்கி அனுப்பினதாம் புதுப்புடவை. நல்லாத்தான் இருக்கு. உடுக்கிறன் ஆண்டவனே! உம்மா வாறா. ஆயிஷா மாமி வாறா.

'ஊட்டுக்குள்ள கூட்டிக்கிட்டுப் போங்க' எண்டு மாமி சொல்றா நான் நடக்கிறேன் சல்மா பின்னால கைய வச்சிருக்கா.

"வலது கால முன்னுக்கு வச்சு ஊட்டுக்க நடந்துபோபுள்ள, இந்த வாழ்வையாவது, ஆண்டவன் சிறப்பாக்கட்டும்" மாமி சொல்றா. அல்லாவே! நானும் மனதுக்க நெனக்கிறன். வீட்டுக்குள்ள ஆயிஷா மாமிட வீட்டில் கிடந்த கட்டில் வந்து கிடக்கு. கட்டில்ல பாயும் வெள்ளயும் விரிச்சுக் கிடக்கு. புதுத்தலவாணி. நான் கட்டில் கால் பக்கம் போய் நிக்கிறன். மாமி போன கல்யாணத்துக்கும் இந்தக் கட்டிலத்தான் தந்தா. அவ நல்லவ. புள்ளையளும் இல்ல, வாப்பாட தங்கச்சிதான். அவட புரிஷனாரும் தங்கமான மனுஷன் தான்.

"லாயிலஹ இல்லல்லாஹ!"

ரோட்டில மாப்பிள்ள கூட்டியார சத்தம் கேட்குது. அவரு எப்படி இருப்பாரோ, நெஞ்சு படக்கு படக்குணுது!"

அந்தா.......ஊட்டுக்குள்ள கூட்டியாறாங்க. அவரு கட்டில்ல வந்து இருக்காரு. எனக்குப் பாக்க வெக்கமாய் இருக்கு.

"புள்ள இங்கால வாம்மா" மாமி கூப்பிடறா. கூப்பிட்டவ என்ன முன்னுக்கு இழுத்து விடறா. வாப்பா வாறாரு. 'அவரு' தாலிய கட்டுறாராக்கும். வாப்பா போயிட்டாரு.

என் கழுத்தில வெள்ளி மணிக் கோவையொண்டு மின்னுது. எல்லாம் முடிஞ்சு. எனக்குக் கிட்டப் போகவும் வெக்கமாயிருக்கு.

அவரக் கடைக்கண்ணால பாக்கிறன். தொப்பியக் கழற்றி கட்டில்ல வக்கிறாரு. அட அல்லாஹ்! இந்த மனுஷனுக்கு தலையெல்லாம் நரைச்சுப் போச்சு. எனக்கு கண்ணால தண்ணி வருகுது. வந்து வாய்க்குள்ள போயிட்டு போல, உப்புக் கரிக்குது!

## இந்திய ...

னைப் பெற்றுள்ள சாரதா மூத்தவளாக நடித்துள்ளார். நீண்ட நாட்கள் நினைவில் நிற்கக் கூடிய சினிமா இது.

பிரகாஷ் ஜாவின்
பரிநதி(இந்தி)

இது நம்ப முடியாத கதைதான். அம்புலிமாமாவில் வருவது போல நீதிக் கதை. தன்வினை தன்னைச் சுடும் என்கின்ற தத்துவம். ஆனால் படப்பிடிப்பு இருக்கிறதே, தொகுத்து வழங்கிய நெறியாள்கை இருக்கிறதே, நடிப்பு இருக்கிறதே, இவை இத்திரைப்படத்தைக் கொஞ்சம் உயரத்தில் வைக்கிறது.

நூற்றாண்டுக்கு முன்னர்- சனசஞ்சாரமற்ற பாலைவெளி. வெளிக்குள் வீடு. கணேஷ் எனும் குயவன், அவன் மனைவி, குர்ஜான், மகன் லக்ஸ்மன். அவ்வழியால் பயணப் படுகிற பயணிகள் இவர்கள் வீட்டில் தங்குவது உண்டு. அவ்வாறு தங்குகின்ற வியாபாரியும், அவர் மனைவியும், லக்ஸ்மனின் கெட்டித்தனத்தில் விருப்பம் கொண்டு, தம்முடன் அழைத்துச் செல்கின்றனர். அதன் பின் பாலை வெளியில், தனி வீட்டில் கணவன் மனைவி மாத்திரமே. அதன் பிறகு தான் இவர்கள் மனதில் பேய் குடிகொள்கிறது. இளந்தம்பதியர் பயணிகளாக இவர்கள் வீட்டில் தங்குகையில் அவர்கள் அணிந்திருந்த வைரமும் தங்கமும், அவர்கள் கணேஷால் கொல்லப்படுவதற்குக் காரணமாகின்றன.

நீண்ட நாட்களின் பின் பயணியாகத் தங்குகின்ற செல்வந்த இளைஞன் கொல்லப்படுகிறான். அடுத்த நாள் தான் தெரிகிறது கொல்லப்பட்டது தம் மகன் என்பது.

நாடோடிக் கதை-உயிர்த்துடிப்புகிற பாத்திரங்களால் அற்புதமாகச் சித்திரிக்கப்படுகிறது. அழகிய அந்த வீடும், சூழலும், அந்தக் காலமும் அழகுறப்படம் பிடிக்கப் பட்டுள்ளது. இளைஞன் கொடுப்புக்குள் சிரிக்கிற புன்சிரிப்பு, அவன் இறப்பை முன் கூட்டியே அறிவிக்கப்பட, சினிமா முடிகிறவரை, இருப்பை உலுப்புகிறது. மனதைப் பாதித்த ஒரு சினிமா எனலாம்.

மகேந்திரனின்
நெஞ்சத்தைக் கிள்ளாதே.
(தமிழ்)

தமிழின் மிக முக்கிய நெறியாளரான மகேந்திரனின் இயக்கத்தில் உருவாகி 1981 இல் வெளிவந்த திரைப்படம். தமிழ்ச் சினிமா வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் எனக் கூறத்தக்க 70களில் பிற்பகுதி- 80களின் முற்பகுதியில் உருவானது. கலாபூர்வமாகவும் (சிற்சில குறைகள் இருந்த போதிலும்) வர்த்தக நீதியாகவும் சில திரைப் படங்கள் வெற்றி பெற்றன. 'நெஞ்சத்தைக் கிள்ளாதே'யும் அவ்வகையில் சேர்வன.

மிகச் சாதாரணமான கதை. இது பற்றிக் குறிப்பிட ஒன்றுமில்லை. மிகக் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் கமெரா. அசோக்குமாரின் ஒளிப்பதிவு அழகை அள்ளிக் கொட்டுகிறது. இவ்வாறான சினிமாவுக்கு கமெராவும் சரிவர இயங்கவில்லை எனில், பார்க்கச் சகிக்க முடியாததாகி விடும். இசையும் பலம் சேர்க்கிறது. ஆனால் இது பத்தோடு பதினொன்றாகிப் போன தமிழ்ச் சினிமா.

இறுதியாக இதனைச் சொல்லலாம். தெரிவு செய்யப்பட்ட சினிமாக்கள் திருப்தியைத் தருவன அல்ல. இந்தியாவின் முக்கிய நெறியாளர் பலரை இத்திரைப்பட விழாவில் சந்திக்க முடியாமல் போய்விட்டது என்பதும் துயரம் தான்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS. PAPER IN SRI LANKA

# சரிநிகர்

## கிளாலி: "வள்ளத்தின் மீது டீசலை ஊற்றிக் கொளுத்தினார்கள்"

(கிளிநொச்சியிலிருந்து மகான் மற்றும் கொழும்பிலிருந்து சங்கரன்)

இம்முறை பனி அதிகம் பெய்கிறது. குளிரில் விறைத்தபடி இரு பக்கமும் பயணிகள் காத்திருக்கிறார்கள். குடாநாட்டுக்குள் செல்வோரும் வெளியேறுவோருமே அவர்கள். இரு வாரங்களாக இவ்வாறுதான். கடல் ஏரியில் கடற்படையினர் குண்டுகளை ஏவுவதனால் பயணிகளில் பத்துப்பேர் வரை இறப்பதுண்டு. புலிகள் அல்ல.

இம்முறை கொஞ்சம் அதிகம். 50 பேருக்கு மேல் இறந்திருக்கிறார்கள். கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு இதுவரை வந்த உடல்கள் 50 ஆகிவிட்டது.

சைப்பதம் பார்த்தன. பரமேஸ்வரிக்கு இது இறுதிக் கணம் ''நான் போகிறன்'' என்று செல்லத்துரையின் மடியில் உயிரை விட்டார்.

தில்லையம்பல நாதன் மகேஸ்வரி, அவர் மகள் நளினி. தாயும் மகளுமாக பயணித்தனர். கடற்படையினர் எழுந்து நிற்கச் சொன்ன போதே அவர்கள் அஞ்சி விட்டனர். தாயும் மகளும் ஒருவரை ஒருவர் பயத்துடன் கட்டிப் பிடித்து நிற்கவே சூடும் விழுந்தது. ஒரு குண்டு தான் இருவரையும் துளைத்தது. கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருந்த உடல்களைக் கொண்டு வந்து போட்ட போதும் தாயினதும் மகளினதும் அரவணைத்த படி

அதிர்ந்தன. 1985இல் நெடுந்தீவிலிருந்து வந்து குமுதினி படகில் வந்த அனைவரும் கடற்படையினரால் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர். சுமார் 40 பேர் இதில் இருந்தனர். 1986 இல் குருநகரிலிருந்து மண்டை தீவுக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் அனைவரும் கடற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டனர். சுமார் முப்பது பேர் இவ்வாறு இறந்தனர். இது தொடராக நிகழ்கின்றது.

துன்பங்களும், துயரங்களும் தொடர் கதையாகிக் கொண்டிருக்கின்ற போது, சிறீலங்காவின் பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான டி.பி.விஜேதுங்கா 'கிளிநொச்சி



வருடம் பிறந்த அன்று புறப்படுவது சரியல்ல. அடுத்த நாள்- சனவரி மாதம் 2ம் திகதி சனிக்கிழமை அதிகமானோர் பயணம் செய்கிறார்கள். இடையிடை புலிகள் பயணிகளுக்கு பாதுகாப்புக் கொடுத்து அக்கரை சேர்ப்பதுண்டு. அன்று ஏனோ புலிகளின் பாதுகாப்பு இல்லை.

மனதில் அச்சம் குடிகொள்ளவே ஒன்றன் பின் ஒன்றாக ஆறு படகுகளில் பயணிகள் புறப்பட்டனர். படகோட்டியையும் தெய்வத்தையும் மட்டும் நம்பிய பயணம். பனிக் குளிர் தெரியவில்லை.

திடீரெனக் கடற்படைப்படகு அருகில் வந்தது. பயணிகள் மீது 'ரோர்ச்' வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. எல்லாரையும் எழுந்து நிற்கச் சொன்னார்கள். யாவருக்கும் தெரிந்து விட்டது தங்கள் கடைசிக் கணம் இது வென்று. பனிக்குளிரிலும் வியர்க்கத் தொடங்கியது. இயந்திரத்துப்பாக்கி சடசடவென உறுமி உறுமி ஒலித்தது.

கடலினுள் விழுந்தவர்களும், படகினுள் விழுந்தவரும் எனக் கணக்குத் தெரியவில்லை. செல்லத்துரை(68), தன் மனைவி பரமேஸ்வரி(42)யுடன் பயணித்திருந்தார். சூடு விழத்தொடங்க மனைவியைக் காப்பாற்ற மனைவியில் மேல் படுத்தார். அவரையும் மீறி குண்டுகள் பரமேஸ்வரியின் நெஞ்

யான உடல்களே கிடைத்தன.

கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றும் ஆறுமுகம் தர்மராசா(51) அருமையான மனுஷன். கடமையில் கவனம்; கண்ணியம். அவரது மென்மையான பேச்சு, போக்கு எல்லாருக்கும் பிடித்தமானது 1993ஆம் ஆண்டிற்கான புதிய கடமைகளைப் பொறுப்பேற்க விரைந்தார். கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரியான என். சத்தியசீலனும் அவ்வாறே.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் காயம் பட்டிருப்பவர்களைக் காணச் சென்ற போது அவர்கள் சொல்லும் கதை இன்னும் சோகமானது. மனைவியை மடியில் பறிகொடுத்த செல்லத்துரை கதறுகிறார். ''நான் என்ன செய்தேன்?'' காயம் பட்டவர்களின் சாட்சியம் இதுதான்: கடற்படை ஒருவள்ளத்தை டீசல் ஊற்றிக் கொளுத்தினார்கள். அதில் இருந்த அவ்வளவு பேரும் எரிந்து கருகிப் போயினர்.

இறந்த உடல்கள் இன்னமும் மிதந்து வந்து கொண்டிருக்கின்றன. வெட்டப்பட்ட உடல்கள் மிதக்கின்றன. மிகச் சின்னக் கால்கள் கூட.

முன்னரும் இவ்வாறான சோகங்கள் தமிழ்மக்களின் நெஞ்சில்

யில் பொது மக்கள் எவரும் சுட்டுக் கொல்லப்படவில்லை' என்கிறார். இலங்கை வானொலி மக்கள் குரலில் ''கல்வி அதிகாரி தர்மராசா ஒரு புலி ஆதரவாளன்'' என்கிறது. அத்தடன் கொல்லப்பட்டவர்கள் புலிகளின் ஆதரவாளர், புலிகள் என்கிறது. குமுதினி படகிலும், மண்டைதீவிலும் மக்கள் கொல்லப்பட்ட போது இதே மக்கள் குரல் குழுவினர் வேறு அமைப்புகளிலிருந்து என்ன சொன்னார்கள்; அல்லது என்ன நினைத்தார்கள்? இப்படியானவர்களைத் தமிழ் மக்கள் மன்னித்தாலும், காலம் மன்னிக்காது.

''கிளாலி கடலேரிப்பகுதி முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது'' என ஜனாதிபதி இவ்வளவு தமிழ் மக்களும் இறந்ததன் பிறகு அறிவிக்கிறார். ஆனையிறவுப் பாதையைப்பயன் படுத்தச் சொல்கிறது அரசு. இல்லையென்கிறது புலி. கிளாலி கடலேரிப் பகுதி குறித்து முன்னர் அரசு செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் பயணம் செய்யும் மக்கள் கொல்லப்படுவார்கள் என்று கூறியதுண்டா? ஆமெனில் எப்போது? எப்படியோ, இது அரசியல் பிரச்சினை; இராணுவப் பிரச்சினை. அப்பட்டமாக தமிழ் மக்களை அழித்தொழிக்கிற பிரச்சினை.

## அவங்களைப் பற்றி என்ன கதை ?

கிளாலி சம்பவத்தில் மனைவி........ பறிகொடுத்து முதுகிலும், வயிற்றிலும், காலிலும் சூட்டுக் காயங்களுக்குள்ளான...... என்பவரை சரிநிகர் செய்தியாளர் கொழும்பின் ஆஸ்பத்திரி ஒன்றில் சந்தித்து உரையாடினார். அவருடனான உரையாடலின் முக்கியமான பகுதிகள் கீழே:

''சனிக்கிழமை பின்னேரம் பொழுது கருகிக் கொண்டு வருகிறது. நேரம் ஐந்தரை, ஐந்தே முக்கால் இருக்கும். நானும் , எனது மனைவியுமாக கிளாலிக் கடலைக் கடப்பதற்காக புறப்படத் தயாராக நின்ற படகில் ஏறினோம். எங்களது படகில் ஆண்களும் பெண்களுமாக இருபது பேர் இருந்தோம். எல்லாப் படகுகளிலும் இப்படித் தான். இருபது பேருக்கு மேல் ஏற்ற பெடியள் அனுமதிப்பதில்லை. இரவில் தான் கடலைக் கடப்பது வழக்கம். ஏறத்தாழ நாலு, நாலரை மணித்தியாலங்கள் எடுக்கும். அங்கிருந்து புறப்பட்ட படகுகளில் எங்களது படகு ஐந்தாவதாக இருக்க வேண்டும். படகு புறப்பட்டது. கும்மிருட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளிகள். கூதலடித்தது. கிட்டத்தட்ட ஏழேகால், அல்லது ஏழரை இருக்கும் என்று நினைக்கிறேன். படகோட்டி திடீரென்று கத்தினான். ''ஐயோ நிக்கிறாங்கள், நேவிக்காரர் நிக்கிறாங்கள்'' நெஞ்சு திக்குத் திக்கென்று அடித்தது.

அன்றைக்கென பெடியளும் பாதுகாப்புக்கு வரவில்லை.

நேவிக்காரர் ஒன்றும் செய்துவிடக் கூடாதென ஊரிலுள்ள கோவிலுக்கெல்லாம் நேர்த்தி வைத்தேன். கொஞ்ச தூரத்தில் கடலுக்குள் வெளிச்சமாய் ஏதோ எரிந்து கொண்டிருந்தது. எமக்கு முன்னால் போன படகாயிருக்க வேணும். நேவிக் கப்பலிலிருந்து ''பரா'' வெளிச்சம் போட்டுக் கொண்டு சுடத் தொடங்கினார்கள். படகையே பிளக்குமாப் போல் பெரிய சத்தத்துடன் ஏதோ வந்து அருகில் விழுந்து வெடித்தது.

அது தண்ணீரை படகுள் இறைத்தது. நாங்கள் படகுக்குள் விழுந்து படுத்தோம். நான் மனைவிக்கு மேலே எதுவும் படாதவாறு படுத்துக் கொண்டேன்.

எமது படகிலிருந்த எல்லோரும் 'அரோகரா அரோகரா' என்று பயமிகுதியால் முனகிக் கொண்டிருந்தார்கள்.

நேவிக் கப்பல் எங்களுக்கு கிட்ட வந்து விட்டது. அதிலிருந்து யாரோ கண்களைக் கூசுமாப் போல் ரோர்ச் அடித்து எங்களைப் பார்த்தார்கள்.

ரோர்ச் நூர்ந்தது. இருள்.

அடுத்தது என்ன ? என்பதற்கிடையில் துப்பாக்கி சடசடவென்று வெடிக்கும் சத்தம்.

''நான் போறன்'' என்றபடி என்னுடைய கையை இறுகப் பற்றிப் பிடித்தாள் என்னுடைய மனைவி.

மனைவியின் இடுப்புப் பகுதியில் இரத்தம் பிசுபிசுத்தது. துப்பாக்கிக் குண்டு இடுப்பை துளைத்துச் சென்றிருந்தது.

படகிற்குள் ஒரே மரண ஓலம்.

எனது முதுகில் என்னவோ கொண்டு தாக்கினாற் போல வலித்தது.

எத்தனை பேர் செத்தார்கள், பிழைத்தார்கள், கடலுள் விழுந்தார்கள் என்று யாருக்கும் தெரியாது.

எமது படகின் என்ஜினைக் கழட்டி கடலில் போட்டார்கள் படையினர். டீசலை எடுத்து எமக்கு மேல் ஊற்றினார்கள். ஏனோ நெருப்பை பற்ற வைக்கவில்லை. எம்முடைய படகையும், இன்னும் இரு படகுகளையும் தம்முடைய கப்பலுடன் கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள். மற்றைய இரு படகுகளிலும் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிரியைகள். சிறிது தூரம் சென்றதும் அவர்களுடைய கப்பலுடன் கட்டியிருந்த கயிறு அவிழ்ந்து போயிருக்க வேண்டும். எமது படகு பின் தங்கத் தொடங்கியது. படகு தன்னுடைய பாட்டிற்கு எங்கோ அடித்துச் செல்லப்பட்டது. நீண்ட நேரத்திற்குப் பிறகு எங்கோ கரையொதுங்கியது. எனது மனைவி மடியில் பிணமாய் கிடந்தாள்.

* * * * * *

காயப்பட்டவர்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டோம். மின்சாரம் இல்லை. லாம்பு வெளிச்சத்தில் எனது காலிற்கு தையல் போட்டார்கள். கால் பாதத்தையும் குண்டு துளைத்திருந்தது. ஏற்கனவே கொழும்பிலுள்ள மகளுக்கு அறிவித்திருந்தேன். கிளிநொச்சியிலேயே மனைவியின் மரணச்சடங்கினை நடாத்தி முடித்து விட்டு மகளுடன் கொழும்புக்கு வந்தேன்.

ஆஸ்பத்திரியில் அவருக்கு உதவியாக நிற்கும் அவரது மகள் தொடர்கிறாள். அம்மாவையும் பறிகொடுத்து விட்டு, அப்பாவும் காயங்களுடனும் கஷ்டத்துடனும் I.C.R.C வாகனத்தில் கொழும்புக்கு வந்து கொண்டிருக்கிறோம். I.C.R.C வாகனத்தைக்கூட படையினர் விட்டு வைக்கவில்லை. அங்குலம் அங்குலமாகச் சோதித்தார்கள். எங்களுடைய பாக்கை பிரித்து போட்டார்கள். நான் திரும்பவும் அவற்றை அடுக்கி கொண்டிருந்தேன். இயக்க பெடியளைப் போல நாலைந்து பேர் அங்காலை நின்றார்கள். ஒருவன் வந்து கேட்டான், என்ன நடந்தது என்று. நான் கிளாலியில் அம்மாவை நேவிக்காரர் சுட்டு விட்டார்கள் என்றும், அப்பாவுக்கு சூட்டுக் காயங்கள் கொழும்பிற்கு கொண்டு போகிறேன் என்றேன். அவன்கள் சொன்னாங்கள் ''உங்களுடை ஆக்களே உங்களைச் சுட்டு இங்கை அனுப்பிப் போட்டு, நேவி சுட்டதென்று பொய் சொல்லுறாங்கள். நீங்களும் அதையே சொல்லுங்கோ'' என்றான்.

எனக்கு அழுகையும், கோபமுமாக வந்தது. அந்த இடத்திலேயே அவன்களைக் கழுத்தை நெரிச்சுக் கொல்ல வேணும் போல இருந்தது.

தகப்பனார் குறுக்கிட்டார். 'அவன்களை விடு. அதைப்பற்றி ஏன் கவலைப்படுகிறாய். அவன்கள் தான் துரோகிகளாய்ப் போனான்களே. காட்டிக் கொடுக்கிற ஆட்களாகப் போனார்களே. அவங்களைப் பற்றி ஏன் கதைக்கிறாய்' என்ருர் அவர் வேதனையுடன் நெளிந்தபடி. வெறுப்பு, கவலை, வெப்பிசாரம், கோபம் அனைத்தும் கலந்த ஒரு பாவம் அவர் முகத்தில் தெரிந்தது.

கொழும்புக்கு கொண்டு வந்ததும் முதுகு வலிக்கிறது. நேவிக்காரர் அடிச்சிருக்கிறாங்கள் போலை என்ருர் அப்பா. மறுநாள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து எக்ஸ்ரே எடுபித்துப் பார்த்தோம். முதுகில் மூன்று ஷெல் துண்டுகள் இருந்தது. ஒப்பிரேஷன் செய்து நேற்றைக்குத் தான் எடுத்தது. இன்னமும் வயிற்றிலும், காலிலும் இருக்கிறது. இன்னமும் இரண்டு நாளைக்குப் பிறகு தான் எடுக்க வேணும் என்றார் மகள்.

அவவும் போனதுக்குப் பிறகு இனி என்னத்துக்கு இதெல்லாம்? என்றபடி விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டார் அவர்.

சரிநிகர் மாத இதழ் இல. 06 அலோசாலை, கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில்
வெளியிடுபவர் :சபாலகிருஷ்ணன். அச்சுப்பதிவு:334, காலி வீதி, இரத்மலானை நவமக அச்சகம்.